பக்கங்கள் : 22+VIII=30

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2036 மாசி 08 ஞாயிற்றுக்கிழமை (20.02.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :86

## அமெரிக்காவின் நவீன கப்பல் நேற்று இலங்கைக் கடற்படையுடன் இணைவு

வாஷிங்ரன்,பெப்.20

இலங்கைக் கடற்படைக்குப் புதிதாகக் கொள்வனவு செய்யப்பட்டுள்ள அமெரிக்கக் கடற்படைக் கப்பல் நேற்று இலங்கை நோக்கிப் புறப்பட்டது.


இந்தக் கப்பலை இலங்கையிடம் கையளிக்கும் நிகழ்வு சமய நிகழ்ச்சிகளுடன் நேற்று இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் அமெரிக்க ராஜாங்க மற்றும் பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகள், அமெரிக்கக் கடற்படை அதிகாரிகள், அமெரிக்க கரையோரப் பாதுகாப்பு அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

அமெரிக்காவுக்கான இலங்கைத் தூதர் ஆர்.சுபசிங்க, கடற்படை அதிகாரி ரியர் அட்மிரல் வசந்த கரணகொட, இராணுவ அதிகாரி பிரிகேடியர் றொஹான் ஜெயசிங்க ஆகியோரும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

அமெரிக்க கரையோரப் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த 'ஹெறாக்கியஸ்' கப்பல், பி 621 எனப் பெயர் மாற்றப்பட்டு இலங்கைக் கடற்படைக்கு வழங்கப்பட்டுள்ளது. (3)

நல்லெண்ண விஜயத்தை மேற்கொண்டு அமெரிக்காவின் கடற்படைக் கப்பல் நேற்று கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்தது. அக்கப்பலையே இங்கே காண்கிறீர்கள்.



# குடாநாட்டில் 24ஆம் திகதி

# மாபெரும் மக்கள் பேரணி!

## யுத்தநிறுத்தத்தின் 3 ஆண்டு நிறைவில் சர்வதேச கவனத்தை ஈர்ப்பதற்காக

யாழ்ப்பாணம்,பெப்ரவரி 20

**யாழ்ப்பாணத்தில் எதிர்வரும் 24ஆம் திகதி வியாழக்கிழமை மிகப்பிரமாண்டமான மக்கள் பேரணி ஒன்றை நடத்துவதற்குப் பொது அமைப்புக்கள் தயாராகின்றன.**

**விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்கும் இடையே புரிந்துணர்வு உடன்படிக்கை ஏற்பட்டு மூன்று ஆண்டுகள் நிறைவு பெறுவதை ஒட்டி இந்தப் பேரணி நடத்தப்படவுள்ளது.**

**யுத்தநிறுத்தமும் சமாதான முயற்சிகளும் மிகுந்த நெருக்கடிக்குள் சிக்கியிருக்கும் சூழ்நிலையில் தமிழர் நிலைப்பாட்டின் மீது சர்வதேச சமூகத்தின் கவனத்தை ஈர்ப்பதற்காக இந்தப் பேரணியைச் சகல பொது அமைப்புகளும் கூட்டாக இணைந்து முன்னெடுக்கின்றன.**

சுமார் 50 ஆயிரம் பேரைத் திரட்டி மிகப் பிரமாண்டமான வகையில் பேரணியை நடத்துவதற்கு ஒழுங்குகள் செய்யப்படுவதாகப் பொது அமைப்புகளின் ஒன்றியப் பிரதிநிதி ஒருவர் தகவல் வெளியிட்டார்.

யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்துடன் இணைந்து குடாநாட்டைச் சேர்ந்த சகல பொது அமைப்புகளும் இந்தப் பேரணியில் பங்கேற்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசுப் படைகள் மேற்கொண்டுவந்த யுத்த நிறுத்த மீறல்களின் உச்சமாக புலிகளின் கிழக்கு அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் உட்பட அறுவர் படுகொலை செய்யப்பட்ட சம்ப

(18ஆம் பக்கம் பார்க்க)

## காயமடைந்த போராளி நேற்று மட்டக்களப்புக்கு

மட்டக்களப்பு,பெப்.20

மட்டு. - அம்பாறை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தில் காயமடைந்து கொழும்பு ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வந்த விநோதன் என்ற போராளி நேற்று மட்டக்

(18ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை - இந்திய பக்தர்கள் கச்சதீவில் வந்து திரண்டனர்

நெடுந்தீவு,பெப்.20

இன்று நடைபெறும் கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய வருடாந்த உற்சவத்தில் கலந்துகொள்வதற்காக வழமையைவிட பெரும் எண்ணிக்கையான பக்தர்கள் இந்தியாவில் இருந்து இம்முறை கச்சதீவில் திரண்டுள்ளனர்.

நேற்றுக் காலையில் இருந்து ஆண்கள், பெண்கள், சிறுவர்கள் அடங்கலாக பெரும் எண்ணிக்கையான பக்தர்கள் படகுகளில் கச்சதீவை வந்தடைந்துள்ளனர்.

தமிழகத்தில் இருந்து செய்தியாளர்கள், படப்

(18ஆம் பக்கம் பார்க்க)

## உடன்படிக்கையின் 3ஆண்டு பூர்த்தி: சொல்ஹெய்ம் கொழும்பு வருகின்றார்

கிளிநொச்சி,பெப்.20

நாளை கொழும்புக்கு வருகை தரும் நோர்வேயின் விசேட ஆலோசகர் எரிக் சொல்ஹெய்ம் செவ்வாயன்று கிளிநொச்சியில் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்திக்கிறார்.

சுனாமி அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட மக்களின் மறுவாழ்வுப் பணிகளை முன்னெடுக்க அரசு - புலிகள் இணைந்து உருவாக்க உத்தேசிக்கப்பட்டுள்ள கட்டமைப்புக் குறித்தும்- அதற்கான முயற்சிகளின் முன்னேற்றம்

(18ஆம் பக்கம் பார்க்க)

### புலம்பெயர்ந்த தமிழ்மக்கள் அனுப்பிய

## சுனாமி நிவாரணப் பொருள்கள் கொழும்புத் துறைமுகத்தில் தேக்கம்

கொழும்பு,பெப்.20

சுனாமி ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்கு மக்களுக்கு வழங்கவென புலம்பெயர்ந்த தமிழர்களால் அனுப்பப்பட்ட உதவிப் பொருள்கள் அடங்கிய 50 கொள்கலன்கள் கொழும்புத் துறைமுகத்தில் தேங்கிக் கிடக்கின்றன.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் கொழும்பு இணைப்பாளர் சந்துரு பரராஜசிங்கம் இத்தக

(18ஆம் பக்கம் பார்க்க)

## உள்ளே சூரியகாந்தியில்

- 'வான' வேடிக்கை: - புலிகளின் வான் படை பற்றிய ஒரு பார்வை.
- சுனாமி: ஆவணக் காப்பகம் வேண்டும்...
- பத்து நாள்கள் சுடுகாட்டில் கிடந்து சடலங்களைத் தகனம் செய்த தக்கார்... - உலக அனர்த்தங்கள் பற்றிய தொடர்.
- ஜே.வி.பியுடன் கூட்டு வைத்து மீண்டும் ஐ.தே.க. ஆட்சி அமைக்குமா? - அரசியல்
- அராலித்துறை கண்ணித் தாக்குதலின் அவிழாத மர்ம முடிச்சுக்கள்...
- சிதையும் சின்னங்கள்: - நெடுந்தீவின் வரலாற்றுச் சின்னங்கள் பற்றிய பார்வை.

இவற்றுடன் வழமையான அம்சங்களும்...

## இந்தோனேஷியாவில் மீண்டும் நிலநடுக்கம்

ஜகார்த்தா,பெப்.20

இந்தோனேஷியாவில் நேற்று மீண்டும் பலமான நிலநடுக்கம் ஏற்பட்டது.

இந்தோனேஷியாவின் சுலவாஸி பிராந்தியத்திலேயே இந்த நிலநடுக்கம் உணரப்பட்டது.

ரிச்சர் அளவில் 6.5 எனப் பதிவாகிய இந்த நில நடுக்கத்தால் பாரிய சேதங்கள் ஏற்படவில்லை. எனினும், மீண்டும் சுனாமி ஆழிப்

(18ஆம் பக்கம் பார்க்க)

## 20 சிப்பாய்கள் ஆஸ்பத்திரியில்

வவுனியா,பெப்.20

வவுனியா ஆஸ்பத்திரி அவசர சிகிச்சைப் பிரிவில் 20 வரையிலான இராணுவச் சிப்பாய்கள் நேற்றிரவு 10 மணியளவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

புதிதாகச் சேர்க்கப்பட்டுப் பயிற்சி அளிக்கப்பட்டு வந்த இவர்களுக்கு உணவில் ஏற்பட்ட கோளாறு காரணமாகவே இந்த நிலை ஏற்பட்டு இருக்கலாம் எனக் கூறப்படுகின்றது.

இந்தச் சிப்பாய்கள் அதிகளவில் வாந்தி எடுத்ததன் காரணமாகவே ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார். (3-164)

## காவலரண் மீது சூடு; புலிகள் மறுப்பு

கொழும்பு,பெப்.20

முகமாலையில் உள்ள இராணுவத்தின் முன்னணிக்காவலரண் ஒன்றின் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக படைத்தரப்பு குற்றஞ்சாட்டி இருக்கிறது.

இந்தச் சம்பவம் தொடர்பாகப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் முறைப்பாடு செய்யப்பட்டிருப்பதாக இராணுவப்பேச்சாளர் பிரிகேடியர் தயா ரத்னாயக்கா தெரிவித்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பாகத் தமக்கு எதுவும் தெரியாது என்று விடுதலைப் புலிகள் மறுத்துள்ளனர். (ஜ-3)

## உதைபந்தாட்ட அணி மீது ஒழுக்காற்று நடவடிக்கை

யாழ்ப்பாணம்,பெப்.20

நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக் கழகத்தின் உதைபந்தாட்ட அணி வீரர்களுக்கு எதிராகத் தமிழீழ விளையாட்டுத்துறை ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்திருக்கின்றது.

கடந்த ஆண்டு நவம்பரில் மாவீரர் தினத்தை ஒட்டி தமிழீழ விளையாட்டுத் துறையினரால் நெல்லியடி மத்திய மகா வித்தியாலய மைதா

(18ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| · | ராகு | | சந். சனி |
| சூரி. ▲ புதன் | இராசிச் சக்கரம் | | |
| வெ. | | | |
| செவ். | | கேது | வியா. |

# இந்த வார இராசி பலன்

## 20.02.2005 – 26.02.2005

**மாற்றம்:**
20.02.2005 மிதுனம் - சந்திரன் நிற்கும்
23.02.2005இல் கும்பம் - வெள்ளி மாறும்.

### மேடம்

வீண் சந்தேகம், பிடிவாதம், பிரயாணத்தடை, உறுதியற்ற நிலையால் துன்பப்படல், பொருள் வரவு, சிந்தனையற்ற செயற்பாடுகள், புதிய வழிகளில் தொழில், பொருள் தேட முனைவீர்கள்.

*அதிர்ஷ்டநாள்கள்:-* ஞாயிறு, திங்கள், புதன்.

### இடபம்

காற்றுள்ள பொழுது செயற்பட்டு வெற்றி காண முயலுவீர்கள். தொழிலுக்காக பொருள் செலவு செய்வீர்கள். மாமன் வழியினருக்கு நல்லதல்ல. பொருள் வழி முயற்சிகள் முக்கியமாகும். இடமாற்றங்களைத் தவிர்க்கவும்.

*அதிர்ஷ்டநாள்கள்:-* ஞாயிறு, திங்கள், புதன்

### மிதுனம்

எதிர்மாறான விளைவுகள் ஏற்படும். பொருள் இழப்பு வரலாம். தந்தை வழிச் சகோதரர்களுக்கு நல்லதல்ல. வாய்வுக் குழப்படி தொடரும். வீட்டிற்கு விருந்தினர் வருவர். பொருளால் யோசனை வரும். நிதானமாக செயற்படவும்.

*அதிர்ஷ்டநாள்கள்:-* திங்கள், புதன்.

### கடகம்

சுக்கிர பார்வையால் புதிய பொருள் வரவு, காணி பூமி சேரும் அல்லது பொருள் திருத்தங்கள் தொடரும். சகோதரர் உதவிகள் கிடைக்கும். புதிய திட்டங்களால் நன்மைகள் ஏற்படும். பெரியவர்களின் உதவிகள் கிடைக்கும்.

*அதிர்ஷ்டநாள்கள்:-* திங்கள், புதன், வியாழன்.

### சிங்கம்

புதிய தொழில், புதிய கல்விச் சிறப்புக் கொடுக்கும். கெட்ட நண்பர்களால் உபத்திரவங்கள் வரும். நல்லவர்களின் உதவிகள் கிடைக்கும். வீட்டுத் திருத்தம் கிடைக்கும். தூரத்துச் செய்திகளால் தடுமாற்றம் ஏற்படும்.

*அதிர்ஷ்டநாள்கள்:* திங்கள், புதன், வியாழன்.

### கன்னி

பெரியவர்களின் உதவிகள் கிடைக்கும். சகோதரர்களுக்குச் சிறப்பு மாற்றங்கள் ஏற்படும். விசாரணை ஏற்படும். திட்டமிட்டு தொழிலில் முன்னேறுவீர்கள். வருவாய்க்கு மீறி செலவுகள் அதிகரிக்கும்.

*அதிர்ஷ்டநாள்கள்:* புதன், வெள்ளி.

### துலாம்

தத்துவம் பேசுவீர்கள். புத்திரர்களுக்காக ஓடியாடித் திரிவீர்கள். இடமாற்றங்கள் ஏற்படும். பொருள் யோசனை வரும். புதிய திட்டங்களால் வருமானப் பெருக்கம் ஏற்படும். காணி பூமியில் மாற்றங்கள் கொடுக்கும்.

*அதிர்ஷ்டநாள்கள்:-* புதன், வெள்ளி.

### விருச்சிகம்

வாக்குக் கலகம், சகோதரர் உதவி செய்வர், பணவரவு, உஷ்ணபீடைகள் வரும். வீட்டில் திருத்தம், இடமாற்றங்கள் ஏற்படல், தூர தேசச் செய்திகளால் மகிழ்ச்சி. பொருள் வரவு ஏற்படும்.

*அதிர்ஷ்டநாள்கள்:-* ஞாயிறு, திங்கள், புதன், வெள்ளி.

### தனுசு

புதிய திட்டங்கள், ஆலயச் செலவுகள், அயலவர்களின் வீண்பழி கேட்டல், தூரத்துச் செய்திகளால் மகிழ்ச்சி, எதிர்பாலாருக்குச் சுகயீனம். வீடு மனைத் திருத்தம் ஏற்படும். போக்குவரத்துச் செலவுகள் அதிகரிக்கும்.

*அதிர்ஷ்டநாள்கள்:* ஞாயிறு, திங்கள், வெள்ளி.

### மகரம்

சங்கீதச் செலவுகள், வாக்குச் சித்திகள், புதிய முயற்சிக்காகத் தூர இடங்களுக்குச் செல்லல், புதிய நண்பர்களின் உதவிகளினால் பல முன்னேற்றங்கள் ஏற்படல், வயிற்றில் நோவரும் பலன் காணப்படுகின்றது.

*அதிர்ஷ்டநாள்கள் :-* ஞாயிறு, திங்கள்.

### கும்பம்

வெட்ட வெளிச்சமாக மற்றவர்களின் குறைகளைச் சொல்லி பகைமையைச் சம்பாதிப்பீர்கள். புதிய வரவு, புதிய திட்டங்களால் நன்மைகள் ஏற்படுதல், காணி பூமியில் மாற்றங்கள், செலவுகள் ஏற்படல், சிலருக்கு இடமாற்றமும் வாகனச் செலவுகளும் அதிகரிக்கும்.


*அதிர்ஷ்டநாள்கள்:-* ஞாயிறு, திங்கள், வியாழன்

### மீனம்

சாதுரியச் செயற்பாடு, பிரயாணச் சிறப்பு, தொழில் பீடை, பெரியவர்களின் உதவிகள் கிடைத்தல், தந்தை வழியினருக்கு நல்லதல்ல. சகோதரர்களின் உதவிகள், காணி பூமியில் மாற்றங்கள் ஏற்படல், இடமாற்றங்களால் நன்மைகள் கிடைக்கும்

*அதிர்ஷ்டநாள்கள்:-* ஞாயிறு, திங்கள்.

**மகாதேவா ஜோதிடம்**



'நெஞ்சு கனக்கும் நினைவுகள்' கவிதைத் தொகுப்பு அறிமுக விழாவில் எடுக்கப்பட்ட படங்கள் இவை.
விடுதலைப் புலிகளின் அரசியல்துறை துணைப்பொறுப்பாளர் சோ.தங்கன் தமிழீழத் தேசியக் கொடியை ஏற்றிவைப்பதையும் நிகழ்வில் கலந்துகொண்ட பிரமுகர்களையும் நூலின் முதற்பிரதியை யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ் வெளியிட்டு வைப்பதையும் சிறப்புப் பிரதியை யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி வழங்குவதையும் படங்களில் காணலாம். (படங்கள் : பிரபா)

# கவிதைத் தொகுப்பு அறிமுக விழா பல்கலையில் சிறப்புற நடைபெற்றது

யாழ்ப்பாணம்.பெப்.20

யாழ். பல்கலைக்கழக மாணவர்களின் 'நெஞ்சு கனக்கும் நினைவுகள்' கவிதைத் தொகுப்பு அறிமுக விழா நேற்றுக் காலை யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் செ.செல்வகுமார் தலைமையில் சிறப்புற நடைபெற்றது.

மங்கள விளக்கினை யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ் மற்றும் தமிழீழ மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் நளன் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

அதனைத் தொடர்ந்து தமிழீழத் தேசியக் கொடியினை விடுதலைப் புலிகளின் அரசியல் துறைத் துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் ஏற்றிவைத்தார்.

வாழ்த்துரையினை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரனும், வரவேற்புரையினை யாழ்.மாவட்ட தமிழ் மாணவர் ஒன்றியத் தலைவர் குணேந்திரனும் அறிமுகவுரையினை 'வெளிச்சம்' சஞ்சிகையின் ஆசிரியர் எஸ்.கருணாகரனும் மதிப்பீட்டுரையை யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் பொன்.பூலோகசிங்கமும் நிகழ்த்தினர்.

முதற் பிரதியை யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ் வெளியிட்டு வைக்க நல்லூர் சயன்ஸ் அக்கடமியின் இயக்குநர் சரா புவனேஸ்வரன் பெற்றுக்கொண்டார்.

சிறப்புப் பிரதிகளை விடுதலைப் புலிகளின் அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சோ. தங்கனும், யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி, தமிழீழ மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் நளன் ஆகியோர் வழங்கினர்.

சிறப்புரையினை யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி நிகழ்த்தினார்.

இந்த நிகழ்வில் பல்கலைக்கழக பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் மற்றும் மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

(எ-7)

## மானிப்பாயில் வைத்திய முகாம்

யாழ்ப்பாணம்,பெப்.20

மானிப்பாய் வட்ட லயன்ஸ் கழகம் நடத்தும் இலவச பொது மருத்துவ, கண் பரிசோதனை முகாம் இன்று காலை8.30 மணி முதல் மானிப்பாய் அட்டகிரி சைவ வித்தியாசாலையில் நடைபெறவுள்ளது. (3-202-15)

## மெய்வன்மைப் போட்டிகள்

குடத்தனை,பெப்.20

பருத்தித்துறை சித்திவிநாயகர் வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2மணிக்கு பருத்தித்துறைக் ஹாட்லிக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் இ.நாகேந்திரராஜா தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதமவிருந்தினராக இளைப் பாறிய மக்கள் வங்கி முகாமையாளரும், பருத்தித்துறைப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவருமான வீ.கே.ஏகாம்பரமூர்த்தி கலந்துகொள்வார்.

(3-203-78)

யாழ். பல்கலைக்கழக நுண்கலைத் துறையினரால் நேற்று மேடையேற்றப்பட்ட 'செவ்விளக்கு' நாடகத்தின் ஒரு காட்சி இது. இந்த ஆற்றுகை இன்று மாலையும் பல்கலைக்கழகத்தில் நடைபெறவுள்ளது. (படம் : கவிதரன்)








## சுகாதாரத் தொண்டருக்கு அனர்த்தகாலக் கொடுப்பனவு

யாழ்ப்பாண்ம்,பெப்.20

சுகாதாரத் தொண்டர்களுக்கான சுனாமி அனர்த்தகாலக் கொடுப்பனவுகள் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் கோப்பாய் கிறிஸ்தவக் [illegible]

(எ-13)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அனர்த்த அழிவுகளைச் சவால்களாக்கி எதிர்நீச்சல் போட்டு முன்னேற வேண்டும்

## முல்லை.அரசியல் பொறுப்பாளர் வேழினி பாதிக்கப்பட்ட மக்களுக்கு அறைகூவல்

செவ்விகண்டவர்:
ந.விக்னேஸ்வரன்
புதுக்குடியிருப்புச் செய்தியாளர்

சுனாமி அனர்த்தம் பலரின் உயிரைப் பறித்துச் சென்றது; பலரை மனமுடைய வைதது. இவைகளெல்லாம் மனித வாழ்வின் சவால்களாக ஏற்றுக்கொண்டு எதிர்நீச்சல் போட்டு வாழ்வதன் மூலமே வாழ்வில் வெற்றிகளைப் பெறலாம். இவ்வாறு தெரிவித்திருக்கிறார் முல்லைத்தீவு மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் வேழினி.

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களின் நிலைமை தொடர்பாக அவர் உதயனுக்கு வழங்கிய விசேட செவ்வியிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

❑ *கேள்வி:* சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டவர்கள் தொடர்பாக என்ன கூறுகிறீர்கள்?

○ *பதில்:* முல்லைத்தீவில் சுனாமிப் பேரலையில் சிக்கி குழந்தைகளும் பெண்களும் தான் அதிகமாக இறந்துள்ளனர். அதிக உடல் உளப் பாதிப்புகளுக்கு ஆளானவர்களும் அவர்கள் தான்.

சமூகத்திலும் வீட்டிலும் ஆண்களுக்கு - கணவனுக்கு ஒத்திசைவாக பலவகையில் துணையாக நிற்பவர்கள் பெண்கள். ஏன் இந்த நலன்புரி நிலையத்தில் உள்ள பல ஆண்களே என்னிடம் கூறியிருக்கிறார்கள். நான் உழைத்துக்கொண்டு வருவது மட்டும் தான். மிகுதி எல்லாம் என் மனைவிதான் செய்கிறாள் என்று.

குழந்தைகளைப் பாடசாலைக்கு அனுப்பினாலும் சரி , சமையல் செய்தாலும்சரி, கடைக்குச் சென்று பொருள்கள் வாங்கினாலும்சரி, குழந்தைகளைச் சிறப்பான முறையில் பராமரித்தாலும்சரி எல்லாம் பெண்கள்தான்.

அவளை இழந்திட்டன். இனி எப்படி நான் இந்தக் குழந்தைகளை பாதுகாப்பது என்று தெரியவில்லை. பிள்ளைகளை விட்டுட்டு நான் எப்படித் தொழிலுக்குப்போறது. பிள்ளையின்ர எதிர்காலம் எப்படிப்போகும் என்று தெரியவில்லை.

ஆனால், இந்த நலன்புரி முகாம்களில் எதிர்காலம் பற்றிய நம்பிக்கையை தருகிறார்கள். சரியான வழிகாட்டல், ஆலோசனைகள் எல்லாம் எங்களுக்கு வழங்கப்படுகிறது என்று அவர். என்னிடம் கூறினார்.

பாதிப்புக்குள்ளானவர்களுக்கு தற்போது ஆற்றுப்படுத்தல்தான் அவசியமாக உள்ளது.

❑ *கேள்வி:* "சுனாமி"யால் ஆதரவற்றவர்களாகிப்போன சிறுவர்களின் நிலைமை குறித்து?

○ *பதில்-* ஆதரவற்றவர்கள் என்று யாருமே இல்லை. ஏதோ ஒருவகையில் பாதிப்புக்குள்ளாகியிருக்கிறார்கள் அவ்வளவே. அநேகமானவர்கள் தாய் அல்லது தந்தை என்ற யாராவது ஒருவரை இழந்துள்ளனர்.

தாய், தந்தை இருவரையும் இழந்தவர்கள் மிகக்குறைவு. அவர்களை உறவினர்கள் தம் வசம் வைத்துள்ளனர். பெரியம்மா, சித்தி போன்ற உறவினர்கள் பாதுகாப்பில் தற்போது இந்தச் சிறுவர்கள் இருக்கிறார்கள்.

❑ *கேள்வி:* நலன்புரி நிலையங்களில் பொதுவாகப் பல சமூக, கலாசாரப் பிரச்சினைகள் ஏற்படுவதுண்டு. முல்லைத்தீவில் நிலைமை எப்படியிருக்கின்றது.

○ *பதில:* சமூகப்பிரச்சினைகள் இங்கு இல்லை. கூட்டுக்குடும்பங்களாக இருந்தாலும் அவர்கள் தங்கள் தனித்துவங்களை பேணிவருகின்றனர். இரவுவேளைகளில் ஆண்கள் வேறு இடங்களிலும் பெண்கள் வேறு இடங்களிலும் தங்கியிருக்கின்றனர்.

இங்கு சிலர் மது அருந்திவந்தனர். அவர்களை ஆற்றுப்படுத்தல் மூலம் அந்தப் பழக்கத்திலிருந்து விடுவித்திருக்கிறார்கள்.

நலன்புரி நிலையங்களில் அந்தந்தப் பிரிவுகள் தனித்தனியாகப் பிரிக்கப்பட்டு சரியான முறையில் இயங்கிவருவதால் எந்தப் பிரச்சினையும் இல்லை.

நோய்களுக்கு மருத்துவப் பிரிவும் வெளிநாட்டு வைத்தியர்களும் சிகிச்சை அளிக்கின்றனர். தமிழீழ சுகாதாரச் சேவை சுகாதார நடவடிக்கைகளை மேற்கொள்கின்றது. நிர்வாக சேவை நிதி மற்றும் தேவைகளை நிறைவுசெய்கிறது. உணவு மற்றும் உடை போன்ற தேவையான பொருள்களை தமிழர் புனர்வாழ்வுக்கழகம் வழங்கிவருகின்றது.

❑ *கேள்வி:* சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மாணவர்கள் நிலை எவ்வாறு உள்ளது?

○ *பதில்:* மாணவர்களை பொறுத்தமட்டில் கல்வியில் எல்லோரும் அக்கறையாகவே உள்ளனர். காலை 7 மணிக்கு மாணவர்களுக்கு உணவு வழங்கப்படும். சீருடைகள் இன்னும் முழுமையாக வழங்கப்படவில்லை. நிற உடைகளுடன்தான் பாடசாலை செல்கின்றார்கள். கொப்பி, பாடப்புத்தகம் என்பனவற்றை யுனிசெவ், தமிழீழ மாணவர் அமைப்பு என்பன வழங்குகின்றன. போக்குவரத்துச் சேவையை தமிழீழ போக்குவரத்துக் கழகம் இலவசமாக மேற்கொள்கிறது.

பாடசாலைகளைப் பொறுத்தமட்டில் முல்லைத்தீவு மகா வித்தியாலயம் பழைய இடத்தில் இயங்குகின்றது.

நலன்புரி நிலையங்களாக இயங்கும் பாடசாலைகள் - குறிப்பாக வித்தியானந்தக் கல்லூரி போன்றன ஆசிரிய மத்திய நிலையத்திலும் தனியார் வீடுகள் பொது நோக்கு மண்டபங்கள், தனியார் கல்வி நிலையங்கள் என்பனவற்றில் இயங்கி வருகின்றன.

பாதிக்கப்பட்ட பல்கலைக்கழக மாணவர்களுக்கு உடைகள் மற்றும் 5 ஆயிரம் ரூபா பணம் என்பனவும் வழங்கப்பட்டன.

தமிழீழக் கல்விக் கழகம், மாணவர் அமைப்பு மற்றும் வலயக் கல்விப் பணிமனை என்பன இணைந்து கல்வி சம்பந்தமான செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றன.

❑ *கேள்வி:* நலன்புரிநிலையத்தில் பெண்களுக்கு ஏதாவது தொழில் முயற்சிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டிருகின்றனவா?

○ *பதில்:* தமிழர் புனர்வாழ்வுக் கழகம் அவர்கள் கேட்கும் கைப்பணி சார்ந்த தொழில்களுக்கு உதவி புரிகிறது. வலை பின்னல் போன்ற சிறுகுடிசை தொழில்கள் செய்யப்படுகின்றன. இது அவர்களின் விருப்பு அடிப்படையில் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கு இணங்க சில நலன்புரி நிலையங்களில் நடைபெறுகிறது.

வாசிப்பதற்கு நிறையப் புத்தகங்கள் வழங்கப்பட்டுள்ளன. மாலை நேரத்தில் விளையாட்டினை ஊக்கப்படுத்துமுகமாக பல விளையாட்டுகள் நடைபெறுகின்றன. அரங்க செயற்பாட்டுக் குழுவின் ஆற்றுகைகள் இடம்பெற்று வருகின்றன. ★

# தேர்தலில் வென்ற ஷியா முஸ்லிம்களை இலக்கு வைத்து ஈராக்கில் தாக்குதல்கள்

பக்தாத், பெப்.20

ஈராக் பொதுத்தேர்தலில் ஷியாக்களின் ஐக்கிய முன்னணிக்கட்சி 140 ஆசனங்களைப் பெற்று வெற்றியீட்டியிருக்கிறது.



இதனையடுத்து அங்கு தற்கொலைத் தாக்குதல்கள் மற்றும் அதிரடித்தாக்குதல்கள் என்பன தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றன.

கடந்த சில நாள்களில் பக்தாத நகரில் இடம்பெற்றதாக்குதல்களில் 30 ஷியா முஸ்லிம்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

குறைந்த எண்ணிக்கையுடனான பெரும்பான்மைப் பலத்தையே அக்கட்சி பெற்றுள்ளது என அந்நாட்டு தேர்தல் ஆணைக்குழு தெரிவித்தது.

இத்தேர்தல் முடிவுகளை தேர்தல் ஆணைக்குழு அங்கீகரித்துள்ளது. ஷியா முஸ்லிம்களின் ஆன்மீகத் தலைவரான ஆயதுல்லாஹ் அலி அல ஷிஸாதானிளின் அனுசரணையுடைய ஐக்கிய ஈராக் முன்னணி ஆட்சியமைக்கும் தகுதியைப் பெற்றிருக்கிறது.

இருப்பினும், மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலத்தை அக்கட்சி பெறவில்லை.

இரண்டாவது அதிகப்படியான வாக்குகளைப் பெற்ற குர்து இனக் கட்சிக்கு 75 ஆசனங்கள் கிடைத்துள்ளன.

ஈராக் இடைக்காலப் பிரதமர் இயத் அல்லாவியின் தலைமையிலான கட்சிக்கு 40 ஆசனங்களும், ஏனைய சிறுசிறு கட்சிகளுக்கு 20 ஆசனங்களும் கிடைத்துள்ளன.

ஜனாதிபதியையும், இரண்டு துணை ஜனாதிபதிகளையும் தெரிவுசெய்ய மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலம் தேவை என்பதால், ஐக்கிய ஈராக் முன்னணி ஏனைய கட்சிகளுடன் பேச்சு நடத்தியாகவேண்டும் என்ற நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

இது ஒரு புறமிருக்க-

ஷியா முஸ்லிம்க்ளின் வருடாந்தப் பண்டிகையான 'அஷூரா' ஷவைக் கொண்டாடத் தயாராகிவருகின்றனர்.

கடந்த வருடம் இந்தப் பண்டிகையின் போது இடம்பெற்ற தற்கொலைத்தாக்குதல்கள் மற்றும் கலவரங்களின் போது 181 பேர் கொல்லப்பட்டனர். எனவே இந்த வருடமும் தாக்குதல்கள் அதிகளவில் நடத்தப்படலாம் என்பதால் பக்தாத், கபாலா உட்பட முக்கிய நகரங்களின் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டிருக்கிறது. புறநகர்ப் பாதைகள் மூடப்பட்டிருக்கின்றன. (த)

# சங்கரமடத்தில் நவக்கிரக ஹோமம் ஜெயேந்திரர் முன்னிலையில் நடந்தது!

கலவை சங்கரமடத்தில் நவக்கிரக ஹோமம் நடந்தது. இதில் ஜெயேந்திரர் கலந்துகொண்டார்.

காஞ்சிபுரம் வரதராஜப்பெருமாள் கோவில் நிர்வாகி சங்கரராமன் கொலை வழக்குத் தொடர்பாக ஜெயேந்திரர் கைது செய்யப்பட்டார். பின்னர் அவர் மேல் நீதிமன்ற உத்தரவின்பேரில் நிபந்தனை பிணையில் விடுதலை செய்யப்பட்டார்.ஜெயேந்திரர் தற்போது வேலூர் மாவட்டம் கலவையில் சங்கர மடத்துக்கு சொந்தமான பிருந்தாவனத்தில் தங்கி இருக்கிறார். அங்கு அவரைத் தினமும் ஏராளமானோர் சந்தித்து வருகிறார்கள். இந்து முன்னணி, விசுவ இந்து பரிஷத் அமைப்பினரும் சந்தித்தனர்.

பிருந்தாவனத்தில் சந்திர மவுலீஸ்வரர் விக்கிரகம் வைத்து தினமும் ஜெயேந்திரர் 3 வேளைகளும் பூஜை செய்துவருகிறார்.

நேற்று கோபூஜை, சந்திர மவுலீஸ்வரர் பூஜை என்பனவற்றுடன் நவக்கிரக ஹோமமும் நடந்தது.

15 வேதவிற்பன்னர்கள் இந்த ஹோமத்தை நடத்தினர். ஹோம குண்டலத்தில் நெய் ஊற்றப்பட்டு, எள் போடப்பட்டது. ஜெயேந்திரர் முன்னிலையில் பிற்பகல் 12.30 மணி வரை 5 மணி நேரம் இந்த ஹோமம் நடந்தது. (த)

# சுனாமி எச்சரிக்கை மையம் மீது வழக்குத் தொடர்வதற்கு முடிவு

## முற்கூட்டியே தகவல்தரத் தவறியமைக்காக!

வியன்னா,பெப்.20

ஆழிப்பேரலை அனர்த்தம் குறித்து முன்கூட்டியே எச்சரிக்கத் தவறியதற்காக அமெரிக்க சுனாமி எச்சரிக்கை மையத்தின் மீது வழக்குத்தொடர முடிவுசெய்யப்பட்டுள்ளது.

சுனாமியால் பாதிக்கப்பட்ட ஆஸ்திரியா மற்றும் ஜேர்மனியைச் சேர்ந்த 19பேர் நியூயோர்க் நீதிமன்றத்தில் இந்த வழக்கைத் தொடரத் திட்டமிட்டுள்ளனர்.

இவர்கள் சார்பில் ஆஜராகவிருக்கும் அமெரிக்க மற்றும் ஆஸ்திரிய வழக்கறிஞர்கள் இந்தத தகவலை வியன்னாவில் செய்தியாளர்களிடம் தெரிவித்தனர்.

அமெரிக்காவில் ஹவாய் தீவில் சுனாமி எச்சரிக்கை மையம் அமைந்துள்ளது. சுனாமி பற்றி முன்கூட்டியே எச்சரிக்காமல் இந்த மையம் அலட்சியத்துடன் இருந்துவிட்டதாக வழக்கறிஞர்கள் குற்றஞ்சாட்டினர்.

தாய்லாந்துக்கு சுற்றுலா சென்றபோது அக்கார் ஹோட்டலில் தங்கியிருந்தவர்கள் சுனாமியால் பாதிக்கப்பட்டனர். அவ்வாறு பாதிக்கப்பட்ட சிலர் தாய்லாந்து அரசு மற்றும் அக்கார் ஹோட்டல் ஆகியவற்றின் மீது வழக்குத். தொடரத் திட்டமிட்டுள்ளனர்.

ஆழிப்பேரலையால் ஆபத்து ஏற்படும் என முன்கூட்டியே எச்சரிக்கவில்லை. அவ்வாறு எச்சரித்திருந்தால் பெருமளவு உயிர்ச் சேதத்தைத் தவிர்த்திருக்கலாம் என பாதிக்கப்பட்டவர்கள் கூறியுள்ளனர். இதை உலகிலுள்ள அனைவருக்கும் ... சுனாமி எச்சரிக்கை மையத்தின் மீது வழக்கு தொடரத் திட்டமிட்டுள்ளோம் - என்று அவர்கள் கூறினா. (த)

# மதுபானசாலை நடத்துவதற்கு ஆந்திராவில் பெண்கள் விருப்பம்!

ஆந்திர மாநிலத்தில் கிராமப்புறங்களில் வசிக்கும் பெண்கள் பலர் மதுபானசாலைகளைத் திறப்பதற்கு அனுமதி வழங்குமாறு விண்ணப்பித்திருக்கின்றனர்.

அங்குள்ள லக்சரிபேட்டை, மஞ்சரியாலா, வெல்லம்பள்ளி, மந்தமாரி ஆகிய கிராமங்களிலேயே அதிகளவு பெண்கள் விண்ணப்பித்திருக்கின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

ஆந்திராவில் கடந்த தெலுங்குதேச கட்சி ஆட்சியின்போது நகர்ப்புறங்களில் மட்டும் மதுபானசாலை நடத்த அனுமதிக்கப்பட்டது. கிராமப் புறங்களில் நடத்த அனுமதி மறுக்கப்பட்டது. இதன் பிரகாரம் கடந்த ஆட்சியில் மாநிலம் முழுவதும் 750 மதுபானக்கடைகள் இருந்தன. இந்தக் கடைகளை உடனடியாக மூடும்படி அங்குள்ள பெண்கள் அமைப்புகள் போராட்டம் நடத்தி வந்தன. பல கடைகள் முன்பு ஆர்ப்பாட்டமும், கல்வீச்சும் நடந்தன.

இந்த நிலையில் அங்கு காங்கிரஸ் கட்சி ஆட்சிக்கு வந்ததும் முதலமைச்சர் ராஜசேகர ரெட்டி மாநிலத்தில் பூரண மதுவிலக்கு அமுல் படுத்தப்படும் என்று தெரிவித்தார்.

ஆனால், தற்போது ராஜசேகரரெட்டி தனது நிலையை மாற்றிக்கொண்டுள்ளார். மாநில அரசின் நிதி நிலையை பெருக்க கிராமப்புறங்களிலும் மதுபானக்கடைகளை திறக்க முடிவுசெய்துள்ளார்

இதன்படி 25 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் வசிக்கும் கிராமங்களில் மதுபானசாலைகளை திறக்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம் மாநிலம் முழுவதும் ஏராளமான மதுபானக்கடைகள் விரைவில் திறக்கப்பட உள்ளன. இந்த மதுபானக்கடைகளை நடத்த அரசு அனுமதிகேட்டு ஏராளமானோர் மனுக் கொடுத்து வருகிறார்கள்.

இவர்களில் ஆதிலாபாத் மாவட்டத்தைச் சேர்ந்த பெண்கள் பலரும் மதுபானக்கடை நடத்த அனுமதிகேட்டு மனு கொடுத்துள்ளனர். அங்குள்ள மஞ்சரியாலா, வெல்லம்பள்ளி, மந்தமர்ரி, லக்சட்டிபேட்டை ஆகிய கிராமங்களில் தான் அதிக அளவில் பெண்கள் மனு கொடுத்திருப்பது தெரியவந்துள்ளது.

உலக அரங்கில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## தம்பிப்பிள்ளை வேலுப்பிள்ளை



(இளைப்பாறிய அதிபர்,
பிரசித்த நொத்தாரிஸ்)

நீர்வேலி மத்தியைச் சேர்ந்த தம்பிப்பிள்ளை வேலுப்பிள்ளை 15-02-2005 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னாரின் பூதவுடல் அந்திமக்கிரியைகளுக்காக இன்று (20-02-2005) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு நீர்வேலி இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி பரஞ்சோதி
(மனைவி)

நீர்வேலி மத்தி,
நீர்வேலி. (42269) (26)

## விற்பனைக்கு

எம்மிடம் Visuals CDக்கள் விற்பனைக்குண்டு. அத்துடன், ஓடியோ, வீடியோ CDக்களும் பெற்றுக்கொள்ளலாம்.

**கண்ணன் வீடியோ சென்ரர்**
இல. 35, கண்டி வீதி
(பழைய நீதிமன்றம் முன்பாக), சாவகச்சேரி.
T.P.No.0776362794. (42270)

## விற்பனைக்கு

யாழ்ப்பாணம், கன்னாதிட்டியில் அமைந்துள்ள 3 மாடிகளைக் கொண்ட கடைக் கட்டடமும் நாவலர் வீதி, ஐந்து சந்திக்கு அருகில் நாலு பரப்புக் காணியில் பெரிய வீடும் விற்பனைக்குண்டு. நேரில் வரவும்.

திரு.க.பத்மநாதன்,
L.K.S. தங்கமாளிகை,
கன்னாதிட்டி, யாழ்ப்பாணம். T.P.No.0776687824 (42166)

## நெஞ்சை விட்டகலாத 31ஆம் நாள் நினைவஞ்சலி



திருமதி
சரவணபவானந்தன் இராஜேஸ்வரி

நாள்கள் பலவானாலும் என்றும்
எம் நெஞ்சை விட்டு அகலாத
அன்பின் தாயே! உம்மை எம்
நெஞ்சமதில் இருத்தி உங்கள்
ஆத்மா சாந்தியடைய இறைவனை
இறைஞ்சுகின்றோம்.

பிறப்பு: 01.06.1945 இறப்பு: 20.01.2005

திரு.திருமதி கணேசலிங்கம் குடும்பத்தினர்
தென்னியன்குளம், துணுக்காய். (42277) (21-14-26)

## COLLEGE OF INFORMATION TECHNOLOGY (CIT)

*Sivan Lane, Avarangal, Puttur.*

### நிறுவன தின விழாவும் பட்டமளிப்பு விழாவும்

*ஏமது நிறுவனத்தின் நிறுவன தின விழாவும் பட்டமளிப்பு விழாவும் இன்று 20.02.2005 ஞாயிறு காலை 10 மணிக்கு ஆவரங்கால் சிவசக்தி மணிமண்டபத்தில் நடைபெறுகிறது.*

தலைவர் :
*R. சிவகணேசன்* (இயக்குனர், College of Information Technology)

பிரதம விருந்தினர் :
*Prof S. மோகனதாஸ்* (துணைவேந்தர், யாழ். பல்கலைக்கழகம்)

சிறப்பு விருந்தினர்கள் :
*திரு. V. ஆறுமுகம்* (அதிபர், புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தா கல்லூரி)
*திருமதி. A. சாந்திசீலன்* (உதவி பிரதேச செயலர், கோப்பாய்)
*திரு. S. முரளிதரன்* (உதவி பிரதேச செயலர், தெல்லிப்பளை)
*திரு. P. ஜெயதாஸ்* (இயக்குனர், London Info Tech, Colombo)
*திரு. K. சண்முகலிங்கம்* (முகாமையாளர், மக்கள் வங்கி, அச்சுவேலி)

கௌரவ விருந்தினர் : *திரு. V. நடராஜக் குருக்கள்* (ஆவரங்கால், சிவன் தேவஸ்தானம்)

*அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

50% சலுகைக் கட்டணத்துடன்
**Computerized Accounting Packages**
**A/L** பாடவிதானத்தில் உள்ளடக்கப்பட்ட
**General Information Technology (GIT)**
கற்கைநெறிகள் இம்மாத இறுதியில் ஆரம்பிக்கப்படுகின்றன.

– இயக்குனர் –

*e-mail : avarangaleit@yahoo.com* *T.P : 0777-589703*

### புவியியல் தகவல் பயிற்சிப் பட்டறை

புவியியல் தகவல் தொழில் நுட்பம் தொடர்பான வதிவிடப் பயிற்சிப் பட்டறைகள் நாளை திங்கட்கிழமையும் நாளைமறு தினமும் கொழும்பில் நடைபெறவுள்ளன.

இலங்கை உள்ளூா ஆளுகை நிறுவனத்தினால் நடத்தப்படவுள்ள மேற்படி பயிற்சி நெறியில் கலந்து கொள்ளுமாறு மாநகர ஆணையாளர்களுக்கும் நகரசபை, பிரதேச சபைச் செயலாளர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

ஜேர்மன், ஸ்பெயின் ஆகிய நாடுகளின் நிதியுதவியுடன் மேற்கொள்ளப்படும் மேற்படி பயிற்சி நெறிக்கு நாடளாவிய ரீதியில் 25 அலுவலர்கள் அழைக்கப்பட்டுள்ளனர். (3-203-185)

### ஆள்சேர்ப்புப் பரீட்சை

இலங்கை வங்கியின் வங்கி உதவியாளர் (பயிற்சி) பதவிக்கு விண்ணப்பம் செய்தவர்களுக்கான பாட்சை அடுத்தமாதம் 12ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இதற்கென யாழ். மாவட்டத்தில் இரணடு பரீட்சை நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன. (10)

## வன்னிப் பெருநில உதயன் வாசகர்களே! விளம்பரதாரர்களே!

வியாபாரம் பெருக விளம்பரம் செய்திடுவீர்!

உங்கள்
சகல விளம்பரங்களையும்
எதுவித சிரமங்களுமின்றி
உதயனில் பிரசுரித்துப்
பயன்பெற விரும்புகிறீர்களா?

உடன்விரையுங்கள்
எமது கிளிநொச்சி அலுவலகத்துக்கு

உதயன் கருமபீடம்
1-9 தங்ககம்,
முதன்மைச்சாலை, கிளிநொச்சி.

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ் (சி-41045)

## கேள்வி அறிவித்தல் - 2005
### யாழ்ப்பாணம் மாநகர சபை

வீதியில் தரித்து நிற்கும் வாகனங்களுக்கு வரி அறவீடு செய்தல்

பின்வரும் இடங்களில் தரித்து நிற்கும் வாகனங்களுக்கான வரி அறவிடுதலை 01-03-2005 தொடக்கம் 31-12-2005 வரையான காலத்துக்குக் குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

+ பருத்தித்துறை வீதி தொடக்கம் கே.கே.எஸ். வீதி வரையிலான ஆஸ்பத்திரி வீதி
+ நாவலர் வீதி தொடக்கம் ஆஸ்பத்திரி வீதி வரையான கஸ்தூரியார் வீதி
+ ஆரியகுளம் தொடக்கம் கே.கே.எஸ். வீதி வரையான ஸ்ரான்லி, பொன்னாலை வீதி
+ புதிய தபால் நிலையச் சந்தி தொடக்கம் மனோகராத் தியேட்டர் சந்தி வரையான கே.கே.எஸ். வீதி.
+ மின்சார நிலைய வீதி.

ஆகக் குறைந்த கேள்வித் தொகை (வற்வரி நீங்கலாக) ரூ. 600,000.00
இத்தொகைக்குக் குறைவான தொகை கோரும் கேள்விக்காரரது கேள்வி ரத்துச்செய்யப்படும். பிணைப்பணம் மீளளிக்கப்படமாட்டாது.
*மீளளிக்க முடியாத கேள்விப்பத்திரக் கட்டணம் ரூ. 500.00*
*வற்வரி 15% ரூ. 75.00*
*மீளளிக்கக் கூடிய கேள்விப் பிணைப்பணம் ரூ. 3.000.00*
*கேள்விப்படிவம் வழங்கும் இறுதித்திகதி: 28–02–2005 திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணி வரை*
*கேள்விகள் சமர்ப்பிக்க வேண்டிய இறுதித்திகதி: 28–02–2005 திங்கட்கிழமை பி.ப. 2.00 மணி வரை*
*கேள்விகள் திறக்கப்படும் நேரம்: 28–02–2005 திங்கட்கிழமை பி.ப. 3.00 மணி.*
மேலதிக விவரங்களை அலுவலகத்தில் பார்வையிடலாம்.

திகதி: 18-02-2005

கலாநிதி க.குணராசா,
மாநகர ஆணையாளர், யாழ்ப்பாணம்.
(சி-41072)(26-14)

## வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை, கரவெட்டி

### வேலைகளுக்கான கேள்வி அறிவித்தல்

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையின் செயலாளரினால் கீழ்க் குறிப்பிடப்பட்ட வேலைகளுக்குக் கேள்விகள் கோரப்படுகின்றன.

01. கேள்விப்பத்திரங்கள் 2005-02-25ஆம் திகதி நண்பகல் 12.00 மணி வரை நிர்மாணப் பயிற்சி நிறுவனத்தில் (இக்ராட் 9) பதிவுசெய்யப்பட்டவர்கள் கீழே குறித்த தொகையைச் செலுத்திக் கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
02. கேள்விப்பத்திரத்தில் ஒரு பிரதியைக் கடித உறையிலிட்டு, அரக்கு முத்திரை வைத்து *செயலாளர், வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை, கரவெட்டி* என்ற முகவரிக்குப் பதிவுத்தபால் மூலம் அல்லது தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டியில் இட்டு, இரண்டாம் பிரதியை *பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், யாழ்ப்பாணம்* அவர்களுக்கு அனுப்பிவைக்க வேண்டும். இரண்டு பிரதிகளையும் உரிய இடங்களில் 2005-02-28ஆம் திகதி முற்பகல் 11.00 மணிக்கிடையில் கிடைக்கச்செய்தல் ஒப்பந்தகாரரின் கடமையாகும்.
03. கேள்விகள் 2005-02-28ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்குத் திறக்கப்படும். அச்சமயம் கேள்விகள் சமர்ப்பித்தவர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் சமுகமளிக்கலாம்.
04. மேலதிக விவரங்களை வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் அறிந்துகொள்ளலாம்.

| தொடர் இல. | வேலை | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரப் பணம் | மீளளிக்கப்படாத பெறுமதி சேர்வரி |
|---|---|---|---|---|
| 01. | மாயக்கை வீதி | 3300.00 | 500.00 | 75.00 |
| 02. | சண்டில்குளம் வீதி | 2150.00 | 500.00 | 75.00 |
| 03. | அணிஞ்சில் வீதி | 1550.00 | 500.00 | 75.00 |
| 04. | வாகையடி துவாளிப்பிள்ளையார் வீதி | 2350.00 | 500.00 | 75.00 |
| 05. | துன்னாலை காளிகோயில் வீதி | 1550.00 | 500.00 | 75.00 |

**சி.வே.குலநாயகம்,**
செயலாளர்,
**வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை, கரவெட்டி.**
(சி-41067)(26-14)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 01 ✲ 03 ✲ 1923
மறைவு 02 ✲ 02 ✲ 2004

அமரர்
# முத்தையா குமாரசுவாமி

திதி: 20-02-2005

எங்கள் அன்புத் தெய்வமே! எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய்
எம்மைப் பாதுகாத்து, நல்வழிகாட்டி வாழ்க்கையில் உயர்வடையச் செய்தீர்கள்!
அவ்வழியைப் பின்பற்றி நாம் சிறப்போடு வாழ்ந்து வருகின்றோம்.
நீங்கள் எம்மைவிட்டுப் பிரிந்து ஒன்றல்ல எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
உங்கள் நினைவு எப்பொழுதும் எம் நெஞ்சில் நிலைபெற்றிருக்கும்.

16/14, 2ஆம் ஒழுங்கை,
சிவன்கோயில் வீதி, திருநெல்வேலி.

என்றும் உங்கள் நினைவோடு வாழும்:
குடும்பத்தினர். (42208)(26-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதயன்**
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

# பேரினவாதத்தின் கேவலமான செயல்

சிறுபான்மையினருக்கு எதிரான தேசிய வெறி, இப்போது பௌத்த, சிங்கள மேலான்மைவாதப் போக்கிடமிருந்து - பேரினவாதிகளிடமிருந்து - மோசமாக வெளிப்பட்டுக்கொண்டிருக்கின்றது.

நிராயுதபாணிகளாகச் சென்ற சமயம் - அரசியல் பணியாற்றுவதற்காகப் போய்க் கொண்டிருந்தபோது - ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களின் நலனைக் கவனிக்கச் சென்றவேளை - கொடூரமான முறையில் சுட்டுக்கொல்லப்பட்டார் விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட அரசியல் பொறுப்பாளர் இ.கௌசல்யன்.

எந்நேரமும் உடைந்துபோகக் கூடிய ஆபத்து நிலையில் - ஏது நிலையில் - இலங்கையின் யுத்தநிறுத்த நிலைமை மோசமடைந்திருக்கும் இன்றைய கட்டத்தில், இத்தகைய கொடூரக் கொலைகள் விபரீத விளைவுகளை ஏற்படுத்தக் கூடியவை. ஒரு செக்கனில் நிலைமையைத் தலைகீழாக்கிப் பெரும் போர் மீண்டும் மூள வழி செய்யக்கூடியவை இத்தகைய பொறுப்பற்ற படுகொலைகள்.

அந்த ஆழமும், அர்த்தமும் புரிந்துகொண்டதனால் தான் இந்தப் படுகொலை குறித்து அறிந்ததும் விரைந்து தனது அதிர்ச்சியையும், கண்டனத்தையும் வெளிப்படுத்தினார் ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் கொபி அனான்.

கொபி அனானின் இந்த நடவடிக்கை பௌத்த, சிங்களப் பேரினவாதிகளைக் கோபமுறவைத்திருக்கிறது.

ஐ.நா. செயலாளரின் இந்நடவடிக்கைக்கு எதிராக - நாட்டுப்பற்றுள்ள தேசிய இயக்கம் என்ற பெயரில் - பேரினவாதிகள் ஆர்ப்பாட்டம் செய்து, ஊர்வலம்போய், ஆரவாரம் செய்தமை குறித்து இப்பத்தியில் ஏற்கனவே குறிப்பிட்டிருந்தோம்.

இப்போது அந்தப் பேரினவாதிகளின் இச்செயற்பாட்டை அங்கீகரித்து அதன் வழி இயங்கியிருக்கின்றது இலங்கை அரசு!

இலங்கை அரசின் சார்பில், இலங்கையின் ஐ.நாவுக்கான நிரந்தரப் பிரதிநிதி பேர்னாட் குணதிலக, ஐ.நா. செயலாளர் நாயகத்தின் அலுவலகத்தில் இதுதொடர்பான இலங்கையின் ஆட்சேபனையைத் தெரிவித்திருக்கின்றார் எனச் செய்திகள் வெளியாகியிருக்கின்றன. இந்த நடவடிக்கை இலங்கை வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் கைங்கரியம் என்கின்றன விடயமறிந்த வட்டாரங்கள்.

ஐ.நாவின் கொழும்புக்கான தற்போதைய நிரந்தர வதிவிடப் பிரதிநிதியான மிகுல் பேர்மியூோவே ஐ.நா. பொதுச்செயலாளரைக் கொண்டு, கௌசல்யன் கொலைக்கு எதிராகக் கண்டன அறிக்கை விடும்படி தூண்டியவர் என்று பேரினவாதிகள் தென்னிலங்கையில் கூச்சலிடுகின்றனர்.

இலங்கைக்கான ஐ.நா. வதிவிடப் பிரதிநிதியை 'வெள்ளைப் புலிகள்' என்றும் அவர்கள் விமர்சிக்கின்றனர்.

இலங்கை வெளிவிவகார அமைச்சும் இதே நிலைப்பாட்டைத்தான் கொண்டிருப்பதாகத் தெரிகின்றது.

முன்னரும் இலங்கைக்கான ஐ.நா. பிரதிநிதிகளாக இருந்த இருவர் மீது அப்போது வெளிவிவகார அமைச்சராக இருந்த இதே லக்ஷ்மன் கதிர்காமர் எரிந்து விழுந்ததைச் சர்வதேசச் சமூகம் மறந்திருக்காது.

இலங்கை அரசுப்படைகள் மேற்கொண்ட மோசமான இராணுவ நடவடிக்கைகள் காரணமாக இலங்கைத் தமிழர் அகதிகளானபோது, அவர்களின் அவலநிலை குறித்து குரலெழுப்பினார் கொழும்புக்கான அப்போதைய ஐ.நா. பிரதிநிதி ஆர்ன் ஒவ்ஸ்டட்.

அதேபோன்று போரின்போது இடையில் சிக்கிய தமிழ் அகதிகளைப் பாதுகாப்பான இடங்களுக்குக் கூட்டிச்செல்வது குறித்துப் பின்னர் அப்பதவியில் இருந்த பீற்றர் விட்தம் கவலை வெளியிட்டுக் கண்டனம் தெரிவித்தார்.

இருவரையும் அந்தக் காலத்தில் 'ஒரு பிடி பிடித்தார்' அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர்.

"ஐ.நா.பிரதிநிதிகள் இங்கு தாம் வந்த வேலையைப் பார்த்துக்கொண்டு போகவேண்டும். வீணாகத் தேவையற்ற விடயங்களில் - நாட்டின் இறைமையுடன் தொடர்புடைய உள் விவகாரங்களில் - முறையற்ற விதத்தில் அவர்கள் தலையிடக் கூடாது. அது அவர்களின் வரம்பு மீறிய செயலாகும்.

"ஐ.நா.அமைப்புக்கள் இங்கு வந்தால் மலேரியா குறித்தும் அதைப் பரப்பும் நுளம்பு குறித்தும், அவற்றை ஒழிப்பது குறித்தும் பேசலாம்.அதுதான் அவர்களின் வேலை. அதை விடுத்து, நாட்டின் உள்விடயங்களில் அவர்கள் தலையிடக்கூடாது" - என்ற சாரப்பட அப்போது கருத்துக் கூறியவர் லக்ஷ்மன் கதிர்காமர்.

இப்போது கௌசல்யன் கொலையை ஒட்டி ஐ.நா. செயலாளர் நாயகம் கொபி அனான் கண்டன அறிக்கை வெளியிட்டதை ஒட்டியும் லக்ஷ்மன் கதிர்காமருடன் அவரது அமைச்சும் அதே பழைய பாணியில்தான் செயற்படுகின்றது.

கௌசல்யன் 'பயங்கரவாதி' யோ இல்லையோ நிராயுதபாணியாக வந்த ஒருவர் சட்டமுறைமைகளுக்கு மாறாகக் கொல்லப்பட்டதை யாரும் கண்டிக்கலாம். அரசின் - இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ள ஒரு பகுதியில் வைத்து கௌசல்யனும் ஏனையோரும் கொல்லப்பட்டது எவ்வளவு பாரதூரமானது என்பதனைக் கருதாமல், அதனைக் கண்டிப்பது தவறு என்று கூறுவது - அதுவும் இலங்கை போன்ற, தன்னைச் சட்டரீதியான அரசு என்று பீற்றிக்கொள்ளும் அரசு கூறுவது - கேவலத்திலும் கேவலமாகும்.

இது பௌத்த, சிங்களப் பேரினவாத வெறியின் மற்றொரு வெளிப்பாடேயன்றி வேறில்லை.

# அறுவடைமுடிய முன்னரே அவிழ்த்துவிடப்பட்ட கால்நடைகளால் காரைநகரில் பயிரழிவு

காரைநகர்,பெப்.20

காரைநகரில் நெல் அறுவடை பூர்த்தியாவதற்கு முன்னரே கால்நடைகள் அவிழ்த்து விடப்பட்டுள்ளன. இதனால், பெரும் பயிரழிவு ஏற்படும் அபாயம் ஏற்பட்டுள்ளதாகச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

குறிப்பாக, நெல் அறுவடை மும்முரமாக நடைபெற்று வரும் வேளையில் விளைந்து முற்றிய நெற்கதிர்களைக் கட்டாக்காலி கால்நடைகள் அழித்து வருகின்றன என்று விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

ஏற்கனவே நெல் விதைப்பு மேற்கொள்ளப்பட்ட வேளையில் பெய்த பெரும் மழை காரணமாகப் பயிரழிவு ஏற்பட்டிருந்தது. இவ்வாறு பெரும்மழையில் இருந்து தப்பி வளர்ந்துள்ள நெற்பயிர்கள் இவ்வாறு கால் நடைகளால் அழிக்கப்படுவது தமக்குக் கவலை அளித்துள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

விளைந்த நெல்லை அறுவடை செய்வதற்கும் சிறுதானியப் பயிர்ச் செய்கையினை மேற்கொள்வதற்கும் வசதியாகக் கட்டாக்காலி கால்நடைகளைக் கட்டுப்படுத்துவதற்கு உரிய அதிகாரிகள் விரைந்து நடவடிக்கை எடுக்கவேண்டும். குறிப்பாக, காரைநகர் கமநல சேவைத் திணைக்களத்தினர் இதுவிடயத்தில் உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்று விவசாயிகள் கோரியுள்ளனர். (எ-73)

# வலுவிழந்தோருக்கு கண்டி நிலையத்தில் தொழில் துறையில் பல்வேறு பயிற்சிகள்

## சமூக சேவைத் திணைக்களம் நடவடிக்கை

வலி.மேற்கு,பெப்.20

வலுவிழந்தோருக்கு பலதரப்பட்ட தொழில்துறையில் இரண்டு வருடப் பயிற்சிகளை வழங்க சமூக சேவைத் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

கண்டியிலுள்ள தொழில்நுட்ப பயிற்சி நிறுவனத்தில் இந்தப் பயிற்சிகள் வழங்கப்படும்.

வாகன தகர வேலை, வாகன வர்ணம் தீட்டுநர், மோட்டார் இயந்திரம், உலோக ஒட்டுநர், கடைச்சல் வேலை, இயந்திரமயமான தச்சுவேலை, மின் தொழில்நுட்பம் ஆகிய துறைகளில் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

17 வயதுக்கும் 35 வயதுக்கும் இடைப்பட்ட திருமணமாகாத ஆண்கள் இப் பயிற்சி நெறிகளுக்குத் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

இரண்டு வருடங்களுக்கு நடைபெறவுள்ள பயிற்சியில் மூன்று மாதங்களுக்கு வெளிப்புறப்பயிற்சியில் பயிலுநர்கள் ஈடுபடவேண்டும். பயிற்சியாளருக்கு விடுதி வசதி, வைத்திய வசதி என்பன இலவசமாக வழங்கப்படும்.

உள்நாட்டு, வெளிநாட்டு விளையாட்டுக்களில் பங்குபெறச் செய்தல், கருத்து வெளிப்படுத்துதல், பயிற்சி சுற்றுலாக்கள், தலைமைத்துவப் பயிற்சி, கலாசார வேலைத்திட்டங்கள் போன்ற விடயங்களிலும் பயிற்சிகள் வழங்கப்படும்.

பயிற்சியின்போது கொடுப்பனவாக நாள் ஒன்றுக்கு அறுபது ரூபா வழங்கப்படுவதுடன், பயிற்சி முடிவில் 10 ஆயிரம் ரூபா பெறுமதியான உபகரணங்களும் வழங்கப்படும்.

பயிற்சி நெறிகளில் பங்குகொள்ள விரும்புகின்ற வலுவிழந்தோர் பிரதேச செயலகங்களில் கடமையாற்றுகின்ற சமூக சேவை உத்தியோகத்தர்களுடன் தொடர்கொண்டு விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கலாம்.

முழுமையாக ஊனமுற்றவர்கள் புத்தி சுவாதீனம், வலிப்பு மயக்கமடைதல் ஆகிய நோய்கள் உள்ளவர்கள் பயற்சிநெறிக்கு அனுமதிக்கப்பட மாட்டார்கள் எனவும் -

சமூகம் சேவைகள் திணைக்களத்தின் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (எ-175)

# மாட்டிறைச்சிக் கடைக்கு 'சீல்'; பசுமாட்டை வெட்டியதற்குப் பரிசு

தென்மராட்சி,பெப்.20

விற்பனைக்காக வெட்டப்பட்ட பசு மாட்டின் இறைச்சி பொதுச் சுகாதாரப் பரிசோதகரால் பறிமுதல் செய்து அழிக்கப்பட்டதுடன் இறைச்சிக் கடைக்கும் 'சீல்' வைக்கப்பட்டது.

சாவகச்சேரியில் கடந்த வியாழனன்று இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பார்வையிட்ட பின்னரே மாடுகள் வெட்டப்படுவது வழமையெனவும் -

அன்றைய தினம் காலையிலேயே மாடு வெட்டப்பட்டதால் சந்தேகம் கொண்ட பொதுச் சுகாதாரப் பரிசோதகர் இறைச்சியைச் சோதனையிட்டார் என்றும் -

அந்தச் சமயமே வெட்டப்பட்டது பசு மாடு என்பது தெரியவந்தது என்றும் - தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து பசு மாட்டின் இறைச்சி பறிமுதல் செய்யப்பட்டு நச்சுத் திரவம் ஊற்றி அழிக்கப்பட்டுப் பின்னர் புதைக்கப்பட்டது.

அத்துடன், இறைச்சிக் கடையினை நடத்துபவருக்கு 5 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. மறு அறிவித்தல் வரை இயங்கக் கூடாது என அறிவுறுத்தி இறைச்சிக் கடைக்கு 'சீல்' வைக்கப்பட்டது. (எ-117)

## யாழ்.போதனா வைத்தியசாலையில்

# அத்தியாவசியப் பிரிவுகளை நவீனமுறையில் அமைக்க உதவி

யாழ்ப்பாணம்,பெப்.20

யாழ்.போதனா வைத்தியசாலையில் அத்தியாவசியமான 4 பிரிவுகளை நவீன வசதிகளுடன் அமைத்துக் கொடுப்பதற்கு ஜப்பான் அரசு முன்வந்துள்ளது.

சத்திரசிகிச்சைக்கூடம், தொற்று நீக்கும் பிரிவு, ஆய்வுகூடம், றேடியோலோஜிஸ்ற் யூனிற் ஆகிய பிரிவுகளே நவீன வசதிகளுடன் அமைக்கப்படவுள்ளன.

இந்த 4 பிரிவுகளையும் உள்ளடக்கிய 3 மாடிக் கட்டடத்தை அமைக்கும் ஆரம்பக்கட்ட வேலைகளுக்காக ஜப்பான் அரசு குழுவொன்றை அனுப்பிவைத்துள்ளது.

வைத்தியசாலையில் தங்கி நின்று பணியாற்றும் இக்குழு, கட்டட நிர்மாணிப்புத் தொடர்பான விவரங்களைத் திரட்டி வருகின்றது.

ஓரிரு ஆண்டுகளில் இக்கட்டடம் அமைக்கப்பட்டுவிடும் என்று வைத்தியசாலை வட்டாரங்கள் நம்பிக்கை தெரிவிக்கின்றன. (8-15-202)

# வலி.மேற்கில் முகாமில் தங்கியிருப்போருக்கு உடன் நிவாரணம் வழங்குமாறு பணிப்பு

வலி.மேற்கு,பெப்.20

வலி.மேற்கில் நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள குடும்பங்களுக்கான கடந்த ஆண்டுக்கான இலவச உலர் உணவு நிவாரணத்தை உடனடியாக வழங்குமாறு சங்கானை ப.நோ.கூ.சங்கத்துக்குப் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

வலி.மேற்கு பிரதேச செயலர் சீ.ஏ. மோகன்றாஸ் இந்தப் பணிப்புரையை விடுத்துள்ளார்.

சங்கானை, சுழிபுரம் ஆகிய இடங்களிலுள்ள நலன்புரி நிலையங்களில் தெல்லிப்பழை, காங்கேசன்துறை போன்ற இடங்களில் இருந்து இடம்பெயர்ந்துள்ள சுமார் 300 குடும்பத்தினர் வசித்து வருகின்றனர்.

இந்தக் குடும்பங்களுக்குக் கடந்த ஆண்டு ஓகஸ்ட் மாதம் தொடக்கம் டிசெம்பர் மாதம் வரையிலான இலவச உலர் உணவு நிவாரணம் இன்றுவரை வழங்கப்படவில்லை.

இவ்வாறு, வழங்கப்படாதுள்ள ஐந்து மாதங்களுக்குமான நிவாரணத்தையே உடனடியாக வழங்குமாறு பிரதேச செயலர் மோகன்றாஸ் சங்கானை ப.நோ. கூட்டுறவுச் சங்க நிர்வாகத்துக்குப் பணிப்புரை விடுத்துள்ளார். (எ-175)

**நாளை**

*மாசி 09*
*திங்கட்கிழமை*
*21.02.2005*
*திதி : திரயோதசி*
*முழுவதும்*
*நட்சத்திரம் : புனர்பூசம்*
*காலை 07.26 வரை*
*பிரதோஷ விரதம்*
*சுபநேரம் : 12.31 - 02.01*
*ராகுகாலம் : 08.01 - 09.31*
*(யாவும் பழைய நேரப்படி)*

# தேசியமட்ட விழாவில் வெண்கலப் பதக்கம் பெற்றவருக்குப் பாராட்டு

தென்மராட்சி.பெப்.20

அகில இலங்கை ரீதியிலான தேசிய விளையாட்டுப் போட்டிகளில் வெண்கலப் பதக்கம் வென்ற மட்டுவிலைச் சேர்ந்த மாணிக்கவாசகர் பிரதீப்குமாருக்கு பாராட்டு விழா நடத்தப்படவுள்ளது.

மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக் கழகத்தினர் இந்தப் பாராட்டு விழாவினை இன்று பி.ப.2.30 மணிக்கு மட்டுவில் வடக்கு அ.த.க. பாடசாலையில் நடத்தவுள்ளனர்.

விழாக்குழுத் தலைவர் ந.மதனிகன் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் முதன்மை விருந்தினராகத் தென்மராட்சிப் பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசனும் -

சிறப்புவிருந்தினர்களாக யாழ்.மாவட்ட விளையாட்டு அலுவலர் இ.றோகான் இராஜசிங்கம், தமிழீழ விளையாட்டுத் துறைப் பொறுப்பாளர் கி.பாப்பா, நாடாளுமன்ற உறுப்பினர் ந.இரவிராஜ் ஆகியோரும் கலந்துகொள்வர்.

விழா நாயகனும், பயிற்றுநரும் இந்நிகழ்வில் கௌரவிக்கப்படவுள்ளனர். (எ-117)

# அரியாலையில் சட்டவிரோத மணல் அகழ்வு தொடர்கிறது

அரியாலை,பெப்.20

அரியாலைப் பகுதியில் சட்டவிரோதமாக மணல் அகழப்படும் சம்பவங்கள் நாளுக்குநாள் அதிகரித்துவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சட்டவிரோத மணல் அகழ்வுப் பணிகளுக்கு உழவு இயந்திரங்கள் மற்றும் லான்ட் மாஸ்ரர்களைப் பயன்படுத்துவதாகவும் கூறப்பட்டது.

குறிப்பாக, இரவு நேரங்களில் சட்டவிரோதமாக அகழ்ந்து ஏற்றிவரப்படும் மணல் அரியாலை மத்தி, மத்தி தெற்கு மற்றும் கச்சேரி கிழக்குப் போன்ற பகுதிகளில் தனியாருக்குச் சொந்தமான காணிகளில் பறிக்கப்பட்டு விற்பனை செய்யப்படுவதாகவும் - இது விடயமாக, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் எதுவிதநடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது. (எ-17)

**உதயவாக்கு**

நீ வாழ்க்கையைக் காதலிக்கின்றாயா? அப்படியானால் பொழுதை வீணாக்காதே. ஏனென்றால் வாழ்க்கையின் மூலப் பொருளே நேரம் தான்.

- பிராங்ளின்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னாள் பொலீஸ் அதிகாரியான உடுகம்பொல மீது வழக்குத் தாக்கல்

கொழும்பு,பெப்.20

அத்துருகிரிய மிலேனியம் சிற்றியில் செயற்பட்டுவந்த இராணுவப் புலனாய்வுப் பிரிவின் இல்லத்தை முற்றுகையிட்டு, அது பற்றிய விடயங்களை அம்பலப்படுத்தினார் என்ற அடிப்படையில் முன்னாள் பொலீஸ் உயர் அதிகாரி குலசிறி உடுகம்பொலவிற்கு எதிராகக் குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இக்குற்றப்பத்திரம் நேற்றுமுன்தினம் கண்டி மேல்நீதி மன்றில் சட்டமா அதிபர் சார்பில் தாக்கல்செய்யப்பட்டது.

குலசிறி உடுகம்பொல அரச இரகசியங்களைக் கசிய விட்டார் என்றும் -

இரகசியம் பேணிவந்த அரச அதிகாரிகளை அவர் சிறைப்படுத்தினார் என்றும் -

அவருக்கு எதிரான குற்றப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அப்போதைய இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் லயனல் பலகல்ல அடங்கலாக இராணுவத்தின் அப்போதைய உயர் அதிகாரிகள் பலருக்கு எதிராக முறையற்ற விதத்தில் வழக்குத் தொடர்ந்து உடுகம்பொல தொந்தரவு கொடுத்துவந்தார் என்றும் - கூறப்பட்டது.

உடுகம்பொலவிற்கு எதிராக எட்டுக் குற்றங்கள் சுமத்தப்பட்டுள்ளன. சாட்சிகள் 60 பேரும் குற்றப்பத்திரத்தில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இராணுவப் புலனாய்வுப் பிரிவின் மிலேனியம் சிற்றி மறைவிடத்தை 2002 ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி உடுகம்பொல அணியினர் சுற்றிவளைத்து, அங்கிருந்த இராணுவ அதிகாரிகளைச் சிறைப்படுத்தினர் என்று கூறப்படுகின்றது. (க-3)


## எங்கள் நெஞ்சை விட்டகலாத நினைவலைகள்

24ஆம் ஆண்டு



தோற்றம் 24 - 05 - 1908

மறைவு 10 - 02 - 1981

முதலாம் ஆண்டு



தோற்றம் 20 - 05 - 1920

மறைவு 03 - 03 - 2004

அமரர்கள்

**இ.சோமசுந்தரக் குருக்கள்** (காரைநகர்) திதி: சப்தமி

**சோ.கௌரியம்மா (ஆனந்தம்)** (கந்தரோடை) திதி: துவாதசி (இன்று)

**அன்பிற்குரிய ஐயாவே!**

எம்மைப் பெற்று வளர்த்து அல்லும் பகலும்
ஓய்வின்றி உழைத்து ஆளாக்கிய ஐயாவே!
நீர் சென்று நாலாறாண் டானாலும்
எம்மனத்தில் உம்நினைவு என்றும் நீங்காதையா!

**பாசத்திற்குரிய அம்மாவே!**

பாயிற் கிடக்காமல் நோயில் வாடாமல்
நொந்துடல் வருந்தாமல் காயத்தை ஒரு
நொடியிற் சுருக்கி நீர் விண்ணுலகெய்தி
வருடமொன்றான போதும் எம்மனம் ஆறவில்லையே!

உங்கள் ஆத்மா அமைதிபெற கந்தரோடை வற்றாக்கை விசாலாட்சி சமேத விசுவநாதரின் பாதங்களை இறைஞ்சுகின்றோம்.

கந்தரோடை. பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

(42104) (24-14)


## மும்மொழிப் பரீட்சை

யாழ்ப்பாணம்,பெப்.20

அரச கருமமொழிகள் திணைக்களத்தின் அனுசரணையுடன் அரச உத்தியோகத்தர்களுக்கென நடத்தப்பட்ட மும்மொழிப் பயிற்சிநெறியில் கலந்துகொள்பவர்களுக்கான பரீட்சை அடுத்த மாதம் 12 ஆம் திகதி வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இப்பரீட்சையில் 237 பேர் தோற்றவுள்ளனர். (10-75-117 -51)


## 31ஆம் நாள் ஆத்மசாந்திப் பிரார்த்தனை



தோற்றம் 01.06.1945 மறைவு 20.01.2005

கடந்த 20.01.2005 அன்று சிவபதமடைந்த எமது வித்தியாலய ஆசிரியரின் துணைவியான

**திருமதி இராஜேஸ்வரி சரவணபவானந்தன்**

அவர்களின் 31ஆம் நாள் நிகழ்வினை நினைவுகூர்ந்து அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

கிளி./ அக்கராயன் ம.வி.
அதிபர்,
ஆசிரியர்கள்.

(42219) (24-14)

## நீங்காத நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

செல்வன்
**சேனாதிராஜா முகுந்தன்**



பிறப்பு 04-05-1980
இறப்பு 08-10-2004

அன்பின் இருப்பிடமாய் பண்பின் சிகரமாய்
வாழ்ந்து மறைந்துவிட்டீர்!
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.

இன்று (20.02.2005) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறுகின்ற ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

எமது அன்புச் செல்வம் மறைந்தசெய்தி கேட்டு உடன்வந்து சகல வழிகளிலும் உதவி, ஒத்தாசைகள் புரிந்த நண்பர்களுக்கு எமது நெஞ்சம் நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

81, மணிக்கூண்டு வீதி, யாழ்ப்பாணம். (42225) (24-14) - N.தனபாலசிங்கம் (பெரியப்பா).




யாழ் நகரில்
குறைந்த விலையில்
நிறைந்த ரகங்கள்!
நிகரில்லாத் தரங்கள்!
அழகிய புடைவைத்
தினுசுகளின் சாம்ராஜ்யம்

மலிவு விலைதானா?
என்பதை அறிந்துகொள்ள
வீடு செல்லுமுன் ஒரு முறை விஜயம்
செய்து பாருங்கள்.

பலாலி வீதி, திருநெல்வேலிச் சந்தி,
திருநெல்வேலி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாற்றுச் சிறப்புகள் பொதிந்த கச்சதீவு அந்தோனியார் ஆலயம்

பல ஆண்டுகளாக ஆள் அரவமற்றுக் கிடந்த கச்சதீவுப் பிரதேசமும், பராமரிப்பின்றி, வழிபாடுகளின்றிக் காணப்பட்ட யாத்திரைத் தலமான புனித அந்தோனியார் ஆலயமும் கடந்த சில வருடங்களாக மீண்டும பிரபல்யம் அடைந்துவருவதைக் காணக்கூடியதாகவுள்ளது. கடந்த சில வருடங்களாக இந்தப் புனித யாத்திரைத்தலத்தில் இலங்கை, இந்தியா ஆகிய இரண்டு நாடுகளையும் சேர்ந்த மக்கள் ஒன்றிணைந்து திருவிழாவில் பங்கேற்று வருகின்றமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

இந்தியாவில் தென்கிழக்குக் கோடியில் ஆழமான கடல் சூழ்ந்த பாக்குநீரிணையில் - இந்தியாவின் இராமேஸ்வரப் பகுதியிலிருந்து 12 கடல்மைல் தூரத்திலும், இலங்கையின் நெடுந்தீவு மேற்குப் பகுதியிலிருந்து 11 கடல்மைல் தூரத்திலும் அமைந்துள்ளது கச்சதீவு. இந்தியாவானது இரண்டு முதல் மூன்று மைல் தூரத்திற்குட்பட்ட பிரதேசமாகக் காணப்படுகின்றது.

பிரதேசத்தைச் சுற்றிக் கடற்கரையை அண்டிய பகுதிகளில் மணற் பிரதேசமும், கற்பாறைகளும் காணப்படுவதுடன் இதன் நடுப்பகுதி சிறு மரங்களையும் படர்ந்த கொடிகளையும் கொண்டதாகக் காணப்படுகின்றது. அத்துடன் இத்தீவில் கோரை போன்ற கிழங்கு வகைகளும் பனி அவரைச் செடிகளும், ஏராளமான மூலிகை வகைகளும் காணப்படுவதுடன் கல்சியம் காபனேட் வகைக் கற்களும் அதிகமாகக் காணப்படுகின்றன.

### தீவின் தோற்றம்

இத்தீவின் தோற்றத்திற்குப் பல வகையான காரணங்கள் கூறப்படுகின்ற போதிலும் அதில் ஒரு வரலாற்றுக் காரணியின்படி இலங்கையில் இராம - இராவண யுத்தம் நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற வேளையில் இராவணனின் மகனான இந்திரஜித்தினால் ஏவப்பட்ட நாகபாணத்தால் இராமனின் படைகளில் அனேகர் அறிவிழந்து மரணம் அடைந்தவர்கள் போல் கிடந்தனர் என்றும்-

அப்போது இராமபிரான் அனுமானிடம் இந்தியாவின் மத்திய பகுதியிலுள்ள இறந்தவர்களை எழுப்பவல்லதான சஞ்சீவி மூலிகையைக் கொண்டு வருமாறு பணித்தார் என்றும். -

இதனையடுத்து சஞ்சீவி மலைக்குச் சென்ற அனுமான், சஞ்சீவி மூலிகை எப்படிப்பட்டதென்று அறியாமையால் விஸ்வரூபமெடுத்துச் சஞ்சீவி மலையை அடியோடு பெயர்த்து ஆகாய மார்க்கமாகக் கடலைக் கடந்து கொண்டு வந்தார் என்றும். -

அப்போது அவரது கச்சையிலிருந்து கொட்டிய மண்ணிலிருந்து இத்தீவு தோன்றியதென்றும், அதனாலேயே இத்தீவிற்குக் கச்சதீவு என்ற பெயர் வந்ததென்றும் கூறுவர்.

### கச்சதீவில் அந்தோனியார் கோவில்

1907 ஆம் ஆண்டு நெடுந்தீவு கிழக்கைச் சேர்ந்த ஆசிரியர் யோசப் சின்னத்துரை தலைமையில் கச்சதீவு சென்ற குழுவினர் இநத ஆலயத்திற்கு அடித்தளமிட்டதாகக் கூறப்படுகின்றது. பின்னர் அது படிப்படியாக விஸ்தரிக்கப்பட்டு உருவெடுத்து இன்று ஒரு ஆலயமாகக் காணப்படுவதுடன், கத்தோலிக்க மக்களின் யாத்திரைத்தலமாகவும் காணப்படுகின்றது.

பிற்பட்ட காலப்பகுதிகளில் இவ்வாலயத்தின் பராமரிப்பாளர்களாக (மூப்பர்களாக) நெடுந்தீவுப் பங்குத் தந்தையர்களின் கீழ் ஞானப்பிரகாசம் அந்தோனிப்பிள்ளை என்பவர் இருந்ததாகச் சொல்லப்படுன்றது. தற்போது இவ்வாலயத்தின் பராமரிப்பாளராகப் புலவர் ஏ.டபிள்யூ. அரியநாயகம் பணியாற்றி வருகின்றார். இந்த ஆலயம் யாழ்.மறை மாவட்டத்தின் நெடுந்தீவுப் பங்கிற்குட்பட்ட ஒரு யாத்திரைத்தலமாகும்.

இது இவ்வாறிருக்க, 75 ஆண்டுகளுக்கு முன் இந்தியாவின் இராமநாதபுரம் பகுதியில் மீன்பிடித்தொழிலில் ஈடுபட்டுவரும் மீனவர்களினால் புனித அந்தோனியாருக்கென ஒரு சிற்றாலயம் இத்தீவில் அமைக்கப்பட்டதென்றும், அது தமிழ்நாட்டு மீனவர்களினால் பராமரிக்கப்பட்டதென்றும் கடந்த காலங்களில் இத்தீவிற்குத் திருவிழாவிற்கு வந்த இந்திய மீனவர்களால் கூறப்பட்டு வந்தது.

எது எவ்வாறாகவிருப்பினும், திருவிழாக்காலங்களில் இரு தேசத்து மக்களும் இரண்டறக் கலந்து ஒற்றுமை உணர்வுடனும், நட்புறவுடனும், சமாதானத்துடனும் இந்த ஆலயத்தினைத தரிசித்து வழிபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

### கச்சதீவு ஆலயத்தின் புனிதத் தன்மைகள்

கச்சதீவில் ஆலயம் நிர்மாணிக்கப்பட்டுத் திருவிழாக் கொண்டாடத் தொடங்கிய ஆரம்பக் காலகட்டங்களில் இயந்திரங்கள் இல்லாத பாய்மரக் கப்பல்களில் திருவிழாவிற்கென மக்கள் 10-12 மணித்தியாலங்கள் வரை பயணம் செய்த காலம் உண்டு.

குடிதண்ணீர்த்தாங்கி முதல் கூடாரங்கள் அமைப்பதற்கான பொருள்கள் வரை ஏற்றப்பட்டுக் கச்சதீவுத் திருத்தல யாத்திரை ஆரம்பமாகும். யாத்திரையின் தொடக்கமே நீண்ட ஒரு வழிபாடு.

அம்மானைகள், பாடல்கள், தியான வாசினைகள் என்பன இடம்பெறும் என்றும் இவற்றில் யாத்திரிகர்கள் அனைவரும் ஒன்றித்த மனநிலையில் ஈடுபட்டிருக்கும் நிலை பார்ப்பவர்களைப் பரவசமடையச் செய்யும் என்றும் சுதேச வைத்தியர்களால் குணமாக்க முடியாத நோய்களால் பீடிக்கப்பட்டோர் நேர்த்திக்கடன் வைத்துக் கச்சதீவுப் புனித அந்தோனியார் பதியைத் தரிசித்து வந்து, நோய் நொடிகளிலிருந்து விடுபட்டதாகவும் முன்னைய காலப்பகுதிகளில் கச்சதீவு சென்று வந்த முதியவர்களால கூறப்படுகின்றது.

அத்துடன் இத்தீவைச் சுற்றியுள்ள கடற்கரையோரங்களில் கெபிகள் கட்டிப் புனித அந்தோனியாரின் திருச்சொரூபங்கள் வைக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.



திருச்சொரூப பவனியின் போது.....

### தேசங்களிடையே முரண்பாடு

1960 ஆம் ஆண்டையொட்டிய காலப்பகுதியில் இக்கச்சதீவு உற்சவமானது இலங்கைக்கும் - இந்தியாவுக்கும் இடையே சில சர்ச்சைகளைக் கிளப்பத் தொடங்கியது. ஆலயத் திருவிழாவைச் சாட்டாக வைத்து இலங்கைக்குள இந்தியர்களின் ஊடுருவல்கள், இலங்கை - இந்தியப் பொருள்களின் பண்டமாற்று, கள்ளக்கடத்தல் வியாபாரம், படகுக்காரர்களின் பணம் பறிகும் தந்திரோபாயம் போன்றன தலையெடுக்கத் தொடங்கின.

திருவிழாவைச் சாட்டாக வைத்து மேற்கொள்ளப்பட்ட இச் செயற்பாடுகள் இலங்கை அரசிற்கு ஓர் அச்சுறுத்தல் தன்மையைத் தோற்றுவிக்கத் தொடங்கியது. இந்த நிலையில், இருநாட்டு அரசுகளிடையேயும் கச்சதீவு இலங்கைக்கா இந்தியாவிற்கா சொந்தமானது என்ற அடிப்படைப் பிரச்சினை எழத்தொடங்கியது.

இப்பிணக்கைத் தீர்ப்பதற்காக இலங்கை அரசு பல்வேறு மட்டங்களிலிருந்தும் பல தரவுகளைச் சேகரிக்கத் தொடங்கியது. இதன்படி 18 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் எழுதப்பட்ட சில கையெழுத்து ஓலை ஏடுகளின்படி கச்சதீவானது நெடுந்தீவு மேற்கைச் சேர்ந்த "மணியக்காரர்" ஒருவரின் கண்காணிப்பின் கீழ் இருந்ததாகவும், நெடுந்தீவு மேற்கைச் சேர்ந்த வேலாயுத உடையார் தனது மகளான குஞ்சியடி என்பவருக்குக் கச்சதீவின் செழிப்பான ஒரு பகுதியினைச் சீதனமாகக் கொடுத்தார் எனவும் சொல்லப்படுகின்றது.

இலங்கையை ஆண்ட ஆங்கிலேயர் இலங்கையைப் பல படிமுறையான நிர்வாக அலகுகளாகப் பிரித்தபொழுது கச்சதீவை நெடுந்தீவு மேற்குக் கிராம நிர்வாக அலகுக்குள் உட்பட்டதாகக் கணித்திருந்ததாகவும் கூறப்படுகின்றது.

இந்த நிலையில், கச்சதீவுப் பிரதேசமானது இலங்கைக்குத்தான் சொந்தமானது என்ற நிலைப்பாடு தென்னிந்தியச் செய்தி ஊடகங்களில் பரவலாக வெளிவரத்தொடங்கியதும் அந்நாட்டு அரசும் கச்சதீவுப் பிரதேசமானது இந்தியாவிற்குத் தான் சொந்தமானது என தங்களது அறிக்கைகளையும், நிலைப்பாடுகளையும் வெளியிடத் தொடங்கியது.

இருந்தும், 1974ம் ஆண்டு இந்தியப் பிரதமர் இந்திராகாந்தி, இலங்கைப் பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கா ஆகியோரிடையே உருவான நல்லெண்ண ஒப்பந்தத்தின்படி கச்சதீவு இலங்கைக்குக் கையளிக்கப்பட்டது.



பக்தர்கள் படகில் பயணிக்கையில்.....

இலங்கை ஒப்பந்தத்தின்படி கச்சதீவு அந்தோனியார் கோவிலில் ஆண்டு தோறும் நடைபெறும் உற்சவ நிகழ்வுகளில் கலந்து கொள்ள இருநாட்டு மக்களும் கடவுச்சீட்டு, விஸா போன்ற எவ்வித ஆவணங்களுமின்றிக் கலந்து கொள்வதற்கான ஏற்பாடுகளும் வரையறுக்கப்பட்டிருந்தது.

இதனிடையே, ஏற்கனவே கச்சதீவு தொடர்பான ஒப்பந்தம் ஒன்று இருநாட்டு அரசுகளாலும் மேற்கொள்ளப்பட்டிருக்கின்ற போதிலும் இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்பரப்புக்குள அத்துமீறித் தொழிலில் ஈடுபட்டுவரும் வேளைகளில் இலங்கைக் கடற்படையினரால் தாக்கப்படும் சந்தர்ப்பங்களில் கச்சதீவு தொடர்பான சர்ச்சை மீண்டும்மீண்டும் எழுந்து கொண்டே இருக்கின்றது.

கச்சைதீவானது இந்தியாவிற்குத்தான் சொந்தமானது என்ற வகையில் தொன்மை ஆவணங்களையும், செப்பேடுகளையும் மேற்கோள் காட்டி இந்திய அரசியலமைப்பு திருத்தத்தின் ஊடாகவே கச்சதீவுப் பிரதேசமானது இலங்கையரசிற்குக் கையளிக்கப்பட்டது.

எனவே, அத்திருத்தத்தை மாற்றியமைத்துக் கச்சதீவுப் பிரதேசத்தினை மீளப்பெற்றுக் கொள்ளுமாறு இந்தியாவின் தமிழ்நாட்டு மாநில அரசு மத்திய அரசிற்கு அழுத்தம் கொடுதது்க் கொண்டிருக்கின்ற நிலைப்பாடுகளையும் இனறு காணக்கூடியதாகவுள்ளது.

### திருவிழா நிறுத்தம்

இது இவ்வாறிருக்க இலங்கையின் இனப் பிரச்சினையானது தீவிரமான காலப்பகுதிகளையடுத்து இலங்கைக் கடற்படையினருக்கு அஞ்சி உரிய பாதுகாப்பு இன்மையால் அச்ச உணர்வுகொண்டு மக்கள் கச்சதீவிற்குச் செல்லாததையடுத்துக் கச்சைதீவுத் திருவிழா நீண்ட காலமாக நிறுத்தப்பட்டது.



ஆலயத்தின் தோற்றம்

இதன்போது சில சந்தர்ப்பங்களில் தொழிலின் நிமித்தம் இடையிடையே அங்கு சென்றுவரும இருநாட்டு மீனவர்களை விட, ஏனைய காலப் பகுதிகளில் ஆள் அரவமற்ற ஒரு வனப்பிரதேசமாகவே காணப்பட்டு வந்தது.

### மீண்டும் திருவிழா

பல ஆண்டுகள் கவனிப்பாரற்ற நிலையிலும் சேதங்களுக்கு உட்பட்ட நிலையிலும் புற்புதர்களும் ஏனைய கொடிவகைகளும் படர்ந்திருந்த ஆலயத்தினிடையே 2001ஆம் ஆண்டு அப்போதைய நெடுந்தீவுப் பங்குத் தந்தையாகவிருந்த அருட்திரு எம்.எம்.லூயிஸ் மொன்பேட் அடிகளார் தலைமையிலான குழுவினர் நெடுந்தீவிலிருந்து ஒருநாள் பயணமாகக் கச்சதீவு சென்று ஆலயத்தினைத் தரிசித்துவிட்டு எளிமையான முறையில் திருப்பலியினை நிறைவேற்றிவிட்டு அன்றைய தினமே உடன் நெடுந்தீவு திரும்பியிருந்தனர்.

பின்னர் 2002ஆம் ஆண்டு இந்த ஆலயத்தின திருவிழாவைச் சிறப்புற நடத்துவதன் பொருட்டு விரிவான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

இதன் முதற்கட்டப் பணியாக பெரும் சேதத்திற்கு உள்ளாகிக் காணப்பட்ட இவ்வாலயத்தின் மீள்கட்டுமானப் பணிகள் அமைந்திருந்தன. இதன்படி, பங்குத்தந்தை அருட்திரு எம்.எம் லூயிஸ் மொனபேட் அடிகளார் தலைமையிலும் ஆலயத்தின் மூப்பர் ஏ.டபிள்யூ அரியநாயகம் தலைமையிலும் பல ஆயிரம் ரூபா கட்டடப் பொருள்களுடன் ஒரு குழுவினர் கச்சதீவு சென்று இரு வாரங்கள் தங்கிநின்று ஆலயத்தினைப் புனருத்தாரணம் செய்து மெருகூட்டியிருந்தனர்.

பின்னர் இதே ஆண்டு மார்ச் மாத நடுப்பகுதியில் மூன்று நாள் ஆயத்த வழிபாடுகளுடன் ஆலயத்திருவிழா நடைபெற்றது. இந்த ஆயத்த வழிபாடுகளிலும், இறுதிநாள் திருவிழாவிலும் மீண்டும். பெரும்பாலான இரு தேசத்து மக்களும் தங்கள் உறவுகளைப் புதுப்பித்துக்கொள்ளும் உணர்வுகளுடனும், புதிய உறவுகளை ஏற்படுத்தும் எண்ணங்களுடனும் அங்குகூடி இரு தேசத்துக் குழுக்களினாலும் சேர்ந்து நிறைவேற்றப்பட்ட திருவிழாத் திருப்பலியில் கலந்துகொண்டனர்.

நெடுந்தீவுச் செய்தியாளர்

### கச்சதீவுக்கு வந்திருந்த இந்திய ஊடகவியலாளர்கள்

2003ஆம் ஆண்டு திருவிழாவானது மார்ச் மாதம 6 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. திருவிழாவின் இறுதிநாள் நிகழ்வுகள் 8ஆம, 9ஆம் திகதிகளில் மிகவும் சிறப்புற நடைபெறலாயிற்று.

இரு தேசத்துக் குழுக்களினாலும் உலகில் நீதியான சமாதானத்தை வேண்டி ஒப்புக்கொடுக்கப்பட்ட திருவிழாத் திருப்பலியில் இரு தேசத்து மக்களும் பெருமளவு ஒன்று கூடியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதனிடையே இத்திருவிழாவில் இந்தியாவில் உள்ள செய்தி ஊடகங்களின் செய்தியாளர்கள், பத்திரிகையாளர்கள் பலரும் அங்கு ஒன்றுகூடியிருந்தனர்.

இவ்வருட விழாவிற்கான முன்னாயத்த நடவடிக்கைகளைத் தற்போதைய நெடுந்தீவுப் பங்குத் தந்தை அருட்திரு எஸ.செபநேசரட்ணம் அடிகளாராலும், நெடுந்தீவு உதவி அரச அதிபா பணிமனையாலும் பிரதேச சபையினாலும் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

### ஒருநாள் திருவிழா

2004ஆம் ஆண்டு திருவிழாவானது பயணிகள போக்குவரத்துச் சேவைக்கெனப் போதிய படகுகள் இல்லாத காரணத்தினாலும், போதிய நிதி ஏற்பாடுகள் கிடைக்காத காரணத்தினாலும் திருவிழாவானது ஒரேயொரு நாள் மட்டும் கொண்டாடப்பட வேண்டிய நிலை ஏற்பட்டது.

இவ்விழாவில் இருநாட்டு மக்களும் மிகக் குறைந்த அளவிலேயே கலந்துகொண்டனர்.

மேலும் இவ்வருடத் திருவிழா எதிர்வரும் 19ம் 20ம் திகதிகளில் இருநாள்கள் நடைபெறவுள்ளது. இரு நாள்கள் நடைபெறவுள்ள திருவிழாவில் இம்முறை இரு தேசங்களையும் சேர்ந்த பெருமளவு மக்கள் ஒன்று கூடுவர் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களின் தேவைகளையும் நிறைவு

# தமிழரசி நெகிழுத் தொ

## உங்கள் சந்தையில்

**சூழல் கெடுவதைத் தடுத்து, இயற்கையோடு இசைவாக்கம**

**வேதியல் பொருள்கள் கலந்து ஆக்கப்பட்ட நெகிழ**

## இப்பொழுது உங்கள்

**உலகின் வளர்ச்சி அடைந்த முன்னணி நாடுகள், சூழல் பாதுகாப்புக்**

**தரத்திற்கு இணையாக நம்நாட்டில் ஆக்கஞ்செய்**

# தமிழரசி:

**வேதியல் பொருள்கள் கலந்த**
**எமது நெகிழ ஆக்கங்களான**

* நெகிழப்பைகள் (சொப்பிங்பாக், குறோசறி பாக் )
  உணவுத்தாள்கள் (லஞ்சீற்)
* வாணிபப் பெயர்கள் பொறிக்கப்பட்ட நெகிழப்பைகள் (பிறின்டிங் பாக்)
* நெகிழத்தாள்கள் (பொலித்தீன் வகைகள்)

வேதியல் பொருள்கள் அடங்கிய
இவ்வாக்கங்களின் பயன்பாடு ஓராண்டு நிறைவில் செ
மண்ணோடு கலந்துவிடும். இதனால், சூழல் கெடுவது தடுக்
பொருள்களின் சேர்க்கை ஆனது, நுகர்வோருக்கு எத்தகை
விளைவிக்காது. நேரடியாகக் கதிரவனின் ஒளிபடுமிடங்களில்
இதன் பயன்பாட்டுக் காலங்குறைவடையும். இவ்வாக்கப்பொ
காலத்தின் தேவையறிந்து, வேதியல் பொருள்களின்
வேறுபட்ட அளவுகளில்சேர்க்கப்படுகின்

| | |
|---|---|
| **வன்னியில், எமது முகவராண்மையாளர்,** | **யாழில், எமது முகவராண்மைய** |
| மருதம் அணைகலன் வாணிபம்<br>யாழ்சாலை, கிளிநொச்சி.<br>தொ.பே.இல-021 228 5880, 228 5706 | ஆஞ்சநேயர் வாணிபப்<br>திருநெல்வேலி, யாழ்ப்பான<br>தொ.பே.இல-0773024507, 02 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# றவு செய்து சூழலையும் பாதுகாக்க,

# தொழிலைக ஆக்கங்களி

## ில் நீங்கள் பெற்றுக்கொள்ள

ாக்கமடைந்து உக்கி, அழிந்து மண்ணிற்கு வளஞ்சேர்க்கும்
நகிழப்பைகள், பொதிசெய்பொருள்கள், தாள்கள்

## ள் கைகளில் கிடைக்க,

களப்புக்குகந்த வகையில் ஆக்கஞ்செய்யும் நெகிழ ஆக்கங்களின்
ஞ்செய்து வழங்கும் தனித்துவமான நிறுவனம்

# சி: நெகிழத் தொழிலகம்

**நுகர்வோரே! எங்கள் வேண்டுதல்.**

சூழலின் நலன் கருதி ஆக்கப் பெறும் எமது பொருள்கள் பற்றி, சூழல் நலனில் அக்கறை கொள்ளாதோரும் வாணிப நோக்கங்கருதிய சிலரும் நுகர்வோர் மனங்களில் அச்சத்தினை உண்டாக்கும் பொய்களைப் பரப்புகின்றனர். இதனைப் பற்றி மக்கள் அச்சங்கொள்ளத் தேவையில்லை.

* சந்தையில் ஏற்படும் நெகிழப்பைத் தட்டுப்பாடு தற்காலிகமானதே. மிகவிரைவில் இத்தட்டுப்பாட்டை நீக்கி, உங்கள் தேவையை நிறைவு செய்வோம். எங்கள் ஆக்கங்கள் உங்கள் கைகளை வந்தடைவதில், உங்கள் ஆர்வமும் அக்கறையுமே எங்கள் வேண்டுதல்.

ாங்கிய
ுவில் செயலிழந்து உக்கி,
து தடுக்கப்படும். இவ்வேதியல்
 எத்தகைய நலக்கேட்டையும்
ங்களில் இதனை வைத்திருந்தால்
கப்பொருள்களின் பயன்பாட்டுக்
களின் உள்ளடக்க வீதம்
படுகின்றன.

**சூழல் நலன் காப்போம்: மக்களின் தேவையை நிறைவு செய்வோம்.**


மையாளர்,

ணிபம்,
ழ்ப்பாணம்.
7, 0214590962.

**தமிழரசி நெகிழத்தொழிலகம், கிளிநொச்சி.**
**தொ.பே.இல: 021 228 5909.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐந்தாம் மாத நினைவலைகள்



## அமரர்
# சேனாதிராஜா முகுந்தன்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 04-05-1980 | 08-10-2004 |

பாசத்துடன் பழகிய பாசமுகம் பாதியிலே போனதேனோ?
நேசத்துடன் எம்மை நேசித்த முகுந்தனே!
நீ ஏன் எம் நேசங்களை எல்லாம் மறந்தாய்?
உன் பொன்னான இன்முகமும் என்றும்
எம் மனதில் உலா வருகின்றது!
நிஜமாக உலா வர நீயில்லையே – என்று
ஏங்கித் தவிக்கும் உன்னுடன் உறவாடிய....

இல.81, மணிக்கூண்டு வீதி,
யாழ்ப்பாணம்.

நண்பர்கள்.

(C/41048) (24)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுனாமியால் திணைக்களத்துக்குக் கணிசமான சேதம்: எனினும் இறப்புச் சான்றிதழ் வழங்குவதில் மும்முரம்

சுனாமி இயற்கையனர்த்தம் வடக்கு - கிழக்குப் பிரதேசங்களைப் பெருமளவில் பாதித்தது அனைவரும் அறிந்ததே. இந்த இயற்கை அனர்த்தத்தால் பிறப்பு - இறப்புப் பதிவுகளில் ஏற்பட்டுள்ள சிக்கல்கள் தொடர்பாக ஆராய்வதற்கென வடக்கு - கிழக்கு பிரதிப் பதிவாளர் நாயகம் ந.சதாசிவஐயர் முல்லைத்தீவு மற்றும் கிழக்குப் பிரதேசங்களுக்கு அண்மையில் விஜயம் செய்திருந்தார்.

முல்லைத்தீவு மற்றும் கிழக்கின் நிலைமைகள் தொடர்பாக அவர் உதயனுக்கு அளித்த விசேட செவ்வியின் தொகுப்பு இது.



★ *கேள்வி:* அண்மையில் நீங்கள் வடக்கு-கிழக்குப் பிரதேசங்களுக்கு மேற்கொண்ட விஜயம் தொடர்பாக....?

✪ *பதில்:* நான் வடக்கு - கிழக்குப் பிரதிப் பதிவாளர் நாயகம் என்ற வகையில் எனது கடமைப்புலத்தின் கீழ் அடங்கும் பருத்தித்துறை

## வசதியீனங்களின் மத்தியிலும் சளைக்காது தொடரும் பணி

முதல் பொத்துவில் வரையான சகல கரையோரப் பிரதேசங்களையும் நேரில் சென்று பார்வையிட்டேன்.

இந்த விஜயத்தின்போது சுனாமி இயற்கை அனர்த்தத்தால் உயிரிழந்தவர்களின் பதிவுகளை மேற்கொள்வதற்கு வேண்டிய படிவங்களையும், புத்தகங்களையும் அந்தந்தப் பிரதேசங்களுக்கு வழங்கியுள்ளதுடன், சில நடவடிக்கைகளையும முன்னின்று ஆரம்பித்துவிட்டு வந்தேன்.

சகல நீதிமன்றங்கள், திடீர் மரண விசாரணை அதிகாரிகள், கிராம சேவையாளர்கள், பிரதேச செயலர்கள், பதிவாளர்கள் என அனைவருமே சுனாமி இறப்புப் பதிவுகளை மேற்கொள்வதற்குத் துரித நடவடிக்கைக்ளை மேற்கொண்டுள்ளனர்.

இன்றுவரை 30 வீதத்திற்கு மேற்பட்ட இறப்புக்கள் பதிவாகிவிட்டன. அடுத்த மாத இறுதிக்குள் 75 வீதமான இறப்புகள் பதிவாகிவிடும் என எண்ணுகின்றேன்.

★ *கேள்வி:* வடக்கு - கிழக்கில் சுனாமியால் உங்கள் திணைக்களத்திற்கு ஏற்பட்ட பாதிப்புகள் பற்றி...?

✪ *பதில்:* சுனாமியால் பல இடங்களிலுள்ள எமது திணைக்களங்களும் பெரும் பாதிப்பைச் சந்தித்துள்ளன. முல்லைத்தீவு மாவட்டத்தில் எமது அலுவலகத்தில் 30 வீதம் மட்டுமே எஞ்சியுள்ளது. அலுவலகத்திற்கென வழங்கிய ஜெனரேட்டர், போட்டோக்கொப்பி இயந்திரம் அனைத்துமே பழுதடைந்துவிட்டன.

பொத்துவிலில் உள்ள மாவட்டப் பதிவகமும், முல்லைத்தீவு போன்றே அழிவடைந்துள்ளது. கரையோரங்களில் அமைந்திருந்த விவாக, இறப்பு, பிறப்பு அலுவலகங்கள் சிலவும் சேதமடைந்துவிட்டன. இவற்றையெல்லாம் சீர் செய்வதற்குக் காலதாமதமாகலாம்.

★ *கேள்வி:* சுனாமி அனர்த்தத்தின் பின் உங்கள் திணைக்களச் செயற்பாடு பற்றி...?

✪ *பதில்:* எமது திணைக்களம் 150 வருடப் பழைமை வாய்ந்தது. இன்னமும் பழைமை மாறாது; மாற்றப்படாது உள்ளது.

யுத்தம் காரணமாகப் பாதிப்படைந்த நிலையில் எமது அலுவலகத்திற்கு வேண்டிய கட்டடம், தளபாடம், உபகரணம், ஊழியர் என எவ்வித வசதியும் போதியளவு எமக்குக் கிடைக்கவில்லை. நாம் அரச அதிபரிலும், அரச சார்பற்ற நிறுவனங்களிலும் பெருமளவு தங்கியுள்ளோம்.

தற்போது சுனாமித் தாக்கத்தின் பின்னான வேலைகளுக்கும் நாங்கள் இவர்களையே தங்கியிருக்கவேண்டியுளளது. அனர்த்தம் காரணமாக யாழ். மாவட்டத்தில் விண்ணப்பதாரிகளின் தொகை 3 மடங்காக அதிகரித்துள்ளது. பாதிப்பிற்கான நிவாரணத்தைப் பெறவும், தொலைந்துபோன ஆவணங்களைப் பெறும் நோக்கிலும், வெளிநாட்டு விசாக்களைப் பெற்றுக் கொள்வதற்குமென விண்ணப்பதாரிகள் பெருமளவில் வருகின்றார்கள். அவர்களுக்கு உதவிசெய்வதற்கு எமது திணைக்கள உத்தியோகத்தகர்களும் ஆயத்தமாகவே உள்ளனர்.

ஆனால், வேலைத்திட்டங்களை முன்னெடுப்பற்கு வேண்டிய உபகரணத் தொகுதிகள் போதியளவு எம்மிடம் இல்லை. சில நிறுவனங்களின் உதவியுடனேயே நாம் பணி செய்கின்றோம். உதாரணமாக, அண்மையில் 'உதயன்'

**செவ்வி:**
**தீபா - தயா**

பத்திரிகை நிறுவனத்தினர் எமது அலுவலகத்திற்கு அத்தியாவசியத் தேவையான போட்டோக் கொப்பிப் பேப்பர், பேனா என்பவற்றைத் தந்துதவியுள்ளனர். இதன்மூலம் தற்போது அதிகரித்துள்ள பதிவுத் தேவைகளை ஓரளவுக்கு நிறைவேற்றிக் கொள்ளமுடிகிறது.

இவ்வாறு ஏனைய நிறுவனங்களும் எமது திணைக்களத்திற்கு உத்விசெய்ய முன்வர வேண்டும். இதன் மூலம் நாங்கள் பதிவுப் பணிகளை செவ்வனே நிறைவேற்றிக்கொள்ள முடியும்.

★ *கேள்வி:* தொடரவுள்ள உங்கள் பணிகள பற்றி....?

இந்தச் சுனாமியால் வடக்கு - கிழக்கில் எமது திணைக்களத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர்களும் பாதிக்கப்பட்டுள்ளனர். ஆயினும், அவர்கள் பணி செய்வதற்குத் தயாராகவேயுள்ளனர்.

மக்கள் சகல ஆவணங்களையும் இழந்துவிட்டனர். ஆயினும், அவர்கள் இன்னமும் இயல்பு வாழ்வுக்குத் திரும்பாததனால், ஆவணப்படுத்தலில் அக்கறை கொள்ளவில்லை.

அத்துடன், பயப்பிராந்தியும் இன்னும் அவர்களை விட்டு விலகவில்லை.

உதாரணத்திற்கு கடந்தமாதம் 28ஆம் திகதி நான் முல்லைத்தீவில் பணியாற்றிக் கொண்டிருந்தேன். அப்பொழுது மீண்டும் சுனாமி வந்துவிட்டதாக மக்கள் எல்லோரும் அல்லோல கல்லோலப்பட்டு அவ்விடத்தைவிட்டு வெளியேறினர். சிறிது நேரத்திற்குள் அந்த இடமே வெறிச்சோடிப் போய்விட்டது. அன்றைய தினம் பல்வேறு இடங்களில் இந்தப் பயப்பிராந்தி நிலவியுள்ளது.

இந்த நிலைகளிலிருந்து மக்கள் வெளியேறி அமைதியான சூழ்நிலை உருவானவுடன் ஆவணப்படுத்தலில் அக்கறை கொள்ள வேண்டும். அவர்களுக்கு உதவிசெய்ய நாங்கள் தயாராகவுள்ளோம்.

ஆயினும், எமது பணியைச் செய்வதற்கு நிறுவனங்கள் உதவிசெய்ய முன்வரவேண்டும். ★

## சுனாமிப் பேரழிவில் வாழ்வோர் மத்தியில் அன்புப் பணிபுரிவோம்

**தவக்காலச் சிந்தனை**

**பன்னிரண்டாம் நாள்**

தவக்காலம் மனமாற்றத்தின் காலமாகும் எமது அன்றாட பழைய பாவ வாழ்வை விட்டுப் புண்ணியம் நிறைந்த ஒரு புதிய வாழ்வை வாழ எம்மை அழைக்கின்ற ஒரு காலமாகும். இக்காலத்தில் எமது எண்ணமும் சிந்தனைகளும் வாழ்வும் பணியும் மனமாற்றத்தை தருவதாகவும் அதுபற்றிச் சிந்திக்க அழைப்பதாகவுமே அமைய வேண்டும்.

தவக்காலத்தின் இரண்டாவது ஞாயிறு வாரமான இன்றைய நற்செய்தி வாசகத்தில் இயேசுவின் தோற்ற மாற்ற நிகழ்வு எமக்குத் தரப்படுகின்றது. இந் நிகழ்வு யேசுவின் இறைத்தன்மையை உணர்த்தும் முக்கிய நிகழ்வாகும். இந்த நிகழ்வை தவக்காலத் தின் ஒவ்வோர் இரண்டாவது ஞாயிறு வாரத்திலும் நாம் சிந்திக்கின்றோம். மத்தேயு, மாற்கு, லூக்காஸ் என்கின்ற மூன்று நற்செய்தியாளர்கள் இச்சம்வத்தைத் தெளிவாகப் படம்பிடித்துக் காட்டுகின்றார்கள்.

இங்கு இயேசுவின் வாழ்வில் நிகழ்ந்த இரண்டு அனுபவங்களை நாம் ஒப்புநோக்குவோம். அதன்வழி எமது தவக்கால வாழ்விற்கு அர்த்தமும் ஆழமும் கொண்டுவர முற்படுவோம். இந்த இரண்டு அனுபவங்களும் இரண்டு மலைகளில் நிகழ்ந்த அனுபவங்களாகும். தபோர் மலையில் இயேசு தோற்ற மாற்றம் பெற்றார். இது ஒரு மகிழ்வான அனுபவமாகும். ஒலிவ மலையில் ஜெஸ்தமனித் தோட்டத்தில் இயேசு மரண வேதனைப்பட் டார். இது ஒரு வேதனை மிக்க அனுபவமாகும். இயேசுவின் வாழ்வில் நிகழ்ந்த இந்த இரண்டு மலை அனுபவங்களும் எமது வாழ்வில் நாம் சந்திக்கின்ற எமது அனுபவங்களுக்கு உறுதியும் உரமும் சேர்க்கின்ற அனுபவங்கள் ஆகவேண்டும்.

இயேசுவின் தபோர் மலை உருமாற்ற நிகழ்வும் ஒலிவமலை ஜெஸ்தமனி அனுபவ நிகழ்வும் அவர் வாழ்வின் இரண்டு பக்க அனுபவங்களாகும். இந்த இரண்டு அனுபவங்களின்போதும் பேதுரு, யாக்கோப்பு, யோவான் என்ற மூன்று சீடர்களும் அன்புக்குரியவர்களாக அவருக்கு அருகில் நிற்கிறார்கள். தபோர் மலை ஒளிமிகுந்த மகிழ்ச்சியான காட்சி மாட்சிமை மிக்க இறைத்தன்மையைக் காட்ட, ஒலிவ மலை துன்பம் மிக்க பாடுகளின் காட்சி மனிதத்தன்மையை காட்டுகின்றது. இந்த இரண்டு அனுபவங்களின் போதும அவரோடு இருந்த சீடர்கள் அளவுகடந்த மனித உணர்வு நிலைக்கு போகிறார்கள். முதற்கட் டத்தில் அளவுமிகுந்த மகிழ்ச்சியால் இங்கே மூன்று கூடாராம் அமைத்து தங்குவோம் என்று தாம் பேசுவது இன்னதென்று தெரியாமலே பேசுகிறார்கள். இரண்டாவது கட்டத்தில் சோகமும் துயரமும் கலக்கமும் கவலையும் நிறைந்தவர்களாய் விழுந்து தூங்கிவிடுகிறார்கள். வலுவற்ற மக்களாக சோர்ந்துவிடுகிறார்கள். இந்த இரண்டு நிலைகளிலும் இயேசு அவர்களுக்கு உறுதி கொடுக்கிறார். அதேவேளை இந்த இரண்டு அனுபவங்களின்போதும் இறைத் தந்தையிடம் இருந்து இயேசு உறுதி பெற்றுக்கொள்கிறார்.

இன்பமும் துன்பமும் மகிழ்வும் கலக்கமும் வாழ்வின் இரண்டு பக்கங்கள். என்ன நடந்தாலும் எல்லாவற்றையும் இறைசித்தம் என ஏற்பது இலகுவானதல்ல. இந்த இரண்டு அனுபவங்களை ஏற்றுக்கொள்வதும் தாங்கிக்கொள்வதும் அவற்றின் வழி நடந்து வருவதும் மனித வாழ்வில் முன்னேற்றம் காணத் தேவையான அனுபவப்படிகளாகும். சுனாமி இயற்கைப் பேரழிவு அமைதியாக இருந்த வாழ்வினை எதிர்பாராத விதமாக ஆட்டம் காணச் செய்து குழப்பி விட்டிருக்கின்றது. எல்லோரும் மனிதர்கள். எல்லோருக்கும் எப்போதும் துன்பங்களும் துயரங்களும் வேதனைகளும் வரலாம் அவ்வேளைகளில் நாம் ஒன்றாக உறுதியாக இருப்பது எமக்குத் தேவையானது என்பதை இந்த அனுபவம் காட்டி நிற்கின்றது. இந்த அனுபவங்களை எல்லாம் இறைசித்தமாக எற்பதும் இத்துன்பங்களில் துயருறுவோருக்கு மன ஆறுதல் தரும் வார்த்தைகளைச் சொல்லுவதும் அவர்களை மீளவும் வாழ முடியும் என்ற நம்பிக்கைப்படிகளில் அழைத்துச் செல்வதும் எமது முக்கியமான பணியாகும். இப்பணியினைச் சிறப்புறச் செய்ய இத் தவக்காலம் எமக்கு அழைப்புவிடுத்து நிற்கின்றது.

அருள்திரு. ரூபன் மரியாம்பிள்ளை.

# சிலிங்கோ காப்புறுதி நிறுவனத்தின் கல்விச் சாதனையாளர் பரிசில்கள் அதிகரிப்பு

Ceylinco Life காப்புறுதி நிறுவனம், வருடந்தோறும் வழங்கிவரும் 'பிரணாம' பரிசில்களை இந்த வருடம் அதிகரித்துள்ளது. அதன பிரகாரம் 243 ஆக இருந்த புலமைப்பரிசில்கள் மேலும் 237 பரிசில்களைச சேர்த்து 480 பரிசில்களாக உயர்ந்துள்ளன.

இம்முறை இடம்பெற்ற நான்காவது 'பிரணாம'ப் பரிசளிப்பு விழாவின்போதும் இப்பரிசுகள் அனைத்தும் வழங்கப்பட்டன. நாட்டின் அனைத்து மாவட்டங்களையும் சேர்ந்த கல்வியில சாதனை படைத்த மாணவர்களுக்கு இப பரிசில்கள் வழங்கப்பட்டன. இப்பரிசளிப்பு விழாவில் கலந்துகொண்ட Ceylinco Consolidated நிறுவனத்தின் பணிப்பாளர் சிசிலி கொத்தலாவல உரையாற்றுகையில்:-

ஒருவரின் முன்னேற்றத்திற்குக் கல்விதான் மிக முக்கியமானது என்று நாம் நம்புகின்றோம். இந்தக் கல்வி மூலம்தான் எதிர்காலத் தலைவர்கள் உருவாகுவர். இவ்வாறானவர்களின் எதிர்காலத்திற்கு உதவுவதே எமது நோக்கு -

Ceylinco Life காப்புறுதி நிறுவனம் ஒரு வெற்றிகரமான நிறுவனம் என்பதால், நாம் இன்றைய சமுதாயத்தின் நல்வாழ்வுக்காக மிகவும் அர்ப்பணிப்புடன் செயற்படுவோம் -

இந்தப் 'பிரணாம' (கல்விச் சாதனையாளர்) பரிசில் திட்டத்திற்கு நாம் தொடர்ந்து நிதியுதவிகளை வழங்குவோம். எமது காப்புறுதியாளர்களின் வாழ்வை மேம்படுத்தவும் நாம் பல வழிவகைகளை உண்டுபண்ணுவோம் - என்று கூறினார்.

Ceylinco Life இன் பிரதம நிறைவேற்று அதிகாரி ஆர்.ரங்கநாதன் உரையாற்றுகையில் கூறியதாவது-

ஆழிப்பேரலை அனர்த்தத்தால் அதிகளவான மாணவர்கள் மரணமடைந்துவிட்டனர். அவர்களில் அதிகமானோர் நாளைய தலைவர்களாக வந்திருக்கமுடியும். அனர்த்தத்தில் இருந்து உயிர்தப்பிய மாணவர்களின் வாழ்வை மீளக்கட்டியெழுப்புவதற்கும், அவர்களின் நம்பிக்கைகளை வளர்ப்பதற்கும் நாம் தொடர்ந்தும் அர்ப்பணிப்புடன் செயற்படுவோம். ஆயுள் காப்புறுதியின் பெறுமதி இவ்வாறான நிகழ்ச்சிகளில் மெய்ப்பிக்கப்படுகின்றது. ஆழிப்பேரலை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டுள்ள மக்களின் காப்புறுதி உரிமைக் கோரிக்கைகளுக்கு Ceylinco Life நிறுவனம் [illegible] கொடுப்பனவுகளை வழங்கியுள்ளது - என்றார்.

Ceylinco Life இன் 'பிரணாம' பரிசில்திட்டம் 2001இல் ஆரம்பிக்கப்பட்டது. 2002 இல் முதலாவது பரிசளிப்புவிழா இடம்பெற்றது. 'பிரணாம'ப் பரிசில்கள் Ceylinco Life இன் காப்புறுதியாளர்களின் பிள்ளைகளுக்கு மாத்திரமின்றி காப்புறுதியற்றோரின் பிள்ளைகளுக்கும் வழங்கப்படுகின்றன.

ஐந்தாம் ஆண்டு புலமைப் பரீட்சை, கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சை, கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சை போன்றவற்றில் மாவட்ட மட்டத்திலும், விளையாட்டு, கலாசாரம், கலை, நாடகம் மற்றும் புதிய கண்டுபிடிப்புகள் போன்றவற்றில் தேசிய மட்டத்திலும் சாதனைபுரிந்த மாணவர்கள் வருடந்தோறும் இந்தப் பரிசில்களைப் பெறுகின்றனர்.

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைகளில் மாவட்ட மட்டத்தில் இரண்டாம், மூன்றாம் மற்றும் நான்காம் இடங்களைப் பெற்ற Ceylinco Life இல் காப்புறுதியைக் கொண்டுளளோரின் பிள்ளைகளுக்கு Ceylinco Life 2003 இல் விசேட பணப்பரிசிலை அறிமுகப்படுத்தியது. இதேபோல, கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சைகளில் தேசிய மட்டத்தில் கணிதம், விஞ்ஞானம், வர்த்தகம், கலை போன்ற பாடப்பிரிவுகளில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற மாணவர்கள் ஒவ்வொருவருக்கும் 25 ஆயிரம் ரூபா விசேட பணப்பரிசில்களும் வழங்கப்படுகின்றன. Ceylinco Life இன் காப்புறுதிகளைக் கொண்டிராதவர்களின் பிள்ளைகளும் இதில் அடங்குவர். ஆனால், அதேவேளை - Ceylinco Life இல் காப்புறுதி கொண்டவர்களின் பிள்ளைகள் மேற்குறிப்பிட்ட சாதனைகளைப் புரிந்தால் விசேட பணப்பரிசிலுடன் சேர்ந்து மாவட்ட மட்டத்திலான பரிசிலும் வழங்கப்படுகிறது. இவ்வகையில் இம்முறை Ceylinco Life இல் காப்புறுதி கொண்ட ஒருவரின் பிள்ளை இத்திட்டத்தின் கீழ் பரிசில் பெற்றார்.

இப்பரிசில் திட்டத்திற்கு அப்பால், Ceylinco Life இல் காப்புறுதி கொண்டவர்களின் பிள்ளைகளின் கல்விக்கு உதவ Ceylinco Aloka Fund எனும் நிதியம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

காப்புறுதி கொண்டவர் ஒருவர் இறந்தால் அவரது பிள்ளையின் படிப்புக்காக இந் நிதியத்தின் மூலம் பணம் வழங்கப்படுகின்றது. 36 சம தவணைகளில் 54 ஆயிரம் ரூபா வழங்கப்படுகிறது. ★

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

Issue (இசூஸ்) ELF 350 அலுமினியம் Body கன்டர் (காட்சி அறை நிலையில் Show room condision) விற்பனைக்குண்டு. தொடர்பு: 99/7, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். T.P.: 021 222 2506 (42186)

கலர் மீன்கள், மீன்தொட்டிகள், லவ்பேட்ஸ், யாவா, பிஞ்சஸ், ஆபிரிக்கன் லவ்பேட்ஸ், கொக் கொடைல் குருவிகளும், கூடுகளும் மற்றும் அடுக் குச் செவ்வரத்தை, றோசாக்கன்றுகள், குறோட் டன், பூச்சாடிகள் அனைத்தும் விற்பனைக்குண்டு. தொடர்பு: 40/11, சீனியர் லேன், தட்டாதெருச்சந்தி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். (C/40623)

புதிய ஓட்டோ விற்பனைக்குண்டு. தொடர்பு: கணனன், சந்தனமாதா கோவில் முன் ஒழுங்கை, பாண்டியன்தாழ்வு. (42236)

எம்மிடம் Sony T.V., Panasonic Deck Japan அனரெனா, ஒரு கைப்பாவனையிலுள்ள Super Cup Lanxer 50 Japan, புதிய CBZ 150 CC Computer Pentium IV மற்றும் வீட்டுப பாவனைக்குகந்த பல பொருள்களும் விற் பனைக்குண்டு. தொடர்பு: இல.22, சுவாமியார் வீதி, கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.(42244)

தரமான செங்கல் கருங்கல் சல்லியில் அறுத்த கொங்றீற்கற்கள் (4") விற்பனைக்குண்டு. செங்கல் 9/- ஆகவும் கொங்றீற் கல் 30/- ஆகவும் பெற றுக்கொள்ளலாம். தொகையாக வாங்குபவர் களுக்கு இலவசமாக விநியோகிக்கப்படும். தொடர்பு: T.P.: 077 3053165. (42274)

மோட்டோ·றோலா தொலைபேசி (பற்றறி, சோலர் உட்பட) உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: T.P.: 2263575, கிழக்கு வீதி, வல்வெட்டித்துறை. (42099)

## காணி விற்பனைக்கு

கல்வியங்காடு சந்திக்கு அருகில் GPS வீதியில் கலட்டியடியில் 4 பரப்புக் காணியும் 3ஆம் கட்டை வீதியில் 4½ பரப்புக் காணியும், செம்மணி வீதியில் அமைந்துள்ள தாலங்காடு, தாளையடியில் 16 பரப்பு வயற்காணியும் விற் பனைக்குண்டு. தொடர்புகளுக்கு: N.கிருஷாந், 38, இராச வீதி, சட்டநாதர் கோயிலடி, நல்லூர், யாழ்ப்பாணம். T.P.: 0777 499284 (சந்திக்கும் நேரம் மாலை 5 மணிக்குப் பின்பு).(சி-41015)

யாழ்ப்பாணம் பிரதான வீதி, முதலாம் பிரிவு புதிய நீதிமன்ற கட்டடத்துக்கு முன்பாக பிரதான வீதியிலிருந்து மூன்றாவது காணி 1¾ நிலப்பரப்பு விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு: இல. 92, கண்டிவீதி, கச்சேரி, யாழ்ப்பாணம், T.P.: 0776111419, 222 7096. (42256)

யாழ்ப்பாணம், நல்லூர் கோயிலுக்கு அருகில் அன்னலட்சுமி வீதியில் 2 பரப்பு வெற்றுக்காணி உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: 0777-895760 (42261)

## வீடு விற்பனைக்கு

மீசாலை கிழக்கில் மீசாலைச் சந்தி யிலிருந்து அல்லாரை வீதி வழியாக 400M தொலைவில் மத்திய வீதியைக் கிழக்கு பக்க எல்லையாகக் கொண்ட நான்கு பரப்புக் காணி யினுள் மூன்று படுக்கை அறைகளைக் கொண்ட வீடு கிணற்றுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: ராஜன், T.P 0714784702. (சி-41031)

## கடை விற்பனைக்கு

இல.409, மானிப்பாய் வீதியில் (ஐந்துசந் திக்கு அருகில்) இரு கடைகள் விற்பனைக் குண்டு. (பார்மசி, ஹோட்டல், சில்லறை வியா பாரம் செய்வதற்கு உகந்த இடம்). தொடர்பு: 011 2729997, 0714 896711. (41935)

சுன்னாகத்தில் கடை விற்பனைக்குள்ளது. உடன் தொடர்பு கொள்ளவும். தொடர்புகளுக்கு T.P 0777678324 (சி-41065)

## நாய்க்குட்டி விற்பனைக்கு

Pure Bred Dobbermann Pincher X Great Dane நாய்க்குட்டிகள் குறைந்த விலையில் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: க.தனபால சிங்கம் (நல்லூர் வீடியோ சென்ரர்வளவு), 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தை யடி, நல்லூர். (42178)

எம்மிடம் 40 நாள் நிரம்பிய நல்ல இன அல் சேஷன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: இ.தயாநிதி பிடாரி அம்மன் கோயிலடி, கொக்குவில் மேற்கு, கொக்குவில். (சி-41064)

## சைக்கிள் விற்பனைக்கு

புதிய Lumala சைக்கிள் தேவையான உப கரணங்களுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: க.தனபாலசிங்கம், (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (42178)

## நாய்க்குட்டிகள் தேவை

3 மாதத்திற்கு உட்பட்ட German She-perd (அல்சேஷன்) நாய்க்குட்டிகள் தேவை. தொடர்பு: 17, சிவப்பிரகாச மகாவித்தியாலயம் அருகில், தும்பளை, பருத்தித்துறை. T.P.: 0776701503. (42238)

### சிறுகுறிஞ்சாப் பவுடர்

சிறுகுறிஞ்சா இலையிலிருந்து தயாரிக்கப்பட்ட பவுடர் விற்பனைக் குண்டு. இது நீரிழிவு. கர்ப்பப்பை நோயாளர்களுக்கும் சாதாரண மக்க ளுக்கும் சிறந்த மூலிகையாகும். இதில் விற்றமின் A,C உடன் கல்சியம். இரும்பு போன்ற நாருப்பொருள்களும் அடங்கும். தொடர்பு

**BIO TEC INTERNATIONAL**

இல.131/2, பலாலி வீதி,
திருநெல்வேலி. T.P.: 021-4590907. (41772)

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

Prima உயிர் Broiler மற்றும் இறைச்சிக் கோழிகள் விற்பனைக்குண்டு. சுகாதார முறைப் படி உடன் சுத்தம் செய்து உங்களுக்குத் தேவை யான நிறைகளில் நியாயமான விலையில் தின மும் பெற்றுக்கொள்ளலாம். (Electronic நிறுவை, நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தை யடி, நல்லூர். (42177)

புறொயிலர், கல்பேட்ஸ் மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. (சுத்தம் செய்தல் இலவசம்), தொடர்பு: NEW R.S.K. FARM - மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில். NEW R.S.K. FARM - மானிப்பாய் றோட், உடு வில் (பெரிய மாவடி). (42263)

## மணமகன் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்ப, 1968இல் பிறந்த, பட்டதாரி (Dip. in Ed.) ஆசிரியைக்கு அரசாங்க/அரசாங்கக் கூட்டுத்தாபனத்தில் வேலை செய்யும் மணமகன் தேவை. தொடர்பு: விளம் பர இல.2491, மே/பா உதயன். (41471)

யாழ்.இந்து கௌரவ குடும்பத்து, 35 வயது டைய செவ்வாய்க் குற்றமற்ற பட்டதாரி ஆசிரி யைக்கு அரசாங்க/அரசாங்க கூட்டுத்தாபன உத்தியோக மணமகன் தேவை. தொடர்பு: விளம் பர இல. 2507, மே/பா, உதயன் (42283)

## வாடகைக்கு

யாழ்.வளாகத்திற்கு அருகில் - வீட்டின் பின பகுதியில் - ஒருவர் அல்லது இருவராகவுள்ள வர்களுக்கு 172 சதுர அடி அறையுடன் சமை யலறை, குளியலறை, கழிவறை, மின்சாரத்து டன் வாடகைக்குண்டு. (சாப்பாடு செய்து சம் பாதிக்க விரும்புபவர்களுக்கு ஏற்றது). பூரண விவரங்களுடன் தொடர்புகளுக்கு: விளம்பர இல. 2503, மே/பா உதயன். (42139)

தெஹிவளை, காலி வீதிக்கு அருகில் நாளாந்தம், வாராந்தம், மாதாந்தம் தங்கு வதற்கு அறைகள் வாடகைக்குண்டு. முற் பணம் தேவையில்லை. படிப்பவர்கள், வேலை பார்ப்பவர்கள், வெளிநாடு செல்பவர்கள் விரும் பத்தக்கது. இரு பெண்கள் தங்கக் கூடிய வேறு அறையும் வாடகைக்குண்டு. சமையல் வசதிகளுடன் தனிவழிப்பாதையும் உண்டு. தொடர்புகளுக்கு: 26/23, தீபானந்த மாவத்தை, வைத்தியா வீதி, தெஹிவளை. T.P.: 078 5163899, 078 5180699. (சி-41066)

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 30 வயது ரோகினி நட்சத்திரம் கிரக பாவம் 46 உடைய B.SC., M.Sc. அரசாங்க ஆசிரியருக்குப் பட்டதாரி மணமகள் தேவை. தொடர்பு: க.நாகராஜா, 282, கஸ்தூரியார் வீதி, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம். (42267)

யாழ்.இந்து கௌரவ குடும்பத்து, 44 வயதுள்ள, பூர நட்சத்திரம் லக்கினத்தில் செவ்வாய்க்குற்றமுள்ள (கிரகபாவம் 74) விவா கரத்துப் பெற்ற அழகான இளமைத் தோற்றங் கொண்ட 15,000/- மாத வருமானமுள்ள மண மகனுக்குச் சுமாரான அழகுடன் வீடும் உள்ள மணமகள் தேவை. தொடர்புகளுக்கு: 0776745589 (42285)

### விற்பனைக்கு

தரமான கோழி எரு விற்பனைக்கு உண்டு. உடன் பெற்றுக் கொள்ளலாம்.

**வீனஸ் பாம்**

பலாலி வீதி,
(நல்லூர் AGA Office முன்பாக)
திருநெல்வேலி.

(42201) (21-17)

## பிரான்பற்றுக்கு குடும்ப நல அலுவலரை நியமிக்குமாறு கோரிக்கை

வலி.தென்மேற்கு,பெப்.20

பிரான்பற்று குடும்ப நல சுகாதார அலு வலர் இடமாற்றப்பட்டுள்ளதால், அங்கு வேறொரு நிரந்தர குடும்பநல சுகாதார அலுவலர் ஒருவரை நியமிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும் என்று அப்பகுதி மக்கள் யாழ்.சுகாதாரசேவை பிரதி மாகாணப் பணிப்பாளரிடம் வேண்கோள் விடுத்துள்ளனர்.

இங்கு கடமையாற்றிவந்த குடும்ப நல சுகாதார அலுவலர் சுழிபுரம் பகுதிக்கு இட மாற்றம் செய்யப்பட்டுள்ளார். ஆனால் இவரின் இடத்திற்குக் எவரும் நியமிக்கப்படவில்லை. தற்போது கிராமிய சுகாதாரத் தொண்டர் ஒருவரே இப்பிரிவில் பதில் கடமையாற்றி வருகின்றார்.

இதனையடுத்தே அப்பகுதி மக்கள் மேற் படிக் கோரிக்கையை விடுத்துள்ளனர்.

(3-203-135)

## சுனாமி நிவாரண முத்திரைகள் விநியோகம்

வலி.மேற்கு,பெப்.20

சுனாமியால் பாதிக்கப்பட்ட வலி.மேற்கு பிரதேச செயலர் பிரிவைச்சேர்ந்த 310 குடும் பங்களுக்கு சுனாமி நிவாரண முத்திரைகள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

தொழில் உபகரணங்களை இழந்து மிகவும் துன்பமடைந்து கொண்டிருக்கும் சுழிபுரம், பொன்னாலை, மூளாய் ஆகிய இடங்களைச் சேர்ந்த 310 குடும்பங்களைச் சேர்ந்த ஆயி ரத்து 127பேருக்குக் கிராம அலுவலர்களினால் சுனாமி நிவாரண முத்திரைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இப்பகுதிகளில் மிகவும் பாதிக்கப்பட்ட 181 குடும்பங்களுக்கு 5ஆயிரம் ரூபா நிதி உதவி யும் வழங்கப்படவுள்ளது. இதற்கான நடவடிக் கைகளைப் பிரதேச செயலர் சீ.ஏ.மோகன்ராஸ் மேற்கொண்டு வருகின்றார்.

(3-203-175)

## பண்ணிசைத் தேன்துளிகள் நூல் வெளியீட்டு விழா

நவாலி,பெப்.20

மானிப்பாய் மகளிர் கல்லூரியின் சங்கீத ஆசிரியை செல்வி சந்திரிகா கணேஸ்பரனின் "பண்ணிசைத் தேன்துளிகள்" மலர் வெளியீட்டு விழா இம்மாதம் 23ஆம் திகதி புதன் கிழமை பி.ப.3.00 மணிக்கு மானிப்பாய் பிரதேச சபை மண்டபத்தில் இடம்பெறும்.

மானிப்பாய் இந்துக்கல்லூரி முன்னாள் அதிபர் சி.கேசவராஜன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக ஸ்கந் தவரோதயக் கல்லூரி உப அதிபர் செஞ்சொற் செல்வர் ஆறு. திருமுருகனும், சிறப்பு விருந் தினர்களாக வலி.தென்மேற்கு பிரதேசசபை யின் செயலாளர் பி.விக்டர், சண்டிலிப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் கே.தனபால சிங்கம், மானிப்பாய் மகளிர் கல்லூரி அதிபர் திருமதி எஸ்.ஜெயவீரசிங்கம் ஆகியோரும் கலந்துகொள்வர்.

மங்கள விளக்கேற்றல், வரவேற்புரை என் பவற்றைத் தொடர்ந்து ஆசியுரைகளை வட இலங்கை சங்கீத சபையின் உப தலைவர் எஸ்.கணபதிப்பிள்ளை மானிப்பாய் கோவில் பற்று இந்து சமய விருத்திச்சங்கத் தலைவர் செல்வி ஆர்.சுப்பையா பிள்ளையும் நிகழ்த் துவர். வெளியீட்டுரையை முன்னாள் கோட்டக் கல்விப் பணிப்பாளர் ரி.தற்பரானந்தன் நிகழ்த் துவார். மதிப்பீட்டுரையை புனித பரி.யோவான் கல்லூரி ஆசிரியர் எஸ்.சிவஞானசேகரனும் நிகழ்த்துவார்.

(எ-100)

# நன்றி நவில்கின்றோம்



**திரு.ஜெயக்குமார் சதீஸ்குமார் (சதீஸ்)**

**திருமதி சதீஸ்குமார் சிரோமி**

கடந்த 05.02.2005 அன்று நடைபெற்ற எங்களது திருமணநிகழ்வுக்கு வருகைதந்து எம்மை மகிழ்வித்து வாழ்த்துக் கூறிமகிழ்ந்தவர்களுக்கும் மற்றும்தபால், தொலைத்தொடர்புகள் மூலம் வாழ்த்துக்களைத் தெரிவித் தவர்களுக்கும் எமது உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் எமது உளங்கனிந்த நன்றிகளைத் தெரிவித்து உளம் பூரிப்படைகிறோம்.

நாவலர் வீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம்.

திரு.திருமதி சதீஸ்குமார் சிரோமி.

(C-41058)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விற்பனையாகின்றது!

**புவியியல் - தரம் 7**

பாடமும் பயிற்சியும் (புதிய பாடத்திட்டம்) 2005

*ஆக்க ஆலோசனை:*

**செல்வி ராதா அம்பலவாணர்** (B.A.Dip.in.Ed.)

*(சிரேஷ்ட புவியியல் ஆசிரியை)*

வெளியீடு:

**ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை**
235, கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்.

(C/41079)(42-17)



## தேவை

*தொழிற் பயிற்சி அனுபவமுள்ள*
*விரிவுரையாளராகப் பணியாற்றுவதற்கு*

கட்டட தச்சுத் தொழிலாளர் (Sharturing Carpenter)

யாழ்.குடாநாட்டில் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள தொழிற்பயிற்சிப் பாடசாலையில் விரிவுரையாளர் பதவிக்கு கட்டட தச்சுத் தொழிலாளர் ஒருவர் உடனே தேவைப்படுகின்றார். முன் அனுபவமும் சிவில் போமன் தகைமையுடையவர்களுக்கும் முன்னுரிமை அளிக்கப்படும். விண்ணப்பத்துடன் சான்றிதழ் பிரதிகள், நிழற்படம் (பாஸ்போட் சைஸ்) தொலைபேசி இலக்கம் என்பவற்றை இணைத்து அனுப்பவேண்டும்.

*கவர்ச்சியான சம்பளம் வழங்கப்படும்.*

விண்ணப்பிக்க வேண்டிய முகவரி: **விளம்பர இல.2508**
மே/பா.உதயன், யாழ்ப்பாணம்.

(42284)(42-17)

**முடிவுதிகதி: 23.02.2005 பிற்பகல் 4.00 மணிவரை.**



## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி சோமசுந்தரக்குருக்கள் கௌரியம்மா

**திதி:** *மாசி மாத பூர்வபக்கத் துவாதசி 20.02.05*

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 20.05.1920 | 03.03.2004 |

அன்புள்ள அம்மம்மா!
நீங்கள் வானுலகு சென்று வருடம் ஒன்று ஆனதுவோ?
ஔவைப் பாட்டிபோல் எங்களுக்குப் பெரியவராய் இருந்தீர்!
வானுலகு சென்ற பின் வெற்றிடம் தெரிகிறதம்மா!
உம்மிடத்தை நிரப்புவதற்கு நம்மிடத்தில் யாரும் இல்லர்!
எம்வீடு வருவீர் என்று வழி பார்த்திருந்தோம்
வராமலேயே போய்விட்டீர்கள் - இன்றும்
எம் வீட்டுக் கதவு திறந்திருக்கிறது உங்களுக்காய்!

*ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:*

பேரப்பிள்ளைகள்:
சிவசிறி ப.ஜெயகுமாரக் குருக்கள்,
ஜெ.உஷாதேவி.

பூட்டப்பிள்ளைகள்:
ஜெ.ராஜீவன்,
ஜெ.ஐஸ்வர்யா.

"பரணிவாசம்",
கந்தரோடை.

(42278)(42-17)



## நினைவலைகள்

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி — 43ஆம் ஆண்டு நினைவஞ்சலி



*அமரர்கள்*

**திருமதி குமாரவேலு மகேஸ்வரி**
மண்மகிழ 13.03.1921
கண்நெகிழ 03.03.2004

*வைத்திய கலாநிதி*

**சரவணமுத்து குமாரவேலு**
01.05.1921
06.06.1962

ஈரவிழிகளுடன் எம் இதயத் தெய்வங்களான தாய் தந்தையரை
ஒரு கணம் எண்ணிப் பார்க்கின்றோம்
நெஞ்சின் துயரச் சுவடுகளும், கண்ணின் உதிரிப்பூக்களும்
உங்கள் பாதக் கழலங்களை அர்ச்சிக்கின்றன
உங்கள் விழிகள் விழித்திருந்த போது எங்கள் வாழ்வு
மலர்ந்தன - விரிந்தன் - மணம் வீசின
உங்கள் யாகத்திற்கு அர்த்தம் காண எம்மிடம் அகராதிகளே இல்லை
எங்கள் வாழ்விற்கு அர்த்தம் காட்டும் அகராதிகள் நீங்களே!

-குடும்பத்தினர்.

நிரந்தர முகவரி: *5ஆம் வட்டாரம், நயினாதீவு.*

தற்காலிக முகவரி: *[illegible] யாழ்ப்பாணம்.*

(42293)(42-17)



## ஆள்தேவை

புத்தகசாலை ஒன்றிற்குப் பெண் வேலை ஆள் தேவை.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:
326, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

(42292) (46-42-17)



## வீட்டுடன் காணி விற்பனைக்கு

மானிப்பாய்ப் பிரதேச சபையில் இருந்து 100m தூரத்தில் அமைந்த T.C.லேனில் 2 பரப்புக் காணியில் நல்ல நிலையிலான வீடு விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:

| | |
|---|---|
| து.விக்ரர்கடை, | M.கயிலாயபிள்ளை, |
| ஆலடி சந்தி, | அல்லாரை வடக்கு, |
| மானிப்பாய். | கொடிகாமம். |
| T.P.: 0776691206. | T.P.: 0776623582. |

(42289)


## இணையத்தின் தலைவராக விக்னேஸ்வரன் தெரிவு

யாழ்ப்பாணம்,பெப்.20

யாழ்.மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத்தலைவராக பி.விக்னேஸ்வரன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

கடந்த 11ஆம் திகதி நடைபெற்ற இணையதின் பொதுக் கூடடத்தில் இவர் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார்.

உபதலைவராக ஏ.கே.சிவசுப்பிரமணியமும், செயலாளராக ரி.தேவானந்தும், உப செயலாளராகத் திருமதி சரோஜா சிவச்சந்திரனும் பொருளாளராகத் திருமதி நவநீதம் ஜெகதீசனும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (10-7)

## குமாரசாமிப்புலவர் நினைவுதினம் அனுஷ்டிப்பு

முதுபெரும் தமிழ் வித்தகர் சுன்னாகம் வித்துவ சிரோன்மணி அ.குமாரசுவாமிப் புலவரின் 150 ஆவது பிறந்ததினம் சுன்னாகம் மத்திய பொது நூலக மண்டபத்தில் நேற்றுமுன் தினம் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

வலிகாமம் தெற்கு பிரதேச சபைச் செயலாளர் திருமதி சரஸ்வதி சொக்கலிங்கம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் பிரதேச சபை ஊழியர்கள், நூலக உத்தியோகத்தர்கள் வாசகர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். நூலக வளாகத்தில் உள்ள குமாரசுவாமி புலவருடைய உருவச் சிலைக்கு மலர் மாலைகள் அணிவித்து கௌரவிக்கப்பட்டது. (3-152)


## 2005.02.13ஆம் திகதிய அரசாங்க கேள்வி அறிவித்தல் திருத்தம்

**பிறீமா கிறீன்மா கேள்வி** என்பதற்குப் பதிலாக **மில் பிறான்ட் மா விநியோகத்திற்கான கேள்வி கோரல்** எனத் திருத்தம் செய்யப்படல் வேண்டும். இத்திருத்தத்தினை ஏற்றுக் கொள்ளவும்.

**அரசாங்க அதிபர்,**
யாழ்.மாவட்டம்.

(C/41082)(42-17)



## HUMEDICA LANKA

SANGARAPILLAI Rd.,
MANIPAY.

**VACANCIES வெற்றிடங்கள்**

1. MATRON (ELDERLY)
2. TRACTOR DRIVER டிராக்டர் சாரதி
   வயது 50இற்கு மேல்
   (சாரதி அனுமதிப்பத்திரம் அவசியம்)

எதிர்வரும் (23.02.2005) புதன்கிழமை காலை நேரில் சந்திக்கவும்.

**- நிர்வாகி.**

(42290)(42-17)






## அன்புள்ள அம்மா

ஒவ்வொரு
கர்ப்பிணித் தாய்மாரும்
வாசிக்கவேண்டிய நூல்

கிடைக்குமிடங்கள்:

**பேபி நீட்ஸ் பார்மஸி - யாழ்ப்பாணம்**
**மதர் கெயார் [Mother Care] யாழ்ப்பாணம்**
**ஹோலி குரோஸ் வைத்தியசாலை - பாஷையூர்**
**ஈஸ்வரி பார்மஸி - புதுக்குடியிருப்பு.**

விலை ரூபா 300/=



Cambrian College of Applied Arts and Technology

## முதன் முறையாக கனேடிய பல்கலைக்கழகத்தின் பாட நெறிகள் இலங்கையில்




Cambrian College கலை / தொழில் நுட்பம் இரண்டிற்கும் ஒன்டாரியோ வடக்கு - கனடாவில் அமைந்துள்ள மிகப்பெரிய கல்லூரியாகும்.

கனேடிய அரசாங்கத்தால் நிர்வகிக்கப்படும் இக்கல்லூரியானது மதிப்புமிக்க, முன்னேற்றகரமான, பொறுப்புவாய்ந்த கல்வி நிலையமாகும்.

கொழும்பு நகரின் இதயம் என வர்ணிக்கப்படும் கொள்ளுப்பிட்டியில் அமைந்துள்ள **GOVERNOR'S COLLEGE** மட்டுமே கேம்பிரியன் கல்லூரியின் பாடவிதானங்களை உங்களிற்கு அளிக்கின்றது.

அளிக்கப்படும் பாடவிதானங்கள்:

- Hotel & Restaurant Management
- Travel and Tourism Management
- Software Engineering Technology
- Business Administration - Accounting

ஒரு வருடத்திற்கு அல்லது இரு வருடத்துக்கு. பூர்த்தி செய்யப்பட்ட இரண்டு பிரிவு வகுப்புகள் அல்லது நான்கு பிரிவு வகுப்புகள் இலங்கையிலும் அதன் பின்னர் கனடாவிலும் மேற்படிப்பை பூர்த்திசெய்யக் கூடிய வாய்ப்புக்களும் வழங்கப்படும்.

★ Free ESL course (English as a second language)
★ Course fee can be paid in installments
★ Loan facilities on request



## GOVERNOR'S COLLEGE

"College Campus", 376, Galle Road, Colombo-03, Sri Lanka.
Tel: +94 11 2375371-2, +94 11 2375333 Fax: +94 11 2375374
E-mail: governors@sltnet.lk
Website: www.cambrianc.on.ca


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொலை வழக்கில் மரண தண்டனை

கொழும்பு,பெப்.20

கொலைக் குற்றவாளி ஒருவருக்குக் காலி மேல் நீதிமன்று நேற்றுமுன்தினம் மரண தண்டனை விதித்தது.

எம்.கமன்வெல்ல என்பவரைக் கொலை செய்த குற்றத்திற்காகவே 75 வயதானவருக்கு மன்று மரணதண்டனை விதித்துள்ளது.

கொலை வழக்கில் இருவர் சந்தேக நபர்களாவர். அவர்களுள் ஒருவர் வழக்கு நடைபெற்றுக்கொண்டிருக்கையில் மரணமாகிவிட்டார்.

மேல் நீதிமன்ற நீதியரசர் அம்பேபிட்டியவின் படுகொலையைத் தொடர்ந்து மீண்டும் மரண தண்டனையை நடைமுறைப்படுத்த அரசு முடிவுசெய்துள்ளது தெரிந்ததே.(எ-க)

# வலி. வடக்கில் இன்று தடகள விளையாட்டு

வலி.வடக்கு,பெப்.20

வலிகாமம் வடக்கு தெல்லிப்பழைப் பிரதேச செயலாளர் பிரிவில் பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான வருடாந்த தடகள விளையாட்டுப்போட்டி இன்று பிற்பகல் 1.30 மணிக்கு மல்லாகம் ஸ்ரீபாஸ்கரன் விளையாட்டரங்கில் உதவிப் பிரதேச செயலாளர் சு. முரளிதரன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக ஹற்றன் நஷனல் வங்கியின் சுன்னாகம் கிளை முகாமையாளர் சி.சுந்தரேஷ்வரனும் சிறப்பு விருந்தினர்களாகத் தெல்லிப்பழை ப.நோ.கூ.சங்கத் தலைவர் சி.சிவமகாராசா, மக்கள்வங்கியின் காங்கேசன்துறை கிளை முகாமையாளர் பொன் கணேசமூர்த்தியும் யாழ். மாவட்ட விளையாட்டு அதிகாரி கி.றோகான் இராசசிங்கம், தெல்லிப்பழைப் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் இ.சரவணன் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர். (எ-86)


## வெளிநாட்டில் உயர்கல்வியைத் தொடர்வதற்கு அல்லது உடனடித் தொழில் வாய்ப்பொன்றிற்கு...

## Foundation Degree Programme

UK, Canada போன்ற நாடுகளில் உயர்கல்வியைத் தொடர விரும்பும் மாணவர்கள் இப்பாடநெறியைப் பயில்வதன் மூலம் எந்தவிதத் தடைகளுமின்றி வெளிநாட்டு உயர்கல்விக்கான Student Visa க்களை இலகுவாகப் பெற்றுக் கொள்கின்றனர்.

இக்கற்கை நெறியின் மூலம், நவீன தொழிற் சந்தையில் எந்தத் துறை சார்ந்த தொழில் வாய்ப்புகளுக்கும் தகைமை கொண்டோராக உங்களை மாற்றிக்கொள்ள முடியும்.

பிரித்தானியாவின் முன்னணி கல்வி நிறுவனங்களின் நேரடி அங்கீகாரமும் சான்றிதழ்களும் இப்பாடநெறிக்குக் வழங்கப்படுவதால் உங்கள் உயர்கல்வி அல்லது உடனடித் தொழில்வாய்ப்பிற்கான இலக்குகள் வெற்றியளிக்கின்றன.

எமது சர்வதேச இணைப்புகளும் அங்கீகாரங்களும்

The University of Buckingham · Cornwall College · St James's Park College

பாடப்பரப்பு

தகவல் தொழில் நுட்பம், ஆங்கிலம், ஆளுமை விருத்தி ஆகிய துறைகளில் அடிப்படை முதல் மிக விரிவான கற்கைநெறி

பாடநெறிக்காலம்

திங்கள் முதல் வெள்ளி வரையிலான மூன்று மாதங்களைக் கொண்ட முழு நேரப்பாடநெறி

வெளிநாட்டில் உயர்கல்விக்கான Student Visa க்களைப் பெற்றுக்கொள்வ பூரண வழிகாட்டுதல்கள் London Institute இனால் மேற்கொள்ளப்ப

LONDON INSTITUTE OF FURTHER EDUCATION

25A, Hospital Road, Dehiwela. Tel: 011 5518666, 0777 715788

Fax: 011 5515387 E-mail: edulife@sltnet.lk


## ஒத்துமாறல்

வவுனியா மாவட்டத்தில் கற்பிக்கும் பயிற்றப்பட்ட ஆரம்பக்கல்வி ஆசிரியர் யாழ். மாவட்டத்திற்கு மாற்றம் பெற விரும்புகின்றார்.

தொடர்புகளுக்கு: (42298)(21-11-24)

0777252108, 0776562646

உ

சிவமயம்



## அகில இலங்கை இந்து மாமன்றம்

### பிள்ளைகளை பராமரிக்க நிதியுதவி

நாட்டில் நிலவிய யுத்தநிலை காரணமாக அல்லது சுனாமி அனர்த்தத்தினால் ஆதரவற்ற நிலையிலுள்ள பிள்ளைகளுக்கு நிதியுதவி தேவைப்படும் பெற்றோர் அல்லது பாதுகாவலர் மாமன்றத்திடம் கடிதம் மூலம் தொடர்புகொண்டு பெறப்படும் விண்ணப்பப்பத்திரத்தில் உடனடியாக விண்ணப்பிக்கவும்.

ACHC கட்டிடம் ( 5ம் மாடி )
91/5, சேர் சிற்றம்பலம் ஏ. கார்டினர் மாவத்தை,
கொழும்பு - 02.
தொலைபேசி : 2434990
தொலைநகல் : 2344720
E-mail : neela@sri.lanka.net

பொதுச் செயலாளர்
அகில இலங்கை இந்து மாமன்றம்


உ

## ஸ்ரீ துர்க்கா ஜோதிட நிலையம்

இந்தியாவிலிருந்து வந்துள்ள
ராமகிருஷ்ண சாஸ்திரிகள்

கல்வி, வியாபாரம், திருமணப் பொருத்தம், கணவன் – மனைவி உறவு, அரசியல் பிரச்சினைகள், வீடு, கடை வாஸ்து, வெளிநாட்டுப் பிரயாணம், பிள்ளைகள் பாக்கியம், ஆயுள் ரேகை, எண்கணிதம், கைரேகை மூலம் அறிந்து கொள்ள நீங்கள் தொடர்புகொள்ள வேண்டியது.

அறை எண் 5, பிள்ளையார் இன்,
31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
Room No. 5, Pillaiyar Inn. 31, Manipay Road, Jaffna.
Mobile: 0776 923623. (42265) (26-11-24)


## உடன் தேவை

Computer Hard Work செய்வதில் அனுபவம் உள்ளவர் தேவை (ஆண்).

கிங்ஸ் எலற்றோனிக்ஸ்
64, ஸ்ரான்லி றோட்,
யாழ்ப்பாணம்.
(42297) (24-11)

## சபிண்டீகரண அழைப்பு

மண்ணில் 04 – 05 – 1980



விண்ணில் 08 – 10 – 2004

### அமரர் சேனாதிராஜா முகுந்தன் அவர்கள்

அன்னாரின் சபிண்டீகரணக் கிரியைகள் இன்று (20.02.2005) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும்.
இந்தக் கிரியைகளில் கலந்துகொண்டு ஆத்மசாந்தியடையப் பிரார்த்திப்பதுடன், மதியபோசனத்திலும் பங்குகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு: தனிப்பட்ட அழைப்புக் கிடைக்காதவர்கள் இந்த அறிவித்தலை ஏற்றுக் கொண்டு வருகைதருமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

81, மணிக்கூண்டு வீதி,
யாழ்ப்பாணம். (சி-41086) (24-11)

லயன் க.மு.பத்மநாதன் குடும்பத்தினரும்
வெஸ்கோ மருந்தகப் பணியாளர்களும்.

## உடனடி வேலை வாய்ப்பு

எமது உணவகத்துக்குக் கீழ்க்குறிப்பிடப்படுவோர் தேவைப்படுகின்றனர்

- மனேஜர் [வயது 35 – 50]
- சிட்டை எழுதுபவர் (Bill Clerk Part Time)
- சமையலாள்
- பரிமாறுபவர் (Waiters)
- றொட்டி மேக்கர்
- சாரதி (Van) அனுமதிப்பத்திரம் உடையோர்
- காசாளர் [இருபாலாரும்]

☞ தகுதிக்கும், அனுபவத்துக்கும் ஏற்ப சிறந்த சம்பளம் வழங்கப்படும் உடனே நேரில் வரவும்.

தொடர்பு:

சண்ஜெய உணவகம்
414, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
(42294)(21-11-24)

## இணுவில் பொதுநூலகம் சனசமூக நிலையம்

புனருத்தாரண 3ஆம் ஆண்டு நிறைவையொட்டி நடத்தப்படும் சிறப்புப் போட்டிகள்

- துடுப்பாட்டம் - மட்டுப்படுத்தப்பட்ட ஆறு ஓவர்களைக் கொண்டது.
- மரதன் ஓட்டம் - ஆண்கள் மட்டும்
- துவிச்சக்கர வண்டி ஓட்டம் - பெண்கள் மட்டும்

குறிப்பு: மேற்படி போட்டிகள் உடுவில் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்டவர்கள், கழகங்கள் மட்டும் பங்குகொள்ளலாம்.

கரம், சதுரங்கம் } இப்போட்டிகளில் யாழ். மாவட்டத்திலுள்ள கழகங்கள், தனிநபர்கள் பங்குபற்றமுடியும்.

**விண்ணப்ப முடிவு திகதி: 02.03.2005**

மேலதிக தகவல்களை நூலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

- பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்படவுள்ள பொது அறிவு, பொது உளச்சார்பு பரீட்சையில் பங்குபற்ற விரும்பும் மாணவர்கள் அதிபருடாக விண்ணப்பங்களை அனுப்பிவைக்கவும். (42295) (24-11)

அனுப்பவேண்டிய முகவரி:
இணுவில் பொதுநூலகம், சனசமூக நிலையம்,
ஸ்ரீபரராஜசேகரப்பிள்ளையார் கோவிலடி,
இணுவில் - மானிப்பாய் வீதி, இணுவில். இ. பொ. நூ.

அனுசரணை:
சாயி பல்பொருள் வாணிபம், இணுவில் ஆஸ்பத்திரி முன்பாக, K.K.S. வீதி, இணுவில்.
ஸ்ரீராம் உடல் வலுவூட்டல் பயிற்சி நிலையம், மானிப்பாய் வீதி, இணுவில்.


## Koyo® Made in Japan — Ball & Roller Bearings — Value & Technology

யமாடோ தரமாண மோட்டார் சைக்கிள் உதிரிப்பாகங்கள்




சகல விதமான தயாரிப்புக்களுக்கு ஏற்ற உதிரி பாகங்கள்

ஏக இறக்குமதியாளர்
செரென்டிப் மோட்டர் எண்டர்பிறைஸ் (பிறைவேட்) லிமிடெட்
60B, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு 10.
தொலைபேசி 01-2341580-1, 2438779, பெக்ஸ் 01-2454608


# புங்குடுதீவில் இன்று மருத்துவமுகாம்

யாழ்ப்பாணம்,பெப்.20

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளையும் வட இலங்கை சர்வோதயமும் இணைந்து நடத்தும் மருத்துவ முகாம் இன்று ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10 மணிக்குப் புங்குதீவு, பெருங்காடு சர்வோதய வளாகத்தில் நடைபெறவுள்ளது.

புங்குடுதீவு கொழும்பு அபிவிருத்திச் சங்கத்தினரின் அன்பளிப்பான பால்மா வகைகள் நோயுற்றிருக்கும் குழந்தைகள், சிறுவர்களுக்கு இந்த மருத்துவ முகாமில் வைத்து வழங்கப்படும்.

சம்பந்தபட்டவர்கள் இதில் தவறாது கலந்து பயன்பெறுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (எ-202)

## மரண அறிவித்தல்

### நடராஜா கணேசமூர்த்தி

(பொலீஸ் சார்ஜன்ட்)

நயினாதீவைப் பிறப்பிடமாகவும் வெள்ளவத்தையை வதிவிடமாகவும் கொண்டிருந்த நடராஜா கணேசமூர்த்தி (பொலீஸ் சார்ஜன்ட்) அவர்கள் 17.02.2005 கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நடராஜா - கமலாம்பிகை தம்பதிகளின் அன்பு மகனும் இரத்தினம் - பராசக்தி (ஆஸ்திரேலியா) தம்பதிகளின் அன்பு மருமகனும் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான சஞ்சீவ், ஜீவன் ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற மயிலாம்பிகை, நமசிவாயம் மற்றும் விசுவநாதன் ஆகியோரின் சகோதரரும் புவனேஸ்வரி (ஆஸ்திரேலியா), சிவநாதன், நகுலேஸ்வரி, காசிநாதன் (ஆஸ்திரேலியா), திலகேஸ்வரி (ஆஸ்திரேலியா), குலநாதன் (லண்டன்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் கொழும்பு பொரளை ஜெயரட்ண மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இன்று (20.02.2005) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று, 4.30 மணிக்கு கனத்தை இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு ஆழ்ந்த துயரத்துடன் அறியத் தருகின்றோம்.

இல.10, பொலீஸ் விடுதி,
வெள்ளவத்தை.
தொலைபேசி: 011 2552101 (42299) (24-11)

தகவல்:
பரமேஸ்வரி கணேசமூர்த்தி (மனைவி).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லெபனான் தலைவர் ஹரிரி கொலையின் பின்னணியில் சிரியா!

மத்திய கிழக்கு என்றால் அமைதியின்மைக்குப் பேர்போன பகுதி என்பது போன்ற ஒரு பிரமை இருந்து வந்த நிலைமை சமீபகாலத்தில் மாறத் தொடங்கியிருப்பதாக நாம் நினைக்கத் தொடங்கியதைப் பொய்ப்பிப்பது போல் அங்கு மீண்டும் சில காரியங்கள் நடந்தேறியுள்ளன.

ஈராக்கில் தீவிரவாதிகளின் பலத்த எதிர்ப்புக்கும் குண்டுத் தாக்குதல்களுக்குமிடையில் பொதுத் தேர்தல் நடந்துமுடிந்திருப்பதும், அத்தேர்தலில் ஈராக்கிய மக்கள் தயக்கமின்றிக் கலந்துகொண்டதும் தீவிரவாதம் அங்கு இறங்கு முனைக்குத் தள்ளிவிடப்பட்டுள்ளது என்று கருதப்பட்டது.

அதேபோல், இஸ்ரேல் - பலஸ்தீனப் பிணக்கில் இருதரப்புக்குமிடையில் போர் நிறுத்தமும், சில பல விடயங்களால் இணக்கப்பாடும் ஏற்பட்டிருக்கின்றது.

இவை மத்திய கிழக்கில் - வளைகுடா நாடுகளில் - அமைதி ஏற்படுவதற்கான அறிகுறிகள் என்றே கருதப்படுகின்றன.

இந்த நிலைமையில் லெபனானின் முன்னாள் பிரதமரும் செல்வாக்குள்ள அரசியல் வாதியுமான ராபிக் அல் - ஹரிரி படுகொலை செய்யப்பட்டிருப்பது மீண்டும் அங்கு வன்முறை வெடிக்கும அறிகுறியோவென அங்கலாய்க்கத் தோன்றுகின்றது.

பெப்ரவரி 14ஆம் திகதி பெய்ரூட் நகரில் மோட்டார் பவனியில் சென்று கொண்டிருந்த போது, கார்க்குண்டுவெடிப்பில் ஹரிரி கொல்லப்பட்டார். அவரைக் குறிவைத்தே குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டதாகத் தெரியவந்துள்ளது. அவருடன் மெய்ப்பாதுகாவலர்கள் உட்பட 12 பேர் கொல்லப்பட்டனர்; 100 பேருக்கு மேல் காயமடைந்துள்ளனர்.

ஹரிரியால் புனரமைக்கப்பட்ட பெய்ரூட் நகரின் மத்தியில் நடைபெற்ற இந்தக் குண்டுத் தாக்குதலில், வீதியில் 20 யார் அகலத்துக்குப் பெரும் கிடங்கு தோண்டப்பட்டு விட்டதாகவும் இந்த நகரையும் வீதியையும் கட்டியெழுப்புவதற்குத் தமது சொந்தப் பணத்தில் அவர் செலவு செய்திருந்தார் என்றும் கூறப்படுகின்றது. அரபு உலகில் ஓர் ஆதர்ச நகரமாகப் பெயரூட்டை உருவாக்க வேண்டும் என்று அவர் கனவு கண்டுவந்துள்ளார்.

ஆயிரக் கணக்கான லெபனானியர்கள் கடந்த 16ஆம் திகதி கொலை செய்யப்பட்ட தலைவரின் வாசஸ்தலத்தினருகில் கூடி, சிரியாவிற்கெதிராகக் கோஷமிட்டார்கள்.

இந்தக் கொலைக்குச் சிரியாவே பின்னணி என்பது இவர்கள் கருத்து. ஆனால், இந்தக் கொலையைச் சிரிய அதிபர் பாஷார் அல் ஆஸாத் கடுமையாகக் கண்டித்திருக்கிறார். லெபனானின் தேசிய ஐக்கியத்தையும், மக்கள் அமைதியையும் குலைப்பதற்கான ஒரு படுகொலை இது என்று அதிபர் ஆஸாத் கண்டனத்தில் தெரிவித்துள்ளார்.

ஆனால், அமெரிக்காவைப் பொறுத்தவரை இதுவெறும் கண்துடைப்பு என்பதே கருத்து.

சிரியா மீது குற்றஞ் சுமத்தியுள்ள அமெரிக்கா, அதன்மீது பொருளாதாரத் தடைகளை ஏற்படுத்தப்போவதாகவும் மறைமுகமாகத் தெரிவித்துள்ளது. லெபனானிலுள்ள 14 ஆயிரம் துருப்புக்களையும் சிரியா வாபஸ் பெற்றுக் கொள்ளவேண்டும் என்று அமெரிக்கா நெருக்குதல் கொடுக்கத் தொடங்கியுள்ளது.

வெள்ளை மாளிகை அதிகாரி ஒருவர் இது பற்றிக் கருத்து வெளியிட்டபோது -

அப்பிரதேச அரசுகளுடனும், ஐ.நா.பாதுகாப்புச்சபை உறுப்பினர்களுடனும் அமெரிக்கா அவசர ஆலோசனைகளை நடத்தி வருகின்றது. இந்தப் பயங்கர நடவடிக்கைகளுக்குக் காரணமாகவிருந்தவர்கள்மீது என்னவிதமாக நடவடிக்கை எடுத்துத் தண்டிக்கலாம் என்பது பற்றி ஆராயப்படுகின்றது.

லெபனான் மக்கள் மீது நடத்தப்படும் வன்செயல்களையும் அச்சுறுத்தல்களையும் நிறுத்துவது மட்டுமன்றி, லெபனானை அந்நியப் படைகளின் ஆக்கிரமிப்பிலிருந்து விடுவித்து, அவர்களின் சுதந்திரம், இறைமை, ஜனநாயகம் முதலியவற்றை நிலைநாட்டுவது பற்றியும் ஆலோசிக்கப்பட்டு வருகின்றது என்று கூறினார்.

இதே சமயம், டமஸ்களிலுள்ள தூதுவரை ஆலோசனைகளுக்காக அமெரிக்கா திருப்பி அழைத்தது.

இன்னொரு திருப்பமாக லெபனானிலுள்ள 14 ஆயிரம் சிரிய துருப்புக்களையும் திருப்பி அழைக்கச் செய்வதற்காக அதன் மீது பொருளாதாரத் தடைகளைக் கொண்டுவருவது பற்றி அமெரிக்கா ஆலோசித்து வருவதாகவும் அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஈராக்கிய, பலஸ்தீனிய தீவிரவாதிகள் தனது மண்ணிலிருந்து செயறபடுவதற்குச் சிரியா அனுமதிப்பதாகவும் அமெரிக்கா குற்றஞ்சாட்டியுள்ளது.



கொலையுண்ட முன்னாள் லெபனான் பிரதமர் ஹரிரீ



கொலைசெய்யப்பட்ட லெபனான் தலைவர் ஹரிரியின் நீண்டகால நண்பரான பிரான்ஸ் அதிபர் ஜெக்ஸ் சிராக் இறுதிச் சடங்கில் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்த வந்திருந்தபோது திருமதி நாஸஜக் ஹரிக்கு ஆறுதல் கூறுகிறார்.

### பலஸ்தீன அதிபர் நடவடிக்கை

இஸ்ரேலுடன் தாம் செய்துகொண்ட அமைதி ஒப்பந்தத்தைச் சீர்குலைக்கும் விதத்தில் காஸா பகுதியில் இஸ்ரேலிய குடியிருப்புக்கள்மீது தீவிரவாதிகள் நடத்திய குண்டுத் தாக்குதலையடுத்துப் பலஸ்தீன அதிபர் தமது மூன்று பாதுகாப்பு அதிகாரிகளைப் பதவியிலிருந்து நீக்கியிருக்கிறார்.

தீவிரவாதிகளைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்க அப்பாஸ் வாக்குறுதியளித்திருக்கும் வேளையில், இம்மாதிரியான சம்பவங்கள் இடம்பெறுவது அமைதி முயற்சியைப் புஸ்வாணமாக்கி விடும் என்று அஞ்சப்படுகின்றது.

இம்மாதிரி சம்பவங்கள் இடம்பெறாது தடுப்பதற்கான காஸா எல்லைப்பகுதியில் தமது பாதுகாப்புப் படைகளை அதிபர் நிறுத்திவைத்துள்ளார். அப்படியிருந்தும் தீவிரவாதிகள் மோட்டார் குண்டுத் தாக்குதல்களை நடத்தியிருப்பது அவருக்குச் சங்கடத்தை ஏற்படுத்தியுள்ளது.

மூன்று உயர்மட்ட பாதுகாப்பு அதிகாரிகளும் ஆறு கீழ்நிலைப் படையினரும் பதவியிலிருந்து தூக்கப்பட்டுள்ளனர்.

"எவரும் தமது கடமைகளை உதறித்தள்ள முடியாது - நடவடிக்கை எடுக்கப்படும்'' என்று அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்தச் செயற்பாட்டை அமெரிக்கா பாராட்டியுள்ளது. "அதிபர் அப்பாஸ் தமது நிலைப்பாட்டில் பற்றுறுதியுடன் இருக்கிறார் என்பதை இது காட்டுகின்றது'' என்று புஷ் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

## சீறுகின்றது அமெரிக்கா எதிர் நடவடிக்கைக்கு ஜரூர்

### வடகொரியாவின் மூர்க்கமான பிடிவாதம்

வடகொரியா தன்னிடம் அணுகுண்டு இருப்பதாக அறிவித்ததையடுத்து அந்நாட்டின் மீது உலக கவனம் மீண்டும் திருப்பப்பட்டுள்ளது.

அணு குண்டுத் தயாரிப்புக்குத் தேவையான யுரேனியம் செறிவூட்டலை மட்டுமே நடத்தி வருவதாக முன்னர் வடகொரியா தெரிவித்து வந்துள்ளது. இந்தச் செயற்பாட்டை நிறுத்த வேண்டும் என்று அமெரிக்காவும் வேறுபல நாடுகளும் கோரி வந்தன. அதனை நிறுத்துவதானால் ஈடாகச் சலுகைகள் தரப்பட வேண்டும் என்று வடகொரியா கோரிவந்தது.

இந்தப் பிரச்சினைக்கு ஒரு முடிவு கட்டுவதற்கென 6 நாடுகளின் மாநாடொன்றும் நடைபெற்று வந்தது. இந்த மாநாட்டிலிருந்து சில காலத்துக்கு முன் விலகிச்சென்ற வடகொரியா, மீண்டும் பேச்சுக்களில் கலந்துகொள்ள வருவதாக அறிவித்திருந்தது.

இந்த மாநாட்டுக்கான ஏற்பாடுகள் நடைபெற்று வந்தவேளையில், வடகொரியா தன்னிடம் அணுகுண்டு இருப்பதாக அறிவித்து உலகத்தை வியப்பில் ஆழ்த்தியது.

இந்தநிலையில், வடகொரியாவை மீண்டும் பேச்சு மேசைக்கு வரச் செய்வதற்கான முயற்சிகள் நடைபெற்று வரும் அதேசமயம், வடகொரியாவுக்கு மேற்கொண்டு சலுகைகள் வழங்க முடியாதென்று அமெரிக்கா அறிவித்துள்ளது. வடகொரியா தனது ஸ்டாலினியப்போக்கிலிருந்து திசைமாற வேண்டும் என்பது அமெரிக்காவின் வலியுறுத்தல்.

ஆனால், வடகொரியா அரசை அழிப்பதே அமெரிக்காவின் நோக்கம் என்பது அந்நாட்டின் குற்றச்சாட்டு.

உலகம் முழுவதும் ஜனநாயகத்தை நிலைபெறச்செய்வதே புஷ் நிர்வாகத்தின் இப்போதைய கொள்கை என்பது அண்மையில் வெளியான கொள்கைப் பிரகடனம். ஜனநாயகம் என்பது அமெரிக்காவைப் பொறுத்தவரை மக்களால் தெரிவுசெய்யப்படும் அரசு உலகெங்கும் நிலைபெற வேண்டும் என்பதாகும். அந்தவகையிலேயே, ஆப்கானிஸ்தான், ஈராக் முதலிய நாடுகளில் அதன் செயற்பாடுகள் இருந்துள்ளன. பலஸ்தீனத்திலும் இம்மாதிரியான அரசு நிலைபெறுவதையே அது ஆதரிக்கின்றது.

பாகிஸ்தானில் அதிபர் முஷாரப் தொடர்ந்து சர்வாதிகாரியாக நிலைபெற்றிருப்பதை அமெரிக்கா விரும்பவில்லை. அவர் முன்னர் மக்களுக்கு அளித்த வாக்குறுதிப்படி நடந்து கொள்ள வேண்டுமென்று அண்மையில் அமெரிக்கா நெருக்குதல் கொடுத்துள்ளது.

இவைகளைப் பார்க்கும்போது ஒரு கட்சி ஆட்சி நடைபெறும் - அதுவும் ஸ்டாலினிஸம் முன்னெடுக்கப்படுதாகக் கூறப்படும் வடகொரியா - அமெரிக்கா விஷயத்தில் அச்சம் கொள்வது இயற்கையே.

அதற்காக அணு ஆயுதத்தை வைத்துக் கொண்டு அந்த நாடு என்ன செய்யப் போகிறது? என்பது முக்கியமானதொரு கேள்வி.

### அணு குண்டு சோறு போடுமா?

அணு குண்டு சோறு போடாது. மக்கள் பட்டினி கிடந்து சாகமுடியுமா?

வறுமையில் வாடும் மக்களுக்காகவாவது உலக நாடுகளின் ஓரங்கட்டுதலிலிருந்து விடுபட வடகொரியா ஒரு நிலைப்பாட்டை எடுக்க வேண்டும்.

ஐ.நா., ஐரோப்பிய யூனியன் மற்றும் பல நாடுகள் வடகொரியாவை 6 தரப்புப் பேச்சில் கலந்துகொள்ளுமாறு வேண்டுகோள் விடுத்துள்ளன. பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிக்க முடியும் என்ற நம்பிக்கையை சீனாவும் வெளியிட்டுள்ளது. தென்கொரிய ஜனாதிபதி றொஹ் மூ ஹியுன் வட கொரியாவின் நிலை பற்றிக் கருத்து எதுவும் வெளியிடாது போனாலும், ஐநா. பாதுகாப்புச்சபையை அவசரமாகக் கூட்ட வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளார்.

வடகொரியா அணு ஆயுத உற்பத்தி முயறசியில ஈடுபட்டுவருவதாக 2002ஆம் ஆண்டு ஒகரோபரிலிருந்து அமெரிக்கா குற்றஞ்சாட்டிவந்துள்ளது.

### ஈராக்கின் புதிய பிரதமர்

ஈராக்கின் தெரிவுசெய்யப்பட்ட பிரதமராக இஸ்லாமியவாதியும் ஷியித் இன அரசியல் வாதியும் வெளிநாட்டில் தஞ்சமடைந்திருந்து திரும்பியவருமான இப்ராகீம் அல் - ஜாபாரி என்பவர் தெரிவுசெய்யப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இப்ராகீம் அல் - ஜபாரி ஒரு மருத்துவர். ஐந்து பிள்ளைகளின் தந்தை. டாவா கட்சியின் தலைவர். ஐக்கிய ஈராக்கிய கூட்டணி கட்சிகள் இரண்டில் இது ஒன்று. கடந்த ஜனவரி 30ஆம் திகதி நடந்த தேர்தலில் இந்தக் கூட்டணி 48 சதவீத வாக்குகளைப்பெற்றது.

58வயதான இவர், இப்போதைய இடைக்கால அரசில் உதவித் தலைவராகப் பதவி வகிக்கின்றார். 1980ஆம் ஆண்டு இவர் சதாம் ஹுசைன ஆட்சியில் ஆயிரக்கணக்கான டாவா ஆதரவாளர்கள் கொல்லப்பட்டபோது நாட்டை விட்டு ஓடினார். தற்பொழுது அவரது குடும்பம் லண்டனில் இருந்து வருகின்றது.

ஷயித்துக்கள் சதாம் ஹுசைன் ஆட்சியின் போது பல கொடுமைகளுக்குள்ளாக்கப்பட்டு வந்துள்ளார்கள். அக்காலத்தில் செல்வாக்குப்பெற்ற இனமாக, ஆனால், சிறுபான்மையோராக இருந்துள்ள சன்னி முஸ்லிம்கள் இம்முறை ஓரங்கட்டப்பட்டுள்ளார்கள். இனக்கலவரங்களுக்குப் பயந்து அவர்கள் தேர்தலைப் பகிஷ்கரித்திருந்தார்கள்.

ஆனால், அவர்களும் புதிய ஈராக்கிய அரசில் முக்கிய பங்கு, பணி ஆற்றுவார்கள் என்று ஷயித் தலைவர்கள் கூறியுள்ளனர்.

## காஸா துறைமுகத்தைப் பலஸ்தீனியர் கட்டியெழுப்ப அனுமதிக்கப்படுவர்

### வெளியேறும் யூதர்களுக்கு நஷ்டஈடு

காஸாவிலிருந்து இஸ்ரேலியக் குடும்பங்கள் வெளியேறும்போது அவர்களுக்கு நஷ்டஈடு வழங்குவதற்கு ஏற்பாடு செய்வதற்கான ஒரு மாசோதாவை இஸ்ரேலிய நாடாளுமன்றத்தில் பிரதமர் ஏரியல் ஷரோன் தாக்கல் செய்துள்ளார்.

இந்த வருடக்கடைசியில் இஸ்ரேலியர் ஆக்கிரமித்த காஸாவிலிருந்து வெளியேறி விடுவார்கள், இந்தத் திட்டத்தைக் குலைத்து விடுவதற்காகத் தன்னையும் வேறு சில அமைச்சர்களையும் தீர்த்துக் கட்டப்போவதாக விடுக்கப்பட்டுள்ள அச்சுறுத்தலுக்குத் தாம் விட்டுக் கொடுக்கப்போவதில்லையென்று ஷரோன் நாடாளுமன்றத்தில் கூறினார்.

இஸ்ரேலிய குடியேற்றக்காரர்களும் இராணுவத்தினரும் காஸாவிலிருந்து வெளியேறும் நடவடிக்கை வருடக்கடைசியில் முடிவடையும். அவ்வேளையில், காஸாப் பகுதி சூனியப் பிரதேசமாகிவிடக்கூடாதென்பதில் தாம் கவனமாக இருப்பதாகவும் அந்தப்பகுதி ஹமாஸ்களிடமோ, இஸ்லாமிய ஜகாத்திடமோ போய் விடக்கூடாது. அப்பிரதேசம் பலஸ்தீனிய அதிகாரசபையின் கைக்கு அது போகவேண்டும் என்று வலியுறுத்தினார் "அது எமக்கு மிக முக்கியமான விஷயம்'' என்றார் ஷரோன்.

உலக வலம்

மேனா

### பலஸ்தீனர்கள் காஸா துறைமுகத்தைக் கட்டியெழுப்பலாம்

இஸ்ரேலிய இராணுவமும் யூதக் குடியேற்றவாசிகளும் காஸாவிலிருந்து வெளியேறியதன் பின்னர் காஸா துறைமுகம் இஸ்ரேலியரிடமிருந்து விடுபட்டுவிட்டது என்பதைக் காட்டவும் தேசிய அடையாளமாகவும் காஸா துறைமுகத்தை அவர்கள் கட்டியெழுப்புவதற்கு அனுமதிக்கப்படுவார்கள் என்றும் இஸ்ரேலிய வெளியுறவு அமைச்சர் சில்வன் ஷலோம் கூறியுள்ளார்.

சமீபகாலம் வரை அப்படியான துறைமுகம் ஒன்றைக் கட்டியெழுப்ப அனுமதிப்பதானது பெரும் ஆபத்தை விளைவிக்கும் போர்த் தாங்கிகள் போன்ற கனரக ஆயுதங்களைக் கடத்தி வர இது வசதியளிக்கும் என்று இஸ்ரேல் கூறி வந்துள்ளது.

ஆனால், அதை அனுமதிப்பது என்று தமது அரசு தீர்மானித்திருப்பதாக ஷலோம் லண்டனில் இப்போது கூறியுள்ளார்.

பலஸ்தீன அதிபர் மஹ்மூத் அப்பாஸுக்கும் இஸ்ரேலியப் பிரதமர் ஏரியல் ஷரோனுக்குமிடையில் அண்மையில் நடந்த பேச்சின்போது காஸா துறைமுகம் பற்றிய தீர்மானம் எடுக்கப்பட்டதாக ராஜதந்திர வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

மேற்குக்கரை நகரங்களைப் படிப்படியாகப் பலஸ்தீனர்களிடம் கையளிக்கும் இஸ்ரேலியரின் அடையாளமாக இது அமையுமென்றும் இந்தவகையில், இருதலைவர்களுக்குமிடையில் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தப் பொதியில இஸ்ரேலியர் இவ்வாறு வாக்களித்திருப்பதாகவும் கருதப்படுகின்றது.

இத்துறைமுகத்தில் கையாளப்படும் பொருள்களை யார் கண்காணிப்பது என்ற பிரச்சினை குறித்து ஆராயப்படவில்லை. துறைமுகம் கட்டிமுடிக்கப்படுவதற்கு மூன்று வருடகாலம் எடுக்கும் என்பதால், அந்தப் பிரச்சினை இப்போது எழவில்லையென்று தெரிகிறது. ❊

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இழந்த சக்தியை மீண்டும் பெற்றிட
பாவியுங்கள்
றோயல் குளுக்கோஸ்
100% சுத்தமானது!
உங்கள் வியாபாரிகளிடம் நீங்கள் குளுக்கோஸ் வாங்கும் போது குளுக்கோஸ் என்று கேட்காமல்
றோயல் குளுக்கோஸ் தாருங்கள் என்று கேட்டு வாங்குங்கள்
PACKED BY:
ROYAL Industries Colombo 12
☎ : 0112334603
அனைத்துப் பார்மஸிகளிலும், கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம் →
(C/86310)
ROYAL Pure Glucose
ஏக விநியோகஸ்தர்கள்:
சிவா நறுமணப் பூங்கா
288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
☎ : 021 222 2567

இப்பொழுது உள்நாட்டு வெளிநாட்டிற்கான
சிறியதோ, பெரியதோ, எந்த அளவுகளிலான
பொதிகள், கடிதங்களை எந்த நாட்டிற்கும்
எந்நேரமும் துரிதமாகவும்
குறைந்த கட்டணத்தில் அனுப்பிட நீங்கள்
நாடவேண்டிய ஒரே வழி
FedEx Express®
விரைவு | பாதுகாப்பு | நம்பகத்தன்மை
தொடர்புகளுக்கும், மேலதிக விபரங்களுக்கும் நாடுங்கள்
திருமுருகன் கொம் நெற்
46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
(பலநோக்கு கூ.ச. முன்பாக)
Tel - 021 222 7560
Fax - 021 222 7310
259, கே.கே.எஸ் றோட், யாழ்ப்பாணம்.
(Opposite All Ceylon Distributors)
Tel - 021 222 7835
Fax - 021 222 7836
எமது நிறுவனத்துக்கு வேறு கிளைகள் இல்லை

புறநிலைப் படிப்புகள் அலகு
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
Extra-Mural Studies Unit
University of Jaffna

2005/2006 ஆம் கல்வியாண்டிற்கான அடிப்படைக் கற்கைநெறிகள்
Foundation Courses for the academic Year 2005/2006.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகு பின்வரும் அடிப்படைக் கற்கை நெறிகளை 2005/2006 கல்வியாண்டில் நடத்தவுள்ளது. இவை சனி, ஞாயிறு தினங்களில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் மு.ப.9.00 முதல் 12.00 மணிவரை இடம்பெறும். இக்கற்கை நெறிகளைப் பயிலச் சான்றிதழ்கள் எதுவும் தேவையில்லை. ஆர்வமே தகுதியாகக் கொள்ளப்படும். 18 வயதிற்கு மேற்பட்டவர்கள் எவரும் தமது முகவரியுடன் கூடிய முத்திரை ஒட்டப்பட்ட கடிதஉறையுடன் சுயமாகத் தயாரிக்கப்பட்ட சுயவிவரக்கோவையை இணைத்து அடிப்படைக் கற்கைநெறியின் தலைப்பைக் குறிப்பிட்டுத் தனித்தனியாக விண்ணப்பிக்கலாம். ஒருவர் எத்தனை கற்கைநெறிகளுக்கும் விண்ணப்பிக்கலாம். ஒருவர் ஒரே நேரத்தில் ஒரு கற்கைநெறியைப் பயில மாத்திரம் அனுமதிக்கப்படுவர். குறித்தவொரு கற்கைநெறிக்குப் போதியளவு விண்ணப்பங்கள் கிடைக்கப் பெறுமிடத்தே கற்பித்தல் இடம்பெறும். அடிப்படைக் கற்கைநெறி ஒன்று குறைந்தது 48 மணித்தியாலக் கற்கைக்காலத்தைக் கொண்டது. பதிவுக்கட்டணமாக ரூபா ஆயிரம் (1000.00) செலுத்துதல் வேண்டும்.

1.0 அடிப்படைக் கற்கை நெறிகள்

1.1 தொடர்பாடலுக்கான ஆங்கிலம் (அடிப்படை)
**English for Communication (Basic)**
1.2 தொடர்பாடலுக்கான ஆங்கிலம் (உயர்தரம்)
English for Communication (Advanced)
1.3 அலுவலகத்தில் பணிபுரிவோருக்கான ஆங்கிலம்
English for Office Staff
1.4 மொழிபெயர்ப்புக்கலை Art of Translation
1.5 முன்பள்ளிக் கல்வி Pre-School Education
1.6 பெண்களும் அபிவிருத்தியும் Women & Development
1.7 இதழியல் Jounalism
1.8 நாட்டுப் புறவியல் Folk Lore
1.9 நூலகவியல் Library Science
1.10 அலுவலக முகாமைத்துவம் Office Management
1.11 சிறுதொழில் முகாமைத்துவம் Small Business Management
1.12 சூழல் முகாமைத்துவம் Environmental Management
1.13 சந்தைப்படுத்தல் முகாமைத்துவம் Marketing Management
1.14 தகவல் தொழில்நுட்பம் Information Technology
1.15 கணனி விஞ்ஞானம் Computer Science
1.16 ஆடை அமைத்தலும் தையலும் Clothing & Sewing
1.17 சோதிடக்கலை Astrology
1.18 கோயிற்கலை Temple Arts
1.19 கோயில் நிர்வாகம் Temple Administration
1.20 சிவாச்சாரியரின் பங்கும் பணிகளும் Contributions and functions of Sivacharyas

புலமைச் சான்றோர் (Resource Person)
மேற்படி தலைப்புக்களில் நடைபெறவுள்ள கற்கை நெறிகளில் புலமை சான்றோராகப் பணியாற்ற விருப்பமும் தகுதியுமுள்ள பல்கலைக்கழகத்துக்கு வெளியேயுள்ள புலமை சான்றோர் சுயமாகத் தயாரிக்கப்பட்ட படிவத்தில் தங்கள் துறைசார் தகைமையை உறுதிப்படுத்தக்கூடியவகையிலமைந்த சுயவிவரக் கோவையை (Bio-Data) இணைத்து புறநிலைப்படிப்புகள் அலகுக்கு விண்ணப்பிக்கவும்.

- இணைப்பாளர்.
புறநிலைப்படிப்புகள் அலகு,
யாழ்.பல்கலைக்கழகம். 11.02.2005
(C-40979)

## சுழிபுரம் மீனவர்களுக்கு மீன்பிடி உபகரணங்கள் கையளிப்பு

வலி.மேற்கு,பெப்.20

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட சுழிபுரம் காட்டுப்புலம் பகுதி மீனவர்களின் பயன்பாட்டுக்கென 18 லட்சம் ரூபா பெறுமதியான வெளியிணைப்பு இயந்திரம் பொருத்தப்பட்ட ஐந்து பிளாஸ்ரிக் படகுகளையும் மீன்பிடி உபகரணங்களையும் தென்னிந்தியத் திருசசபையினர் வழங்கியுள்ளனர்.

45 கடற்றொழிலாளர்கள் சுழற்சி முறையில் பயன்படுத்தக்கூடியவாறு இந்தக் கடற்றொழில் உபகரணங்களைக் காட்டுப்புலம் கெங்காதேவி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தினரிடம் அவர்கள் வழங்கியுள்ளனர்.

தெனனிந்தியத் திருச்சபையின் வட்டுக்கோட்டைப் பங்குத் தந்தையால் மேற்படி உபகரணங்கள வழங்கப்பட்ட நிகழ்வில் வலி. மேற்கு பிரதேச செயலர் சீ.ஏ.மோகன்றாஸ் கலந்துகொண்டார். (3-203-175)

## சிறுவர்கள் ஒன்றுகூடல்

வலி.மேற்கு,பெப்.20

சுனாமியால் பாதிக்கப்பட்ட வடமராட்சியைச் சேர்ந்த சிறுவர்களும், வலிகாமத்தைச் சேர்ந்த சிறுவர்களும் கலந்துகொள்ளும் ஒன்றுகூடல் நிகழ்வொன்று இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு மானிப்பாய் சென்.ஆன்ஸ் பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

'கியூடெக்' நிறுவனத்தின் சமாதான செயற்றிட்டத்தின் கீழ் இந்நிகழ்வு ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் சுனாமி கடலலை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மணற்காடு மற்றும் பொற்பதி ஆகிய இடங்களைச் சேர்ந்த சிறுவர்களை வலிகாமம் மானிப்பாய் பிராந்திய சிறுவர் குழுக்கள் வரவேற்க உள்ளன.

இவர்கள் அன்பளிப்புப் பொருள்களைப் பரிமாறிக்கொள்வதுடன், தங்களுக்கிடையிலான உறவுப் பரிமாற்றங்களையும் மேற்கொள்ளவுள்ளனர். (3-152)

## கூட்டம்

யாழ்ப்பாணம்,பெப்.20

கொக்குவில் இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்குக் கல்லூரியின் பஞ்சலிங்கம் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது. (3-202)

பதவி வெற்றிடம்

புங்குடுதீவு நயினாதீவு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் பின்வரும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தகுதியான ஆண்கள் மட்டும் விண்ணப்பிக்கலாம்.

1. இலிகிதர்: க.பொ.த. (சா.த.) பரீட்சையில் கணிதம் / வர்த்தக எண்கணிதம் / எண்கணிதம் மற்றும் தமிழ் மொழி உட்பட ஐந்து பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
சம்பளத் திட்டம்: 2700 - 4000 / 60x10 - 70x10

2. லொறிச் சாரதி: ஐந்தாம் வகுப்புக் கல்விச் சான்றிதழ். அத்துடன், லொறிச் சாரதி அனுமதிப்பத்திரம் மற்றும் நான்கு வருடங்களுக்குக் குறையாத லொறிச் சாரதி அனுபவம் இருத்தல் வேண்டும்.
சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

வயதெல்லை: 18 - 45 வரை
விண்ணப்ப முடிவு திகதி: 07.03.2005

பொதுமுகாமையாளர்
புங். நயி. ப.நோ.கூ. சங்கம்.
(சி-41076) (24-14)

WANTED

Applications are invited for the Post of an Executive Officer for a newly established private Nursing Home.

The applicant should,
(1) have experience in managing an institution, which includes knowledge in Accounting and capability of supervising other staff.
(2) be able to communicate in English fluently. knowledge of Sinhala would be an added qualification.
(3) be able to lead the team, with his strict but friendly personality.

Please apply with your resume and the expected renumeration, to be reached on or before 28.02.2005.
To:
**Durdans – Sambanthar Collection Centre**
**574/1, Hospital Road, Jaffna.**
(42198)







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் பிரமாண்டமான நாடக மேடையேற்றம்

போர் தந்த வாழ் வீழிவைப்
போக்கும் திறன் முறை செய்...
வேர் கொண்டெமுக உந்தன்
வீழுதும் வளர்க இன்றே...



யாழ்.செயல் திறன் அரங்க இயக்கத்தின் நேர்த்தியான தயாரிப்பில் தே.தேவானந்தின் எழுத்துரு, நெறியாள்கையுடன் மேடைக்கு வரும் –

**ஆச்சிகள் அழிக்கும் கண்ணிகைகள்** – நாடகம்

23.02.2005 காலை 10.30 மணி, மாலை 3.30 மணி.

எமது ஆழ்மனங்களில் சிறைப்பட்டுக்கிடக்கும் உணர்ச்சிப் படிமங்கள் அரங்க வெளிக்குள் பிரமிப்பூட்டும் காட்சித் துண்டங்களாக கோர்க்கப்பட்டுள்ளன.

நாடகமும் அரங்கியலும் துறைசார் மாணவர்களும், ஆர்வலர்களும் பார்க்கவேண்டிய படைப்பு. வருக!!

நாடக மேடையேற்றத்தின் மூலம் பெறப்படுகின்ற நிதி அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் 20 கிராமங்களில் நடைமுறைப்படுத்துகின்ற பெண்கள் அபிவிருத்தி திட்டத்தின் ஊடாக பெண் தலைமைத்துவக் குடும்பங்களின் பொருளாதார மேம்பாட்டுக்காக வழங்கப்பட இருக்கிறது.

உங்களது ஆதரவு ஆதரவற்றவர்களை வலுப்படுத்தும்.

குறிப்பு: 2004 டிசெம்பர் 26ம் திகதி அன்று நடைபெறவிருந்த நாடக மேடையேற்றம் ஆழிப்பேரலை அனர்த்தம் காரணமாக இடைநிறுத்தப் பட்டது. அன்றைய தினத்திற்கு நுழைவுச்சீட்டுக்களை, அழைப்பிதழ்களை பெற்றவர்களும் இதில் பங்குபற்றலாம்.

நுழைவுச் சீட்டுக்களை மண்டப வாயிலில் பெற்றுக்கொள்ளலாம்.
நுழைவுச் சீட்டு 20/–, 50/–

Active Theatre Movement
செயல்திறன் அரங்க இயக்கம்

UNDP
Strengthening Information Capacities for the Peace Process

TARO

ஊடக அனுசரணை: உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்


# நினைவலைகள்

| 6 ஆம் மாதம் | | 31 ஆம் நாள் |
|---|---|---|
|  | |  |
| 30.06.1916<br>10.09.2004 | உதிப்பு<br>உதிர்வு | 05.12.1925<br>19.01.2005 |
| **சுப்பிரமணியம் குமாரசிங்கம்** | | **இரத்தினாம்பிகை குமாரசிங்கம்** |

'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்'
இந்நாளில் நினைவு கூர்ந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பழமுதிர்ச்சோலை,
முத்துக்கிருஷ்ணர் வீதி,
சுன்னாகம். (42313)(38-16-18)

மாலினி குகநேசன்
(மகள்).

# மரண அறிவித்தல்கள்

## சிவசங்கரன் சிவகணேசன் (கணேசன்)



புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலியை வதிவிடமாகவும் கொண்ட சிவசங்கரன் சிவகணேசன் (கணேசன் - உரிமையாளர் - கணேசன் ஸ்ரோர்ஸ், திருநெல்வேலிச் சந்தை உட்புறம் - யாழ்ப்பாணம், கணேசன் ஸ்ரோர்ஸ் வெள்ளவத்தை, கொழும்பு) அவர்கள் 18.02.2005 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நணபர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*திருநெல்வேலி.*
*T.P.No:- 3874* (42311)(38-16-18)

தகவல்:
வ.பஞ்சநாதன்.

## கந்தையா சோதிலிங்கம்



அரியாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சோதிலிங்கம் (ஓய்வுபெற்ற பிஸ்கால் உத்தியோகத்தர்) 18.02.2005 வெள்ளிக்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் புத்தூர் கந்தையா - உமையவல்லியின் அன்புப் புதல்வனும் சிவபாக்கியத்தின் (கனடா) அன்புக் கணவரும் கல்பனா (கனடா), மயூரன் (கனடா), தேனுஜா (கனடா), அனோஜா (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் சுப்பிரமணியம் (ஓய்வுபெற்ற C.T.B. உத்தியோகத்தர்). பரராஜசிங்கம (ஓய்வுபெற்ற C.T.B. உத்தியோகத்தர்), புவிராஜசிங்கம் (ஓயவுபெற்ற கல்வித் திணைக்கள உத்தியோகத்தர்), காலஞ்சென்ற பேரின்பநாதன், காலஞ்சென்ற கமலாம்பிகை, புஸ்பராணி, யோகாம்பிகை (கனடா), பாலாம்பிகை ஆகியோரின் அன்புச் சகோதரனும் கமலராணி, சந்தானலட்சுமி, சோமாதேவி, நடராசா (ஓய்வுபெற்ற C.T.B. உத்தியோகத்தர்), நடராசா (அதிபர்-அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாசாலை), இலங்கேஸ்வரன் (கனடா), சுரேந்திரா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*24/1, நொத்தாரிஸ் லேன்,*
*அரியாலை.* (42311)(38-16-18)

தகவல்:
குடும்பத்தினர்.


## வீடு விற்பனைக்கு உண்டு

G.P.S. Road கல்வியங்காட்டில் இருக்கும் 4 பரப்பு 3 குழி சுற்றுமதில் கொண்ட காணியும் அதில் அமைந்த 5 அறைகள் கொண்ட பெரிய வீடும் விற்பனைக்குண்டு. இவ்வாதனத்தை விலைக்கு வாங்க விரும்புவோர் பின்வரும் முகவரிக்கு தொடர்புகொள்ளவும்.

கலைச்சோலை,
G.P.S. Road,
கல்வியங்காடு
T.P.: 0777 071819 (சி-41090)

## A/C CAR

Available for Luxary
Drive For VIP'S
for short Runs
T.P.:0777 283795
(சி-41070)

## THE ROYAL COLLEGE OF JAFFNA

சுலபமாக ஆங்கிலத்தில் கதைக்கப்பயில புதிய காலை, மாலை வகுப்புகள் ஆரம்பம்
BY: விக்னேஸ்வரன் ஆச்சாரி, 426 (302), K.K.S., வீதி, யாழ்ப்பாணம். மாதாந்தக் கட்டணம் 150/= (42306)

## லஷ்சுமி சினிமா இணுவில்



பிரசாந், சினேகா, வடிவேல் நடித்த
ஆய்த்தம்
தினசரி: 11.00, 3.00, 7.00
21 முதல் நாம்

## மனோகரா யாழ்ப்பாணம்

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு இளையதளபதி விஜய் (சிறப்புத் தோற்றம்), நமீசா, ரவிகிருஷ்ணா, ரம்பா நடித்த



காட்சி நேரம்: 10.30, 2.30, 6.30, 9.30

## நிறைஞ்சனாஸ் சங்கானை

ரஜனி, அம்பிகா, சத்தியராஜ் நடித்த
நான் சிகப்பு மனிதன்
காட்சி நேரம்: 11.00. 2.45. 6.00. (பு.நே.) (C/40067)

## நாதன்ஸ் சினிமா யாழ்ப்பாணம்

ஆஸ்பத்திரிக்கு முன்பாக

பரத், சந்தியா மற்றும் பலர் நடித்த
**காதல்** சில தினங்கள் மட்டும்
ஜெய்ஆகாஷ், பிரமதி, நாசர், விஜயகுமார், இளவரசி நடித்த **குருதேவா** இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு விரைவில் எதிர்பாருங்கள் எமது அடுத்த வெளியீடு
தினசரி: 10.30. 2.30. 6.30.9.30. (பு.நே.)

## நாகம்ஸ் சினிமா சுன்னாகம்



5 ஆவது வெற்றி வாரம்
கமலஸ், ஸ்ரீதேவி, கருணாஸ், கபாலி, குணால், நாசர் நடித்த
தேவதையைக் கண்டேன்
தினசரி 11.00 3.00 7.00. (பு.நே.)
21 ஆம் திகதி முதல் விஜய், திரிஷா நடித்த
திருப்பாச்சி
(C/39654)

## ராஜா யாழ்ப்பாணம்

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தினவெளியீடு
அஜித், திரிஷா, மணிவண்ணன், விசு நடித்த



ஜி
காட்சி நேரம்: 10.30, 2.30, 6.30, 9.30. (பு.நே.)


# மரண அறிவித்தல்

## கிட்டிணன் தியாகராசா

இமையாணன், கேணியடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கிட்டிணன் தியாகராசா அவர்கள் நேற்று (19.02.2005) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் கிட்டிணன் - அம்மா தம்பதிகளின் ஏக புத்திரனும், இன்பராணியின் அன்புக் கணவரும் கவிதா, அமுதா (உடுப்பிட்டி, பற்சிகிச்சை நிலையம்), தவசீலன் (ஆயப்பகுதி, கிளிநொச்சி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் கணேசலிங்கம் (யாழ். அச்சுவேலி மத்திய கல்லூரி), கேசிகதாஸ் ஆகியோரின் அருமை மாமனாரும் குணசீலன், குணமோகனா ஆகியோரின் பெரியப்பாவுமாவர்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.02.2005) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இமையாணன்,*
*கேணியடி.* (C-41092)

தகவல்:
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்கள்

## நாகமணி வல்லிபுரம்



உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் அரியாலையை வசிப்பிடமாகவும் கொண்ட நாகமணி வல்லிபுரம் (ஓய்வுபெற்ற பிரதம எழுதுநர், இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம்) நேற்று (19.02.2005) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகமணி பொன்னம்மாவின் அன்பு மகனும் தங்கராணியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற வாரித்தம்பி மற்றும் அன்னம்மாவின் அன்பு மருமகனும் சந்திரிக்கா (வசந்தா- ஆசிரியர், கைதடி முத்துக்குமார சுவாமி ம.வி.) அவர்களின் அன்புத் தந்தையும் தர்மரட்ணம் (அகில இலங்கை சமாதான நீதிவான், கணக்குப் பதிவாளர் யாழ். மாவட்ட செயலகம்) அவர்களின் அன்பு மாமனாரும் ராகுல் (யா/இந்துக் கல்லூரி), பிரகாஷ் (கைதடி முத்துக் குமாரசுவாமி ம.வி.), சங்கவி (யா/புனித யோன் பொஸ்கோ வி.) ஆகியோரின் அன்புப் பேரனும் வேலுப்பிள்ளை, சின்னத்துரை மற்றும் காலஞ்சென்றவர்களான கந்தையா, தங்கமுத்து, சின்னம்மா, கமலாவதி ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (20.02.2005) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு அவரின் இல்லத்தில் இறுதிக்கிரியைகள் இடம்பெற்றுப் பின்னர் தகனக்கிரியைக்காக நல்லூர் செம்மணி இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*33/9 (15/4), கலைமகள் வீதி.*
*அரியாலை மேற்கு,*
*யாழ்ப்பாணம்.* (42307)(38-16-18)

தகவல்:
தா.தர்மரட்ணம்.J.P.
(யா/மாவட்ட செயலகம்
கணக்குப் பதிவாளர் -
மருமகன்),

## இராயப்பு இம்மானுவல்

### (இராசேந்திரம்)



சில்லாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராயப்பு இம்மானுவல் 18.02.2005 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராயப்பு - மேரிப்பிள்ளையின் அன்பு மகனும் மரியம்மாவின் அன்புக் கணவரும் றீற்றம்மா, காலஞ்சென்ற பாக்கியநாதர், காலஞ்சென்ற அல்பிரட், ஆங்கிறேஸ் புஸ்பம், காலஞ்சென்ற யோசேப், மரிய கொறற்றி, யோணபிள்ளை ஆகியோரின் சகோதரனும் லூர்த்தமமா, வலேரியாம்பிள்ளை, பத்திநாதர், காலஞ்சென்ற மாகிறெற், அடைக்கலம், காலஞ்சென்ற அமிர்தநாதர், சந்தியாப்பிள்ளை, அதிரியாம்பிள்ளை (கனடா) ஆகியோரின் மைத்துனரும் பிரான்சிஸ் சேவியர் (பிரான்ஸ்), இம்மாக்குலேற்றா, மெக்டலின் (கனடா), வெலிசியா, காலஞ்சென்ற யூட் அன்ரனி, அருட்தந்தை ஜோர்ஜ் அன்ரனி (செ.து), லூயிஸ் அன்ரனி, யோசவ் அன்ரனி ஆகியோரின் அன்புத தநதையும் பிரான்சிஸ் நெல்சன், மேரிறோஸ் அழகுராணி (பிரான்ஸ்), வில்பிறட் (கனடா), தேவரஞ்சிதம் ஆகியோரின் அன்பு மாமனாரும் விலிஙசன, டெலிசியா, டொசியா, ஜெக்சன், டெலக்சியா, டென்சியா, றிமோசா, ஜெவர்சன், யூட்சன், ஜெலர்சன், டிலக்சன், டிலக்சனா, நிதர்சன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (20.02.2005) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு நல்லடக்கத்திற்காக அவரின் இல்லத்தில் இருந்து பண்டத்தரிப்பு சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இந்துக் கல்லூரி வீதி,*
*பண்டத்தரிப்பு.* (42309)(38-16-18)

தகவல்:
குடும்பத்தினர்.

## சீனியர் செல்வநாயகம்

### (பண்டா - ஐங்கரன் ஸ்ரோர்ஸ்)



சந்தன் புளியடி, காரைநகரைப் பிறப்பிடமாகவும் அராலி வடக்கை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட சீனியர் செல்வநாயகம் நேற்று (19.02.2005) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சீனியர் - பாக்கியத்தின் பாசமிகு மகனும் கோபாலபிள்ளை - தில்லையம்மா ஆகியோரின் பாசமிகு மருமகனும் செந்தமிழ்ச்செல்வியின் அன்புக் கணவரும் ராகவியின் அன்புத் தந்தையும் யோகமலர், றோசமலர், இராசமலர், கனகரத்தினம், இன்பமணி, சுப்பிரமணியம், இராசநாயகம், அருமைநாயகம் (அன்பு), சுகிர்தமலர், பஞ்சலிங்கம் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் பாலசிங்கம், குணநாயகம், சிவபாதம், யோகானந்தன், சிவராசா, சிவநாயகி, ரேணுகாதேவி, நந்தகுமாரி, புவனேஸ்வரி, பரமேஸ்வரன், நாகேஸ்வரன், சாந்தினி, மதியழகன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.02.2005) ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றுப் பிற்பகல் 1.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைநகர் சாம்பலோடை இந்துமயானத்திற்கு எடுத்துச்செலலப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*செட்டியார் மடம்,*
*அராலி, வட்டுக்கோட்டை.* (சி-42305)(38-16-18)

தகவல்:
மனைவி,
சகோதரர்கள்.

## சுப்பிரமணியம் சிவராஜா



டச்சுவீதி, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் சிவராஜா (வாகனத் தரகர்) அவர்கள் நேற்று (19.02.2005) சனிக்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம் - சின்னத்தங்கம் ஆகியோரின் அருமை மகனும் நாகம்மாவின் அன்புக் கணவரும் ராஜரட்ணம் (CHE.ENG மொறட்டுவ) அருமைச் சகோதரனும் இராஜதி (கொழும்பு), கிருபாகரன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் கெங்கேஸ்வரன், அமுதினி ஆகியோரின் மாமனாரும் லகோஷனா, துஷாந்தி, தீட்ஷா, திருஷா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*டச்சுவீதி,*
*சாவகச்சேரி.* (சி-41091)(38-16-18)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமலையில் பாதிக்கப்பட்டோருக்கு காணி வழங்க ஜே.வி.பி. எதிர்ப்பு

திருகோணமலை,பெப்.20

திருகோணமலை மாவட்டத்தில் ஆழிப் பேரலை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்குத் தலா ஒரு ஏக்கர் காணி வழங்க வேண்டும் என்ற கோரிக்கைக்கு ஜே.வி.பி. கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளது.

திருகோணமலை செயலகத்தில் நேற்று நடந்த சுனாமி அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட மக்களின் மீள் குடியமர்வு தொடர்பான கூட்டத்திலேயே ஜே.வி.பி. தனது எதிர்ப்பைக் காட்டியது.

அரச அதிபர் காமினி றொட்றிக்கோ தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் தமிழ்க் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான இரா.சம்பந்தன், ஆர்.துரைரட்ணசிங்கம், சுதேச வைத்திய அமைச்சர் திஸ்ஸ கரலியத்த, கப்பல்துறைப் பிரதி அமைச்சர் டிலான் பெரேரா, திருமலை மாவட்ட புனர்வாழ்வு அமைச்சர் நஜீப் ஏ.மஜீத், ஜே.வி.பியின் திருமலை மாவட்ட எம்.பியான ஜெயந்த வீரசேகர மற்றும் அரச திணைக்களங்களின் தலைவர்கள் கலந்துகொண்டனர்.

இக்கூட்டத்தில் உரையாற்றிய சம்பந்தன், சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களின் மறுவாழ்வுக்காக ஒவ்வொரு குடும்பத்துக்கும் ஒரு ஏக்கர் காணி வழங்கவேண்டும் என்று கோரிக்கை விடுத்தார்.

"எதிர்காலச் சந்ததியினருக்கு காணி தேவை. எனவே, ஒரு ஏக்கர் காணி வழங்கக் கூடாது" என்று தனது கடும் எதிர்ப்பை ஜே.வி.பியின் எம்.பியான ஜெயந்த வீரசேகர அப்போது தெரிவித்தார்.

இதுவிடயமாக அவருக்கும் கூட்டமைப்பு எம்.பிக்களுக்கும் இடையில் கடும் விவாதம் இடம்பெற்றது.

திருகோணமலை மாவட்ட புனர்வாழ்வு அமைச்சர் நஜீப் ஏ.மஜீத்தும் கூட்டமைப்பினரின் கோரிக்கையை ஆதரித்து உரையாற்றினார்.

இந்நிலையில் இவ்விடயத்தில் தலையிட்ட அமைச்சர் திஸ்ஸ கரலியத்த, ஜனாதிபதியுடன் கலந்தாலோசனை செய்து நடவடிக்கை எடுப்பது என்று உறுதியளித்தார்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட 16ஆயிரம் பேருக்கான உணவு முத்திரைகள் வந்து இன்னமும் சேரவில்லை என்றும் - பாதிக்கப்பட்டவர்களின் மறுவாழ்வுக்குப் போதிய உதவிகள் கிட்டவில்லை என்றும் -

கூட்டமைப்பு எம்.பிக்கள் முறையிட்டனர்.

(ஐ-3-158)

# சாவகச்சேரியில் வீதிவிபத்தில் வயோதிபர் மரணம்!

சாவகச்சேரி,பெப்.20

சாவகச்சேரி நகரில் பழைய உதவி அரச அதிபர் அலுவலகத்திற்கு முன்பாக நேற்று மாலை 3.30 மணியளவில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் - சைக்கிள் விபத்தில் சைக்கிளில் சென்ற வயோதிபர் ஒருவர் உயிரிழந்தார். சாவகச்சேரியைச் சேர்ந்த சுப்பிரமணியம் சிவராசா (வயது-65) என்பவரே உயிரிழந்தவராவார். இந்த விபத்தின்போது மோட்டார் சைக்கிளின் பின்னால் இருந்துவந்த நபர் படுகாயமடைந்த நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார். மோட்டார் சைக்கிளை செலுத்திவந்தவர் பொலீஸாரால் கைதுசெய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டுள்ளார். உயிரிழந்தவரின் மரணவிசாரணையை சாவகச்சேரி பதில் நீதிவான் மு.திருநாவுக்கரசு நேற்று இரவு நடத்தினார்.

(ஐ-3)

# விசுவமடுவில் சுருக்கிட்ட நிலையில் பெண்ணின் சடலம்!

விசுவமடு,பெப்.20

விசுவமடு, புத்தடிப் பகுதியில் நேற்றுப் பிற்பகல் 3.30 மணியளவில் வீடு ஒன்றில் கழுத்தில் சுருக்கிட்டு மரணமான இளம்பெண் ஒருவரின் சடலம் விசுவமடு காவல்துறையினரால் மீட்கப்பட்டுள்ளது.

அதேயிடத்தைச் சேர்ந்த 4வயதுப் பிள்ளையின் தாயாரான ரதீஸ்குமார் சந்திரரேக்கா (வயது21) என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இச்சம்பவம் தொடர்பாக அவரின் கணவரான மகேந்திரன் ரதீஸ்குமார் என்பவர் கைதுசெய்யப்பட்டு விசுவமடு காவல்துறையினரால் காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

(ஐ-3-305-352-402)

## காயமடைந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களப்புக்குத் திரும்பினார்.

சிகிச்சையின் பின் உடல் நிலை தேறிய அவரை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் இராணுவப் பாதுகாப்புடன் கொழும்பு - பதுளை வீதியூடாக மட்டக்களப்புக்கு அழைத்து வந்தனர்.

நேற்று முற்பகல் 11 மணியளவில் செங்கலடி கறுப்புப் பாலத்தில் வைத்து விடுதலைப் புலிகளிடம் அவர் ஒப்படைக்கப்பட்டார். (ஐ-3)

# கல்முனை நலன்புரி முகாமில் பருப்பு உட்கொண்டோர் மயக்கம்

## *112 பேருக்கு ஆஸ்பத்திரியில் சிகிச்சை*

மட்டக்களப்பு,பெப்.20

அம்பாறை மாவட்டம் கல்முனைப் பிரதேசத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்கள் தங்கியுள்ள-இடைத்தங்கல் முகாம் ஒன்றில் இனங்காணப்படாத அவரை விதைகளைச் சாப்பிட்ட 112பேர் கடும் வாந்தி காரணமாக நேற்றுமுன்தினம் நள்ளிரவு கல்முனை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

பாண்டிருப்பு சிவபதி அம்மன் ஆலயத்தில் அமைத்துள்ள இடைத்தங்கல் முகாம் ஒன்றில் தங்கியிருந்தவர்களே இந்நிலைக்கு உள்ளாகினர்.

நேற்றுமுன்தினம் மாலை இந்த முகாமுக்கு நிவாரணப் பணிக்கு வந்தவர்கள் அவரைப் பருப்பு வழங்கியுள்ளனர். அதனை அவிக்காமல் சாப்பிட்டவர்களே நான்கு மணித்தியாலங்களின் பின்னர் வாந்தி எடுக்கத்தொடங்கினர் அதிகமாக உட்கொண்ட ஒருசிலர் மயக்கமடைந்தனர் கல்முனை ஆதாரவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட இவர்கள் நேற்று நண்பகல் சிகிச்சையின் பின்பு வெளியேறினார்கள் இந்தியாவில் இருந்து கொண்டுவரப்பட்ட அவரைப் பருப்பே அங்கு விநியோகிக்கப்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-12)

## உதைபந்தாட்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

னத்தில் நடத்தப்பட்ட உதைபந்தாட்டப் போட்டியின்போது விளையாட்டு நடைமுறைகளை மீறியமைக்காகவே இந்த நடவடிக்கை எடுக்கப்படுவதாக விளையாட்டுத்துறையின் யாழ். மாவட்டப் பொறுப்பாளர் மாதுளன் தெரிவித்தார்.

பாஷையூர் சென். அன்ரனீஸ் அணியும், நாவாந்துறை சென். மேரிஸ் அணியும் பங்குபற்றிய உதைபந்தாட்டப் போட்டியிலேயே விளையாட்டு விதிமுறைகள் மீறப்பட்டன என்று குற்றஞ்சாட்டப்பட்டது.

சென். மேரிஸ் அணி வீரர்களுக்கு எதிரான ஒழுக்காற்று நடவடிக்கைகள் கடந்த 18 ஆம் திகதி முதல் எடுக்கப்பட்டு வருவதாகவும் -

விசாரணைகள் முடிவுற்றதும் இந்த அணி மீள ஒழுங்குபடுத்தப்படும் எனவும் விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் தெரிவித்தார்.

(ஐ-13)

## சுனாமி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வலை உதயனுக்குத் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வடக்கு - கிழக்கில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரச உதவிகள் கிட்டாத நிலையில், புலம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்கள் சேகரித்து அனுப்பும் பொருள்கள் மூலமே மக்களின் தேவைகளை நிறைவேற்றிவருகின்றோம்.

மருந்துப் பொருள்கள், சிறுவர்களுக்கான போசாக்கு உணவுப் பொருள்கள் போன்றவற்றைப் புலம்பெயர்ந்த மக்கள் சேகரித்து 50 கொள்கலன்களில் அனுப்பியுள்ளனர்.

நிவாரண உதவிப் பொருள்களுக்கு சுங்கவரி அறவிடும் நடைமுறையை அரசு திடீரென அறிவித்துள்ளது. சுங்கவரி செலுத்தி இப்பொருள்களை எம்மால் பொறுப்பேற்ற முடியாது. இதனால் - கடந்த பத்துத்தினங்களாக இந்தப் பொருள்கள் துறைமுகத்தில் தேங்கியுள்ளன.

இவற்றை வெளியில் எடுத்துவந்து மக்களுக்கு வழங்க அரச அதிகாரிகளுடன் தொடர்ந்து பேச்சுக்களை நடத்திவருகின்றோம் - என்றார் அவர்.

(ஐ-3)

## இலங்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிடிப்பாளர்களும் அங்கு வந்துள்ளனர்.

நெடுந்தீவு, குறிகாட்டுவான் துறைகளில் இருந்தும் ஐநூறுக்கும் மேற்பட்ட பக்தர்கள் கச்சதீவை வந்தடைந்துள்ளனர்.

யாழ்ப்பாணத்திலும் தமிழகத்திலும் இருந்து கிறிஸ்தவமத குருமார்களும் உற்சவத்தை நடத்துவதற்காக வந்துள்ளனர்.

இன்று உற்சவம் இடம்பெறும். (ஐ-3-112)

## இந்தோ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பேரலை அனர்த்தம் உருவாகலாம் என்ற பதற்றமும் பீதியும் அந்தப் பிராந்தியம் எங்கும் பரவியுள்ளது.

கடல் அலைகள் சுமார் 4 மீற்றர் உயரத்துக்கு எழுந்தன என்றும் இதனால், உயிரிழப்புகள் ஏற்படவில்லை என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர். இந்த நில அதிர்வால் இலங்கையில் ஏந்தப் பாதிப்பும் இல்லை என்று புவியியல் ஆய்வு மையம் தெரிவித்தது.

(ஐ-3)

## [illegible]...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறித்தும் - இருவரும் கலந்துரையாடுவர். நாளை முதல் எதிர்வரும் 28ஆம் திகதி வரை இலங்கையில் தங்கியிருக்கும் சொல் ஹெய்ம், தேசிய சமாதானப் பேரவையின் ஏற்பாட்டில் புதிய நகர மண்டபத்தில் 22 ஆம்திகதிநடைபெறும் போர்நிறுத்த உடன்படிக்கையின் 3ஆவது ஆண்டுப் பூர்த்தி விழாவிலும் கலந்துகொள்வார். அத்துடன், சுனாமி பாதித்த காலி, மாத்தறை, அம்பாறை, யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளுக்கும் அவர் வருகை தந்து சேதங்களைப் பார்வையிடுவார். (ஐ-3)

## குடாநாட்டில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வத்துக்கு ஆட்சேபம் தெரிவித்து கூட்டுறவு, கல்வி, கடற்றொழில் மற்றும் பொதுப் போக்குவரத்து சார்ந்த தொழிற் சங்கங்கள் கடந்த சில தினங்களாகத் தொடர்ச்சியான பேரணிகளை நடத்திவந்தன.

24ஆம் திகதி இடம்பெறவுள்ள பேரணி, இந்தப் பேரணியில் அனைத்திற்கும் உச்சமாக அமையும் என்று அதன் ஏற்பாட்டாளர்கள் கூறுகின்றனர்.

விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்கும் இடையே புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு எதிர்வரும் 22 ஆம் திகதியுடன் மூன்று ஆண்டுகள் நிறைவுபெறுகின்றன.

சமாதான முயற்சிகள் நிரந்தரமாகத் தடைப்பட்டுப் புரிந்துணர்வு உடன்படிக்கையின் பயனாய் உருவாகிய யுத்த நிறுத்தம் ஓர் ஆபத்தான சூழ்நிலைக்குள் சிக்கி இருக்கின்றது.

இந்தக் கட்டத்தில் விடுதலைப் புலிகளின் நிலைப்பாட்டுக்கு வலுச்சேர்க்கவும், தமிழ்மக்கள் தரப்பு நியாயப்பாடுகளை சர்வதேச சமூகத்தின் முன் உரத்த குரலில் முன்வைக்கவும் பல்லாயிரக் கணக்கான மக்கள் இந்தப் பேரணியில் அணிதிரட்டப்படுவர் என்று யாழ். மாவட்டபொதுஅமைப்புகளின் ஒன்றியம் தெரிவித்திருக்கின்றது.

(ஐ-3-7)







## தொடரும் அதிரடி சலுகைகள்...

எமது நிறுவனத்தின் நிரந்தர வாடிக்கையாளர்களுக்கும், ஒரே தடவையில் பெருமளவு புகைப்படச் சுருள்களைப் பிரதியாக்கம் செய்வோருக்கும் .....!

4 x R - ரூ.8. 75 சதம்

எமது சேவை நேரம் காலை 9.00 மணி முதல் இரவு 9.00 மணிவரை.

மூர்த்தி லேசர் டிஜிற்றல் கலர் லாப்

மானிப்பாய்.

T.P.: 021 222 2884 (சி-41074)(43-1-45)


## மரண அறிவித்தல்

### கருணைவேல் தேவநாயகி

துவாளி வீதி, இமையாணன் மேற்கு உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கருணைவேல் தேவநாயகி அவர்கள் நேற்று (19.02.2005) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் கருணைவேலின் அன்பு மனைவியும் அருள்செல்வி, சந்திரிக்கா, ஜனகன் அவர்களின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.02.2005) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக வல்லை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

துவாளி வீதி,
இமையாணன் மேற்கு,
உடுப்பிட்டி.
(சி-41093)

தகவல்:
கருணைவேல்
(கணவர் - அருண்சோ மில் உரிமையாளர்).






இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 20.02.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூரியகாந்தி

உதயன்

ஞாயிறு சிறப்பம்சம்

20.02.2005







# 'வான' வேடிக்கை...!

விடுதலைப் புலிகளின் விமானப் படைப்பலம் பற்றித் தெற்கின் இராணுவ வல்லுநர்களும் ஆய்வாளர்களும் அடிக்கடிப் பிரஸ்தாபிக்கத் தொடங்கியிருக்கின்றனர்.

கொழும்பில் வெளியாகும் பிரபல ஆங்கில வார இதழ் ஒன்றின் பாதுகாப்புத்துறை ஆய்வாளர் ஒருவர் புலிகளின் வான்படைப்பலம் பற்றிய வியத்தகு தகவல்களைக் கடந்த சில வாரங்களாகத் தனது பத்தி மூலம் வெளியிட்டுக் கொண்டிருக்கின்றார். அந்தத் தகவல்கள் பல்வேறு ஊடகங்களிலும் சூடான செய்திகளாகவும் வந்துகொண்டிருக்கின்றன.

ஏ.9 நெடுஞ்சாலையின் கிழக்குப் புறத்தே இரணைமடு நீர்த்தேக்கத்துக்குக் கிழக்காகப் புலிகள் அமைத்திருப்பதாகக் கூறப்படும் விமானத்தளம்(Airstrip ) பற்றி முதலில் பல பரபரப்புத் தகவல்களை வெளியிட்டார். தொடர்ந்து புலிகள் வசம் உள்ள விமானங்கள் பற்றிய வகைமாதிரிகளையும், பின்னர் கடைசியாகத் தங்கள் விமானத் தளத்தைப் புலிகள் நவீன ஏவுகணைகள் கொண்ட வான் வழிப் பாதுகாப்புத் தொகுதி ஒன்றின் மூலம் பாதுகாக்கின்றனர் என்ற ஆகப்பிந்திய 'அதிரடி' தகவலையும் வெளியிட்டிருக்கின்றார்.

விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளையும், வெளிநாட்டு ராஜதந்திரிகளையும் ஏற்றி இறக்குவதற்கென வன்னியில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு அடிக்கடி பறப்பு நடவடிக்கைகளில் ஈடுபடும் அரசுப் படை விமானிகள் வானத்தில் இருந்து அவதானித்து வந்து கூறிய கதைகள் இவை.

இராணுவக் ஹெலிகொப்டர்களால் இப்போதுதான் புலிகளின் பிரதேசங்கள் மீது தாழப் பறக்க முடிகின்றது என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஆங்கில வார இதழின் பத்தி எழுத்தாளர் வெளியிடுகின்ற இந்த இராணுவச் செய்திகள் அண்மைக் காலமாக - சமாதானச் சூழலில் திளைத்து வந்த - கொழும்பு மற்றும் தென்னிலங்கை வாசகர்களின் விழிகளை அகல விரிய வைக்கின்றன.

சமாதானக் காலத்தில் இராணுவக் களநிலைவரப் பத்திகளை வரைவதற்குச் சரக்கு இன்றிச் சலித்துப் போயிருந்த சிங்கள ஊடகங்கள் சிலவற்றின் ஆய்வாளர்களுக்கும் இந்த வான் படை விவகாரம் சும்மா கிடந்த வாய்க்கு அவல் கிடைத்ததுபோல உவப்பாக வந்து வாய்ந்திருக்கின்றது.

சமாதான முயற்சிகள் தடைப்பட்டு நாடு போரின் விளிம்புக்கு வந்த வேளை எதிர் பாராதவிதமாக ஏற்பட்ட இயற்கை அழிவு மற்றொரு போரழிவைச் சற்றுப் பின்தள்ளி விட்டதாக நாட்டில் உள்ள சாதாரண மக்கள் பலரும் எண்ணிக்கொண்டிருக்கின்றனர்.

அரசியல் மற்றும் இராஜதந்திர ரீதியிலும் ஆத்திர மூட்டல்கள் மூலமும் விடுதலைப் புலிகளைப் பொறுமையின் எல்லைக்குக் கொண்டுவர அரசுத் தரப்பு மறைமுகமாக முனைந்து நிற்க -

பல தடைவைகள் பொறுமையின் விளிம்புக்குச் சென்று மீண்டுவந்த பிறகும் கூட, ஓர் அசாதாரண சகிப்புத்தன்மையைத் தொடர்ந்து கடைப்பிடிப்பதன் மூலம் சர்வதேச சமூகத்தின் மெச்சுதல்களைப் பெற்றுக்கொள்வதில் தீவிரமாக இருந்து, இராஜதந்திர ரீதியில் பல படிகள் முன்னேறிச் சென்றிருக்கிறது புலிகளின் தலைமை.

இந்தப் பின்னணியில் - சர்வதேச ரீதியில் - புலிகளுக்குக் கிடைத்து வரும் கீர்த்தியை மழுங்கடிப்பதும்-

இலங்கை அரசையும் சர்வதேச சமூகத்தையும் சமாதான வேடம் போட்டு ஏமாற்றிக் கொண்டு புலிகள் ஆயுதரீதியில் தம்மைப் பலப்படுத்திக் கொள்கின்றனர் என்ற பிரசாரத்தை பெரிய அளவில் முடுக்கி விடுவதும் அரசு முன் உள்ள அவசரத் தேவையாக இருக்கிறது. இதற்கு வாய்ப்பாகக் கிடைத்திருப்பதுதான் புலிகளின் வான்படை பற்றிய விவகாரம்.

தென்னிலங்கை ஊடகங்கள் இதனை ஊதிப் பெருப்பிப்பதன் உள்நோக்கம் இதுவாகத்தான் இருக்கமுடியும்.

போர் இல்லாத சூழ்நிலையில் இந்தச் செய்திகள் பொதுமக்களுக்கு உவப்பாக இருக்கலாம். ஆனால் இவற்றின் உள்நோக்கம் ஆழமானது; அலசிப் பார்க்கப்படவேண்டியது.

இலங்கையில் நோர்வேத் தரப்பு வரைந்த போர் நிறுத்த உடன்பாடு இருதரப்புகளும் படைவலுச் சமநிலையைப் பேணிக்கொள்வதைக் கட்டுப்படுத்தவில்லை. அதே நேரம் நிரந்தர சமாதானத்தை விரும்புவதாகக் கூறிக்கொண்டு இரண்டு தரப்புகளுமே இராணுவ பலத்தைப் பெருக்கிக்கொள்வது கண்டு நோர்வே கவலைகொள்கிறது.

ஸ்ரீலங்கா அரசு அண்மைக்காலமாக வெளிநாடுகளுடன் செய்துகொள்ளத் தயாராகிவரும் பாதுகாப்பு உடன்படிக்கைகள். ஆயுதக்கொள்வனவு உடன்படிக்கைகள் மீதான கவனத்தைத் திருப்புவதும் இந்த வான்படை பற்றிய பிரசாரத்தின் மற்றொரு நோக்கம் ஆகும்.

புலிகள் விமானங்களை வாங்குகிறார்கள். நாங்கள் கைகட்டிப் பார்த்துக்கொண்டு வெறுமனே 'சும்மா' இருந்துவிட முடியாது என்று அரசுத் தரப்பு ஆர்வலர்கள் கூறிக்கொள்கின்றனர்.

இந்த வான்படை விவகாரத்தில் மற்றொரு பக்கமும் இருக்கின்றது. அதாவது புலிகளின் பிரதேசத்தினுள் இராணுவ நோக்கிலான உளவுப் பணிகளில் அரச படைகள் ஈடுபடுகின்றன. அதன் பெறுபேறாய் மிகைப்படுத்தப்பட்டு வெளியிடப்படும் தகவல்களே இவை என்கின்றன விடுதலைப் புலிகளின் வட்டாரங்கள். இலங்கை விமானப் படையின் தானியங்கி வேவுவிமானம் *(Unmanned Aerial Vehicle)* புலிகளின் பிரதேசத்துக்குள் பறந்து 'விமானதளம்' என்று அடையாளம் கண்டு அனுப்பிய படங்கள் ஊடகங்களில் வெளியிடப்பட்டிருக்கின்றன.



புலிகளின் விமானத் தளத்தில் இரண்டு விமானங்கள் தரித்து நிற்கின்ற காட்சி எனத் தெரிவித்து வெளியிடப்பட்டிருக்கும் செய்மதிப் படங்கள்.

இரணைமடுக் குளத்திற்குக் கிழக்கே அடர்ந்த காட்டின் நடுவே தெரியும் வெட்ட வெளியான ஒரு பிரதேசமே - ஆயிரத்து 250 மீற்றர் நீளமுடைய - விமான ஓடுதளம் (படங்களில் காண்க) என்று பாதுகாப்பு ஆய்வாளர்கள் கூறுகின்றனர். அதே தளத்தில்இரண்டு சிறிய விமானங்கள் தரித்து நிற்பது போன்று படங்களையும் (Image) வேவுவிமானம் எடுத்தனுப்பியிருக்கிறது என்று ஊதிப் பிரசாரம் செய்யப்படுகிறது.

இவற்றைவிடப் புலிகளின் விமானங்களைக் காட்டும் செய்மதிப் படங்களும் வெளியிடப்பட்டிருக்கின்றன.

இந்தப் படங்கள் தொடர்பாகக் கருத்து எதனையும் வெளியிடாது மௌனம் காத்து வரும் விடுதலைப்புலிகள் தமது கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குள் இடம்பெறுகின்ற இத்தகைய இராணுவ நோக்கிலான வேவு நடவடிக்கைகளை அப்பட்டமான யுத்தநிறுத்தமீறல் என்று பலதடவைகள் குற்றம் சாட்டியுள்ளனர்.

விமானத் தளத்தை வேவுபார்க்கும் நோக்குடன் தங்கள் வன்னித் தலைமையகத்தையும், ஆயுத தள நிலையங்களையும் அரசு வெளிநாட்டு வேவு நிறுவனங்களின் உதவியோடு படம் எடுக்கின்றது என்ற வலுவான சந்தேகத்தையும் புலிகள் வட்டாரங்கள் வெளியிடுகின்றன.

உண்மையில் விமானப்படை சார்ந்த தொழில்நுட்பத்தை என்றைக்கோ புலிகள் தமது அமைப்புக்குள் உள்வாங்கிக் கொண்டுவிட்டனர்.

எண்பதுகளின் இறுதிப் பகுதியில் புலிகள் அமைப்பின் மூத்த போராளிகள் சிலர் விமானத் தொழில் நுட்பத்தின் மீதும், பொறியியல் மீதும் தீவிர நாட்டம் கொண்டவர்களாக இருந்தனர்.

இயக்கத்தின் அடிக்கட்டமைப்பில் விமானப்பிரிவு ஒன்றைத் தலைவர் பிரபாகரன் ஆரம்பகாலம் முதல் பேணிவந்தார் என்றுபுலிகள் இயக்கத்தின் உட்கட்டமைப்பை ஆய்வு செய்த இராணுவ வல்லுநர்கள் சிலர் தகவல் வெளியிட்டிருந்தனர்.

புலிகளின் விமானப் பிரிவு சங்கர் என்ற போராளியின் பொறுப்பில் செயற்படுவதாகத் தொண்ணூறுகளின் தொடக்கத்திலிருந்தே தென்னிலங்கை ஆய்வாளர்கள் எழுதத் தொடங்கியிருந்தனர். இப்போது அது விமானத்தைப் பாதுகாக்கும் வான்வழி வலைப்பின்னல் பாதுகாப்புவரை வளர்ச்சி கண்டுவிட்டது என்று இப்போது எழுதுகின்றார்கள்.

வான் படை பற்றிய சிந்தனை ஆரம்பம் முதலே இருந்து வந்த போதிலும் விடுதலைப் புலிகள் இரண்டாம் கட்ட ஈழப் போரைத் தொடக்கிய போது அதில் கடற் பிரிவிற்கே முக்கியத்துவம் கொடுக்க வேண்டிய நிலை இருந்தது.

தமிழீழப்பிரதேசத்தின் கடல் சூழ் அமைவைக் கருத்திற் கொண்டு பலமான கடற்படைப்பபிரிவு ஒன்றை வைத்திருப்பதன் அவசியத்தை முதலாவது ஈழப்போர் கால கட்டத்திலேயே புலிகளின் தலைமை உணர்ந்து கொண்டது.

பாரிய படைத்தரை இறக்கங்கள், படைகளுக்கான விநியோகங்கள் இவற்றையெல்லாம் ஸ்ரீலங்கா இராணுவம் கடல் வழியாக மேற்கொண்டு வந்தமை புலிகளுக்குப் பெரும் சவாலாக அமைந்தது. இவற்றை முறியடிப்பதற்குக் கடற்புலிகள் பிரிவை வலுப்படுத்தினார் தலைவர் பிரபாகரன். ஈழப்போரில் அது பெரும் திருப்பு முனையாக மாறியது.

மூன்றாம் கட்ட ஈழப்போரில் புலிகள் தங்களுக்கென்று ஒரு பெரும் பிரதேசத்தை - தங்களது அடிக்கட்டமைப்பு வளங்களோடு- பேணுவதற்கு - கடற்புலிகளின் பலமே பெரும் துணைபுரிந்தது.

இன்று வன்னிப் பெருநிலப்பரப்பைப் புலிகள் தனித்தேசக் கட்டமைப்புகளோடு கூடிய கட்டுப்பாட்டுப் பிரதேசமாகத் தக்கவைத்துக் கொண்டுள்ளனர். அங்கு அவர்கள் ஆட்சி

**ஆதர்ஷாதாஸ்**

நிர்வாக அலகுகளுடன் வேறுவசதிகளையும் கூட ஏற்படுத்திக் கொண்டுள்ளனர். அந்த வகையில் பலமடைந்த ஓர் இயக்கம் தனது எல்லைப்பகுதிக்குள் விமானத்தளம் ஒன்றைப்பேணுவது ஒன்றும் வியப்பானது அல்ல. உலகில் புதியதும் அல்ல.

வெளியுலகத் தொடர்புகள் அதிகரித்து வருகின்ற இன்றைய வளர்ச்சிப் போக்கில் இராணுவத்தேவைகளுக்கு அப்பால் ஒரு சிவில் விமானத்தளம் கூடப் புலிகளுக்கு அவசியமாகலாம்.

விடுதலைப் புலிகளின் தத்துவாசிரியர் அன்ரன் பாலசிங்கம் வன்னிக்குள் புலிகளின் தலைவர்களைச் சந்திப்பதற்காக முதலில் அழைத்துவரப்பட்டபோது ஒருதடவை அவரை ஏற்றிவந்த கடல் விமானம் (SeaPlane) இரணைமடுக் குளத்தில் தரையிறங்கியதும் அதனை அப்போதைய ரணில் அரசு அனுமதித்திருந்ததும் குறிப்பிடத்தக்கவை.

சிறிய விமான இறங்குதளம் ஒன்றின் அவசியம் அப்போது உணரப்பட்டிருந்தது. இதுபோன்ற தேவைகள் காலப்போக்கில் அதிகரிக்கும்போது விமானத் தளத்தைப் பயன்படுத்தவேண்டிய அவசியம் கூட ஏற்படலாம்.

இன்று உலகச் சந்தையில் விமானத் தொழில்நுட்ப வசதி வாய்ப்புகளைப் பெற்றுக்கொள்வது ஒன்றும் சிரமமான விடயம் அல்ல.

விமானப் பயிற்சி பெறுவதற்கும் விமானிப் பயிற்சிகள் பெறுவதற்கும் வசதி வாய்ப்புகள் அதிகம் உள்ளன. இந்த வசதி வாய்ப்புகளைப் பயன்படுத்திப் புலிகள் விமானப்படைப் பிரிவு ஒன்றை அமைத்துக்கொள்ளாமல் இருக்கமாட்டார்கள் என்பதைப் பக்கச் சார்பற்ற ஆய்வாளர்கள் ஒப்புக்கொள்கின்றனர்.

இந்த யதார்த்தத்துக்கும் விமானப்படை விவகாரத்தை அரசு இப்போது ஊதிப்பெருப்பிப்பதற்கும் எந்தச் சம்பந்தமும் கிடையாது என்பதே முக்கியமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சுனாமி: ஆவணக் காப்பகம் வேண்டும்!

ஈழத்தமிழர்களைத் திகிலில் ஆழ்த்தி ஓய்ந்து விட்டது கடல்.

ஆழிப்பேரலை அனர்த்தம் ஏற்படுத்திய பௌதீக அழிவுகள் அப்புறப்படுத்தப்பட்டுச் சீர் செய்யப்பட்டு வருகின்றன. பேரழிவுக் காட்சிகளாகக் காணப்பட்ட இடங்கள் மெல்லமெல்ல வழமைக்குத் திரும்பிக் கொண்டிருக்கின்றன.

தமிழர் தாயகப் பிரதேசமான வடக்கு - கிழக்கின் கரையோரப் பகுதிகளே இந்த அனர்த்தத்தினால் மோசமான அழிவைச் சந்தித்திருக்கின்றன.

பல்லாயிரக் கணக்கான மக்களது வாழ்வின் கடைசி நிமிடங்களை அவர்கள் நேசித்த கடல் மட்டுமே அறியும்.

கரையோரப் பகுதிகளில் செழித்து இருந்த வாழ்வு சிதறடிக்கப்பட்டது. பண்பாட்டு அம்சங்கள் சிதைக்கப்பட்டு விட்டன.

வரலாறு காணாத இந்த அனர்த்தத்தின் கொடூர நினைவுகளை மட்டுமா நாங்கள் வைத்திருக்கப் போகின்றோம் என்ற கேள்வி இப்போது எழுகின்றது.

26.12.2004 அன்று ஒரு சில நிமிட நேரத்திற்குள் நடந்து முடிந்த இந்த அனர்த்தம் ஏற்படுத்திய அழிவுகளின் வடுக்கள் அடுத்த அடுத்த தலைமுறைக்கும் தொடரப்போவது நிச்சயம்.

பல ஆயிரம் பேரின் அவலக்கதைகள் இந்த சுனாமிக்குப் பின்னால் உள்ளன. அவை அடுத்த அடுத்த தலைமுறைகளுக்காக ஆவணப்படுத்தப்படவேண்டும். அவலக்கதைகளை ஆவணப்படுத்துவது மட்டும் போதாது. இந்த அனர்த்தத்தின் அழிவுகளை என்றைக்கும் எடுத்துக்காட்டக் கூடிய ஞாபகச் சின்னங்களும் பேணிப் பாதுகாக்கப்படவேண்டும்.

பேரழிவுக்குள்ளான சகல பிரதேசங்களையும் துப்பரவு செய்யும் பணிகள் முடுக்கிவிடப்பட்டன. அது செய்யப்படவேண்டியதுதான். ஆனால், அழிவின் அடையாளங்களை அடியோடு துடைத்து எறிந்து விடுவது வரலாற்றுக்குச் செய்யும் குந்தகமாகவும் கருதப்படலாம்.

ஜப்பானின் ஹிரோசீமா, நாகசாக்கி நகரங்களில் அணுகுண்டினால் ஏற்பட்ட பேரழிவுக் காட்சிகளை அப்படியே இன்றும் பேணிப்பாதுகாக்கின்றார்கள் ஜப்பானியர்கள்.

தனது வரலாற்று அடையாளங்களைத் தொலைத்துவிட்டால் எந்த இனமும் உலகில் நிலைக்கமுடியாது.

சிங்கள இனவாதிகளால் தீக்கிரையாக்கப்பட்ட யாழ்ப்பாணம் பொது நூலகம் இன்று பட்டொளி வீசி எழுந்து நிற்கிறது.

ஆயிரமாயிரம் அரிய நூல்கள் அடங்கிய பொக்கிஷங்களுடன் நூலகம் எரிக்கப்பட்டது என்ற வரலாற்றுச் செய்தியைக் கூறுவதற்கு எந்த ஒரு சின்னத்தையோ, அடையாளத்தையோ நாங்கள் அங்கு பேணுவதற்குத் தவறிவிட்டோம்.

ஆகக் குறைந்தது ஒரு சுற்றுலாப் பயணிக்கு நூலகத்தின் அழிந்த தோற்றத்தைக் காட்டும் புகைப்படத்தைத் தானும் அங்கு வைக்க யாரும் எண்ணவில்லை.

ஆவணங்கள், அடையாளங்களைப் பேணுவதில் நாங்கள் எவ்வளவு அலட்சியத்துடன் இருக்கிறோம் என்பதற்கு நூலகம் ஓர் அடையாளமாகும்.

நூலகத்தைப் புனரமைக்க ஆரம்பித்தபோது ... அதனை எரிந்த நிலையில் அப்படியே பேணி வைத்துக்கொண்டு அருகில் புதிதாக ஒரு நூலகத்தை அமைக்கலாம் என்று தமிழறிஞர் ஒருவர் யோசனை வெளியிட்டிருந்தார்.

விடுதலைக்காகப் போராடும் இனம் என்ற வகையில் எங்கள் இருப்புக்கான அடையாளங்களைத் தொலைய விட்டுவிடுவோமானால் கடைசியில் முகவரி இழந்தவர்களாகி விடுவோம்.

இந்த வகையிலேயே இயற்கை அனர்த்த அழிவின் சாட்சிகளாகச் சில தடயப்பொருள்களையாவது நாங்கள் பத்திரப்படுத்திக் கொள்வது நல்லது.

அவலக் கதைகளை எழுதி வைத்துப் பாதுகாப்பதுபோல அவலக் காட்சிகளைப் புகைப்படம் எடுத்துப் பாதுகாப்பதுபோல அழிவின் காட்சியாய் ஏதாவது ஒரு பிரதேசத்தில் ஒரு சிறு பகுதியை அப்படியே நினைவிடமாக வைத்திருக்கலாம். இடிபாடுகளை, அலை அள்ளிய பொருள்களை அகற்றாமல் அந்த இடத்தைச் சுனாமி நினைவிடமாக வைத்துக்கொள்ளலாம்.

அதேபோல் அலை அள்ளிச்சென்று ஒதுக்கிய பொருள்களைச் சேகரித்து ஒரு ஆவணக் காப்பகத்தை அமைத்து அங்கு அவற்றை வைத்துப் பராமரிக்கலாம்.

அலை அள்ளிய குழந்தைகளின் உடைகள், ஒற்றைச் செருப்புகள், புத்தகப்பைகள் இவ்வாறான பொருள்களை அரிய ஞாபகச் சின்னங்களாகவே பார்க்கவேண்டும்.

சுனாமி பாதித்த அண்டைநாடுகளின் கரையோரப் பிரதேசங்களில் இருந்து அடித்துவரப்பட்ட பல பொருள்களும் கூட நமது கரைகளில் ஒதுங்கிவருகின்றன. அவைகளும் கூட சுனாமி ஞாபகச் சின்னங்களே. அவற்றைச் சேகரித்து ஓர் இடத்தில் பாதுகாக்க வேண்டும்.

வடமராட்சிக் கரையோரத்தில் அண்மையில் கரை ஒதுங்கிய மிக அரிய இன மரச்சிற்பம் ஒன்று சில தினங்களின் பின் மாயமாக மறைந்துவிட்ட செய்தி நம்மில் பலருக்குத் தெரிந்திராது.

பொன் நிறத்தினாலான அந்த மரவடிவம் (படத்தில் காண்க) அது என்ன என்று அறிவதற்கு முன்னரே அபகரிக்கப்பட்டுவிட்டமை கவலைக்குரியது.

இந்தோனேசியா, சுமாத்ராப் பகுதிகளைச் சேர்ந்த வேறு பல பொருள்களும் கூடக் கரை ஒதுங்கிவருகின்றன. சுனாமியின் சாட்சிகளாய் அவற்றையும் பேணுவது நமது பொறுப்பும், கடமையுமாகும்.

வடமராட்சியில் அல்லது அழிவுகளைச் சந்தித்த வேறு எங்காவது ஓர் இடத்தில் ஒரு சிறு பகுதியைப் புனரமைக்காமல் நினைவிடமாக அப்படியே பேணுவதற்கு ஆர்வமுள்ள துறைசார்ந்தவர்கள், பொறுப்புள்ளவர்கள் சிந்தித்து முன்வரவேண்டும். அந்த நினைவிடத்தின் அருகே சுனாமி நினைவுச் சின்னங்களைப் பேணும் நூதன சாலை ஒன்றையும் அமைக்கலாம். ஆவணங்கள், பொருள்களை அங்கு வைத்துப் பாதுகாக்கலாம். வெளிநாட்டினரைக் கவரும் வகையில் இதனைச் செய்யலாம். இன்னமும் தாமதமாகவில்லை. இப்போதே இதுபற்றிச் சிந்திப்போமாக!



**குமரன்**

படம்: சி.சுந்தரலிங்கம்.

---

# ஏதும்... உதும்... இங்களதும்...

மேல் நாட்டுக் கலாசாரச் சீரழிவை விளக்குவதற்காக இப்படி ஒரு கதை சொல்லப்படுவதுண்டு-

கணவன்-மனைவியர்களான இருவர் சோபாக்களில் இருந்து கொண்டு உல்லாசமாக உரையாடிக் கொண்டிருக்கிறார்கள். கீழே தரையில் பல சிறுவர் - சிறுமிகள் விளையாடிக்கொண்டிருக்கிறார்கள். அதுபற்றிக் கணவன் தனது மனைவிக்கு இப்படி ஆங்கிலத்திலே சொல்லுகிறான்.

'My Children and Your Children are




Playing With Our Children'

அதாவது 'என்னுடைய குழந்தைகளும் உன்னுடைய குழந்தைகளும் எங்களுடைய குழந்தைகளுடன் விளையாடிக் கொண்டிருக்கிறார்கள்'

இன்னுமொரு. அதாவது போட்டுச் சொல்ல வேண்டுமானால் அவன் ஏற்கனவே திருமணம் செய்த வகையில் ஏற்கனவேயும் அவனுக்குக் குழந்தைகள் இருந்தன. அவளுக்கும் அப்படித்தான். இப்பொழுது அவர்கள் இருவருக்கும் கூடக் குழந்தைகள் இருக்கின்றனர். எல்லோரும் சேர்ந்துதான் அங்கு விளையாடிக் கொண்டிருந்தனர்.

ஒருவனுக்கு ஒருத்தி என்பதெல்லாம் மேல் நாடுகளிலே அவ்வளவு தூரம் பேணப்படுவதில்லை. திருமண பந்தம் என்பதைப் புனிதமான உறவு என்றோ, ஆயிரம் காலத்துப் பயிர் என்றோ அவர்கள் கருதுவதில்லைப் போலிருக்கிறது. இந்த விவகாரங்களிலே அவர்கள் கண்டதே காட்சி கொண்டதே கோலம் தான்! அதற்கெல்லாம் மேலும் பல செய்திகளும் துணுக்குகளும் சொல்லப்படுவதுண்டு.

கணவனின் குறட்டை ஒலி தனக்கு இடைஞ்சலாக இருப்பதாகக் காரணம் காட்டி மணவிலக்குக் கோருபவர்களும் மேற்குலகில்தான் இருக்கிறார்களாம்.

பல்லாண்டுகளுக்கு முன்னர் படித்த 'ரிற்பிற்' (Titbit) செய்தி ஒன்று. மேல் நாடு ஒன்றிலிருந்த அந்தக் கழகத்துக்கு 'சாவிக்கிளப்' என்று பெயராம். அதிலே அங்கத்தவர்களாக இருப்பவர்கள் தங்கள் மனைவியர்களைப் 'பாதுகாப்பாக' இருக்கும்படி வீட்டிலே விட்டுப் பூட்டிவிட்டு அந்தச் சாவிகளுடன் அங்கு போவார்களாம். சாவிகளைக் கிளப் வாயிலிலுள்ள அதற்கென்றுள்ள பெட்டியில் போட்டுவிட்டு உள்ளே நுழைவார்கள். அங்கு அவர்கள் முன்னிரவு முழுவதும் குடித்துக் கும்மாளம் அடிப்பார்கள். பின்னர் வெளியேறும் போது ஒவ்வொருவரும் சாவிப்பெட்டியில் கைவிட்டு அகப் பட்ட ஒரு சாவியை எடுப்பார்கள். யாருக்கு எந்த வீட்டுச் சாவி கிடைக்கிறதோ, அந்த வீடுதான் அன்றைக்கு அவருக்குச் 'சின்ன வீடு'

இப்பொழுதும் அத்தகைய கிளப்புகள் இருக்கின்றனவா? அல்லது அவைகளிலும் 'அபிவிருத்தி' கண்டிருப்பார்களோ தெரியவில்லை.

இதையொத்த இன்னொரு 'துக்கடா' வருமாறு-

ஒரு தியேட்டரில் இரவுக் காட்சியாகப் படம் ஓடிக்கொண்டிருந்தது. தியேட்டர் வாசலில் கையில் துப்பாக்கியுடன் ஒருவன் கத்திக்கொண்டிருந்தான்.

முகாமையாளர் விசாரித்தபோது அவன் துடித்தான். "எனது மனைவி தன்னுடைய கள்ளக் காதலனுடன் இங்கே படம் பார்த்துக்கொண்டிருக்கிறாள். அவளையும் அவனையும் சுட்டுத் தள்ளப்போகிறேன். அவர்களை வெளியே அனுப்பப் போகிறாயா அல்லது நான் உள்ளே நுழையட்டுமா?"

துப்பாக்கிதாரியை சற்று அமைதிப்படுத்திய முகாமையாளர் அவசரமாக ஒரு 'சிலைட்' தயாரித்துப் படத்தை நிறுத்திவிட்டு அதைப் போட்டார். "அன்பர்களே! இங்கே யாரோ ஒருத்தி தனது கள்ளக் காதலனுடன் படம் பார்த்துக் கொண்டிருப்பதாகத் தெரியவருகிறது. வெளியே அவளின் கணவன் துப்பாக்கியுடன் நிற்கிறான்... சிறிது நேரம் விளக்கை அணைக்கிறோம். அப்படி யாரும் இருந்தால், அவர்களை [illegible] தப்பிக் [illegible]"

விளக்குகள் அணைக்கப்பட்டு சில நிமிடங்களின் பின்னர் மீண்டும் போட்டபோது தியேட்டரில் யாருமே இருக்கவில்லை!

மேல் நாட்டுப் பண்பாட்டை நையாண்டி செய்யும் இன்னொரு கதை இது

இரவுநேரம். ஒரு நங்கை அன்று அடக்கம் செய்யப்பட்ட தனது கணவனின் கல்லறையருகே காவலிருந்தவாறு அதனை விசிறியால் விசிறிக்கொண்டிருக்கிறாள். அந்த உருக்கமான காட்சியைக் கண்டு உருகிப்போன ஒருவர் அவளின் பதிபக்தியை வியந்தவாறே அங்கு சென்றார். என்னம்மா செய்துகொண்டிருக்கிறாய்? என்றார்.

அதற்கு அவள் சொன்ன பதில் இது "எனது கணவர் இறப்பதற்கு முன்னர் சொன்னது... 'நான் இறந்த பின்னர் நீ விரும்பிய வேறொருவனைத் திருமணம் செய்து கொள்வதற்கு எனக்கு ஆட்சேபனை கிடையாது. ஆனால் எனது கல்லறை காய்ந்த பின்னர் தான் நீ அதனைச் செய்யவேண்டும்' அதனால்த் தான் நான் விரைந்து அவரது கல்லறையைக் காய வைத்துக்கொண்டிருக்கிறேன்..."

இப்படியெல்லாம் உதாரணங்களைக் காட்டிக்கொண்டிருப்பதை வைத்துகொண்டு மேல் நாடுகளைவிட நமது பண்பாடுகள்தான் உயர்ந்தது என்பதாகாது. இங்கும் சில நேரங்களில் சில மனிதர்களால் எமது கலாசாரங்களும் சீரழிந்துகொண்டுதான் இருக்கின்றன. அங்கு அதெல்லாம் 'விதி' யாகிவிட்டதென்றால் இங்கும் 'விதி விலக்காக'ச் சில சம்பவங்கள் நடந்தே வருகின்றன. பின்வரும் துணுக்கை அந்த வகைக்கு எடுத்துக்காட்டாகச் சொல்லலாமா?

தாஜ்மஹாலைப் பார்த்து வியந்துகொண்டிருந்தனர் சுற்றுலா சென்றிருந்த நமது தம்பதியினர். கணவன் அதுபற்றி விளக்கிக் கூறுகையில் "ஷாஜகான் இறந்துபோன தனது காதல் மனையாள் மும்தாஸின் நினைவுக்காகக் கட்டிய பளிங்குமாளிகை இது" என்றான்.

"அப்படியா?" என்று ஆச்சரியப்பட்ட மனைவி "நான் இறந்துவிட்டால் எனது நினைவுக்காக நீங்கள் என்ன கட்டுவீர்கள்?" என்று கேட்டதற்கு அவன் சொன்ன பதில்?

"உன் தங்கையைக் கட்டுவேன் 'அவனும்கல்லறை காய்ந்த பின்னர்' என்பதுபோல நடந்துகொள்வானோ அல்லது அவசரப்படுவானோ தெரியவில்லை.



**– சன் அங்கிள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பத்து நாள்கள் சுடுகாட்டில் கிடந்து சடலங்களை தகனஞ் செய்த தக்கார்



பூகம்ப இடிபாடுகளில் சிக்கிய ஒருவர் மீட்கப்படுகிறார்

06 புஜ் நகரில் தக்காரின் கிராமத்தில் இறந்தவர்களைக் கூட அநாதரவாக விட அவரது மனம் ஒப்பவில்லை. இந்து மத முறைப்படி உடல்களைத் தகனஞ்செய்தாக வேண்டும் என்பதில் தக்கார் குறியாக இருந்தார். விறகு சேகரிக்கத் தனது ஆள்களை அனுப் பினார். இறுதிக் கிரியைகளுக்கான பொருள்களைச் சேகரித்தார். காயத்திரி மந்திரத்தை ஓதுவித்தார். குளிப்பாட்டியபின் புத்தாடை மாற்றுவிக்க வழியில்லையே என்று கலங்கினார்.

அகதிகள் ஆயிரமாயிரமாய் குவியும்போது உடல்களுக்கு புத்தாடை மாற்றுவதை தவிர்த்துக்கொண்டார். சந்தனக் குச்சிகளும், நெய்யும் கொண்டு சிதைகளுக்கு தீ மூட்டினார்.

தான் கண்ட ஒவ்வொரு உடலம் பற்றிய சகல குறிப்புகளையும் பதிந்து கொண்டார். பத்துநாள்கள் தனது வீட்டுப்பக்கம் திரும்பாமல் சுடுகாடே கதியெனக் கிடந்தார். இறுதியில் சுமார் 900 பேர் பற்றிய தெளிவான குறிப்புகள் அவரிடம் ஒரு குறிப்புப் புத்தகத்தில் இருந்தன. அதனை சொர்க்கத்துக்கு அனுப்பப்பட்டவர்களின் பட்டியல் என ஒரு மேற்கத்தைய ஆங்கிலப் பத்திரிகை விவரித்து இருந்தது. தம்மால் அடையாளம் காண இயலாவதர்களைப் படம் பிடிப்பித்தார். புதைக்க வேண்டியவர்களைப் புதைப்பித்தார்.

பழுத்த அனுபவசாலியான அவரது கன்னங்களிலிருந்து நீர் திரண்டு ஓடியது. அவருக்குத் தெரிந்த நாளாந்தம் அவரோடு பழகிய நாளை வாழ்ந்திருக்கவேண்டிய சமுதாயத்துக்கு வாய்க்கரிசி போட அவர் மனம் ஒப்பவில்லை.

இறந்த உடல்களுக்கு உரிய கிரியைகள் சரிவர நிறைவேற்றப்பட்டு ஆத்மசாந்தி உறுதிப்படுத்தப்பட்டாக வேண்டும். மறுபிறவி நிம்மதியாக, அமையவேண்டும் என்கின்ற தக்காரின் மதநம்பிக்கை கூட இத்தருணத்தில் அவலங்களினூடும் பாராட்டைப் பெற்றிருக்கிறது. நாயைப் புதைப்பது போல அநாதரவாக உடலங்களைப் புதைக்க அவர் விரும்பவில்லை.

இத்தனைக்கும் தக்காரின் அல்சேஷன் நாய் அவரோடு நின்று எல்லாவற்றையும் உன்னிப்பாக அவதானித்துக் கொண்டிருந்தது. அதற்கு

# உலகை உலுக்கிவரும் இயற்கை அனர்த்தங்கள்

மட்டும் பேசும் சக்தி வாய்த்திருந்தால் இன்னும் பல உருப்படி யான தகவல்கள் உலகினுக்குக் கிடைத்திருக்கும். தகனக்கிரியைகளோடு விட்டாரா தக்கார். அஸ்தியில் அடையாளம் இனித் தெரியாது என்கின்ற நிலைமையிலும் அஸ்திகளைக் கங்கையில் கரைப்பித் தார். இதற்கெல்லாம் அவர் பட்ட பிரயாசை கொஞ்ச நஞ்சமல்ல. பாடுபட்டு அவர்களின் ஆன்ம ஈடேற்றத்தை நிச்சயப்படுத்துதலிலே குறியாக இருந்தார். இதன் மூலம் அவலங்கள் மலிந்த குஜராத் பூமியை ஆற்றுப்படுத்த இயலும் என்பது அவரது நம்பிக்கை.

அண்மையில் இடம்பெற்ற சுனாமி அனர்த்தம் இந்தக் கட்டுரைத் தொடரை வரைய வைத்திருக்கிறது. அதனைத் தொடர்ந்து அடிக்கடி அங்கும் இங்கும் உணரப்படும் மிதமான நில அதிர்வுகள் மற்றும் சுனாமி பற்றிய வதந்திகள் மக்களைக் கிலிகொள்ள வைக்கும் இத்தருணத்தில் நிலநடுக்கங்களை சந்தித்த மக்களின் உணர்வலைகள் பற்றிய அனுபவப்பகிர்வு பல வழிகளிலும் பயனுடையது என்றே கருதப்படுகின்றது.

ஓர் எச்சரிக்கை உணர்வோடும் அனுபவப் பகிர்வோடும் வாழவேண்டிய ஓர் இக்கட்டான நிலைமைக்கு நாமும் தள்ளப்பட்டு விட்டோம் என்றால் அது மிகையாகாது. 26.12.2004 அன்று காலை வரை இத்தகைய அவசியம் ஒன்று எமக்குத் தேவைப்படவில்லை. ஓர் ஆபத்து உணரப்படவில்லை.

எதுவித முன்னறிவித்தலும் இல்லாமல் கடல் ஆடிய நாடகம் அனைவரையும் பீதியில் ஆழ்த்திவிட்டது. இந்தப் பதற்றம் இதனால், உருவான அச்சம் இப்போதைக்கு நீங்கப்போவதில்லை.

அன்று பூமியில் நடைபெற்ற மாற்றம் பற்றி விவரமாக மீண்டும் மீண்டும் விளக்கத் தேவையில்லை. பல மில்லியன் வருடங்களாக கடற்படுக்கையின் கீழ் ஒன்றோடொன்று பொருதிக்கொண்டு சம நிலை பெற்றிருந்த கண்டப் பரப்புகள் இரண்டு. இவை ஆண்டொன்றிற்கு ஒரு சில சென்ரி மீற்றர்கள் மாத்திரம் தம்முள் வழுக்கிக்கொண்டு பலகாலம் சமாளித்தவை–திடீரெனத் துருத்திக்கொண்டன. ஒரு தகடு மற்றதை விட 60 அடி உயரத்துக்கு அதுவும் சுமார் 1000 மைல் நீளத் துக்கு கிளம்பிக்கொண்டதாக கருதப்படுகிறது. ஒரு கணம் பூமி திடுக்கிட்டுக் கொண்டது.

பூமி தன்னைத் தானே சுற்றிக்கொண்டு அது சூரியனையும் சுற்றி வருகிறது. அது தன்னைத் தானே சுற்ற எடுக்கும் நேரம் 24 மணித்தியாலங்கள் என்றெல்லாம் எப்போதோ படித்து முடிந்துவிட்டது. இத்தகைய தகவல்கள் பரம்பரை பரம்பரையாக பாடப்புத்தகங்களில் இடம்பெற்றும் வந்திருக்கின்றன.

இதன் அடிப்படையில் நேரக் கணிப்புகளும் இடம்பெறுகின்றன. காலங்காலமாக நடைபெற்று வரும் இந்தப் பாரம்பரியத்தில் 26.12.2004 அன்று ஒரு சிறிய சறுக்கல் ஏற்பட்டு இருக்கிறது என்றால் அந்த நாளை



அந்தக் கொடுமையை என்னவென்பது?

பாறைத் தகடுகள் தம்முள் முட்டி மோதி விலகிக் கொண்ட அக்கணம் பூமியின் இயல்பான சுழற்சியில் இரண்டு மைக்கிரோ செக்கன்கள் தடங்கல் ஏற்பட்டு விட்டது எனக் கூறப்பட்டது. அது தனது சுழலும் அச்சிலிருந்து சற்று விலகியதாகவும் மீளவும் தன்னை சுதாகரித்துக் கொண்டதாகவும் ஓர் அறிக்கை கூறியது. இது ஒரு புறக்கணிக்கத்தக்க நேரமாற்றம் என்றாலும் பூமியின் வரலாற்றில் இதனை ஒரு வடு என்றே கொள்ளல் வேண்டும். எதிர்கால நேரக்கணிப்புகள் மற் றும் கிரக மாற்றங்களில் இது கவனத்தில் எடுக்கப்பட வேண்டியதாகி விட்டது. இவ்வாறான நிகழ்வுகள் அடிக்கடி இடம்பெற்றால் சாஸ்திரங் கள் கூட பொய்த்துப் போகலாம்.

கடற்கீழ்த் தரையின் அன்றைய அந்த உந்தல் பல ட்றில்லியன் தொன் கணக்கான தண்ணீரை அன்று பெயர்த்துவிட்டது. அத்தகைய ஆபத்தான பெயர்ச்சி நடுக்கடலில் அப்பாவித்தனமாக– ஆனாலும் அசுரவேகத்தில் அசையும். இவற்றின் வேகம் மணிக்கு 700 கிலோ

தருவது மூ.சிவநேசன்

மீற்றர்களை எட்டவல்லது. இத்தகைய சுனாமி அலைகள் சமுத்திரப் பரப்பில் ஆரவாரமின்றிச் சத்தம் சந்தடியின்றி ஜெட் வேகத்தில் பரம்பலடைகின்றன. கரையை அண்மிக்கும்போது கடற்பரப்பு ஆழம் குறைதலினால் இவை சந்தர்ப்பங்கள் புவியமைப்பு என்பவற்றைப் பொறுத்து 30 மீட்டர்கள் வரை நிலைக்குத்தாக எழும்புகின்றன.

இத் தன்மையை நாங்களே பரீட்சித்துப் பார்க்கலாம். ஒரு பரந்த மட்டமான சீமெந்துத் தரையில் ஒரு வாளி தண்ணீரை வேகமாகவும் கிடையாகவும் எத்தினால் அது சீராகப் பரவிப்பாயும். இதைப் போன்றதே நடுக்கடலில் சுனாமி அலைகள் எனலாம். அவ்வாறு பாயும் வழியில் குறுக்கே ஒரு தட்டையான சிறிய மரக் குற்றி தடக்கினால் அவ்விடத்தில் தண்ணீர் சீறிக்கிளம்புவது தவிர்க்க இயலாதது. இதனை அலைகள் தரையைச் சந்திக்கும் இடம் எனக் கொள்ளலாம். நிலைக்குத்தாக நீர்ச்சுவராய் உயரக் கிளம்பி தரையில் பட்டு அகப்பட்டதெல்லாம் சுருட்டி வாரும் சக்தி மிக்க சுனாமி அலைகள் புரிகின்ற கொடூரங்கள் பற்றியெல்லாம் நிறையவே இப்போது கேள்விப்பட்டாயிற்று.

1946 இல் ஹவாய், 04.11.1952 இல் ரஷ்யா, 09.03.1957 மற்றும் 09.07.1958 இல் அலாஸ்கா, 22.05. 1960 இல் சிலி, 28.03.1964 இல் மீண்டும் அலாஸ்கா, 1993இல் ஹொக்கைடோ என்றெல்லாம் சுனாமி பதம் பார்த்த வரலாறுகளுக்குக் குறைவில்லை. எனினும், சுனாமி 2004 இன் 150,000இற்குக் குறையாத உயிரிழப்புகளைப் பார்க்கும் போது இதுவரை அண்மைக்காலங்களில் ஏற்பட்ட சுனாமிகளின் உயிரிழப்புப் பாதிப்புக்கள் புறக்கணிக்கத்தக்கவை என்றால் மிகையாகாது. ஆனால் சொத்து இழப்புகள் வறிய அல்லது வளர்முக நாடுகளுடன் ஒப்பிடும் போது பசுபிக் பிராந்தியத்தில் உச்சமாகக் கணிக்கப்படுகிறது.

எனினும் மேற்கத்தைய நாடுகளில் காப்புறுதி வசதிகள் அதிகம். மக்கள் அரசுகளையும் நிவாரணங்களையும் அதிகம் நம்பியிருக்க வேண்டிய தேவை எழுவது குறைவு. வறிய நாடுகளில் மக்கள் ஒவ்வொன்றையும் காப்புறுதிசெய்து வைப்பது சாத்தியமாகாது. காப்புறுதிக் கட்டணங்களை செலுத்த அவர்களது வருமானம் போதியதல்ல.

பசுபிக் சமுத்திரத்தை சூழ உள்ள பணக்கார நாடுகளில் சுனாமி பற்றிய எச்சரிக்கை வசதிகளும் அதிகம். அங்கே அடிக்கடி சுனாமி அச்சுறுத்தல் ஏற்படுவதும் அதற்குக் காரணமாகிறது. இந்து சமுத்திர பிராந்தியத்தை சூழ உள்ள வளர்முக நாடுகளில் இவற்றை அறிய நவீன சாதனங்கள் கிடையாது. அவற்றை ஏற்படுத்த வசதிகளும் [illegible] சுனாமி அச்சுறுத்தல் சரித்திரத்தில் கிடையாது எனவும் கருதப்பட்டது. 1883இன் பின்னர் இந்து சமுத்திரத்தில் சுனாமி [illegible]

ஜப்பானில் சுனாமி 1896இல் 20 ஆயிரம் உயிர்களையும், 1960இல் 142 உயிர்களையும், 1994இல் மூனீறே மூன்று பேரையும் காவு கொண்டிருக்கிறது.

26.12.2004 அன்று சுமத்ரா பக்கமாக றிச்டர் அளவுகள் ஏறும் வாய்ப்புகள் பற்றியும் சுனாமி தாக்கும் சாத்தியம் பற்றியும் பசுபிக் பிராந்திய ஹவாய் நிலைய கருவிகள் எகிறிக்காட்டின. இந்த நிலையம் பூமியின் மேற்பரப்பில் அனர்த்தம் நடைபெறுகின்ற இடத்திலிருந்து சுமார் அரைக்கோளம் தொலைவில் இருக்கிறது. இவற்றை ஒரு பொருட்டாக எடுத்து உறுதிப்படுத்தி அந்தந்த ஆசிய நாட்டு அமெரிக்க தூதரகங்களுக்கு அறிவிக்கப்பட்ட போது சுனாமி முந்திவிட்டிருந்தது எனக்கூறப்படுகிறது. எனினும் அது பல ஆயிரம் மைல்களுக்கு, பல மணித்தியாலங்கள் அலைகளாகப் பயணித்ததும் சற்றும் எதிர்பாராத தொலைவு இலக்குகளைத் தாக்கியதும் பற்றிய விமர்சனங்கள் உடனடியாக எழுந்தன. இதில் இடம்பெற்றுள்ள கணிப்புகள் மற்றும் தவறுகள் அரசியற் குளறுபடிகள் பற்றிய ஊகங்கள் சாதாரண மக்களைப் பொறுத்தவரை முடிவெடுக்க இயலாதவையே.

இந்துசமுத்திரப் பிராந்தியத்தில் சுனாமி ஆபத்தும் இருக்கவில்லை. எச்சரிக்கைக் கருவிகளும் இருக்கவில்லை கடல் நீர் மட்டத்தை அளக்கும் கருவிகள் இருந்தால் கூட அவை அறிவிக்க முன்னர் சுனாமி வேகமாக வந்து தாக்கிவிடக்கூடும் என்பது அடுத்த சிக்கல். சுனாமி பற்றிய அறிவும் விழிப்புணர்வும் சாதாரண மக்களிடம் இருக்க வில்லை. இது இலங்கை இந்திய பிராந்தியங்களை தாக்கும் எனக் கருதப்படவும் கணிக்கப்படவும் இல்லை. அவ்வாறான அச்சுறுத் தல் பற்றிய அறிக்கையை அமெரிக்கா விட்டிருந்தால்கூடச் சாதாரண கால நிலை நிகழும் ஒரு நாளில் அது எடுபட்டிருக்குமா அல்லது சூழ்ச்சி எனச் சந்தேகிக்கப்பட்டிருக்குமா என்பதும் ஒன்று உண்டு. மக்கள் தமது சொத்துக்களை கைவிட்டு ஒட்டுமொத்தமாக தொலை தூரத்திலிருந்து கிடைக்கும் எச்சரிக்கையை நம்பி ஏற்று கடற்கரையை விட்டு விலகி ஓடியிருப்பார்கள் என்பது சந்தேகமே.

பொதுவாக வானிலை அறிக்கைகள் வாசிக்கப்படும் போதும் வானொலி தொலைக்காட்சிகள் கவனிக்கப்படுதல் இல்லை. விடை

**உண்மைச் சம்பவங்கள்! சந்தித்த அனுபவங்கள்! திகில்! சோகம்! நெஞ்சை உருக்கும் தியாகங்கள்! இவற்றை விவரிக்கும் தொடர் கட்டுரை இது.**

கொடுக்கப்படுகின்றன அல்லது விமர்சிக்கப்படுகின்றன. புயல் பற்றிய எச்சரிக்கைகள் கூட சில வேளைகளில் பொய்த்துப்போய் விடுகின்றன. சுனாமி அடித்த பின்பே அயலவர்களால் நம்பமுடியவில்லை. அடிக்க முன்னமா நம்பியிருப்பார்கள் இப்போது இருட்டு வருகிறது என்கிறார்கள். ஆனால் நம்ப மறுக்கிறது மனது. கலியுகத்தில் என்னவெல்லாம் நடக்கும் என்னவெல்லாம் நடக்காது என்றெல் லாம் கூற முடியாது.

ஏற்கனவே ஹவாயிலுள்ள எச்சரிக்கை நிலையம் தினசரி உலகெங்கும் ஈ–மெயில் இணையம் மற்றும் ஊடகங்கள் மூலமாக பல அறிக்கைகளை விடுத்து வருகிறது. இவற்றை உல்லாசப் பயணிகளோ மக்களோ கவனத்தில் கொள்வதாக தெரியவில்லை எனப்படுகிறது. கரையில் சுனாமி கோரத்தாண்டவம் ஆடுகின்றது என்றால் அதை கடற்கரையில் நின்றுவிட்டு கண்டவுடன் ஓடித்தப்ப இயலாது. அதன் வேகம் அப்படி! கடலின் படகில் இருப்பவர்கள் வேகமாக இன்னும் ஆழமான கடலுக்குள் செல்வது பாதுகாப்பானது.

ஆழ்கடலில் இருக்கும்போது சுனாமி பற்றிய அறிவிப்பு வெளியானால் கரைக்குத் திரும்புவதே ஆபத்தானது. ஆழ்கடலில் சுனாமி அலை கள் அப்பாவித்தனமானவை. கடற்கரைப்பிராந்தியங்களில் நிலநடுக்கம் உணரப்பட்டால் சுனாமி அலைகளையோ கடல்நீர் உட்பு குதலையோ எதிர்பார்த்தாக வேண்டும். எங்கெங்கோ பலஆயிரம் மைல்களுக்கு அப்பால் ஏற்பட்ட நிலநடுக்கங்கள் அசுகை இல்லாமல் வந்து படுத்தி விட்டபாட்டை நாம் அனுபவித்துக்கொண்டிருக்கிறோம். எச்சரிக்கையாகவும் புத்திசாதுரியமாகவும் இருக்கும் அதேவேளை வதந்திகளை பரப்பாமலும் மக்களை கலவரப்படுத்தாமலும் இருக்க வேண்டிய அவசியம் இருக்கிறது.

*(பொறுத்திருங்கள்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அபிமானம்

"எதற்கெடுத்தாலும் சங்கம் அமைப்பது இன்று வாடிக்கையாகி விட்டது. அவை முறையாக நிர்வகிக்கப்படாவிட்டால், அமைப்பின் நோக்கம் நிறைவேற வாய்ப்பில்லையே?"

நண்பரொருவர் இவ்விதம் அலுத்துக்கொண்டார்.

அவரது சலிப்புக்குக் காரணம் தேடி, அவரது வாயைக் கிளறித் தெரிந்துகொண்ட கதையிது.

பல்துறை வசதிவாய்ப்புக்கள், பௌதிக வளம் போன்றவை அமையாததால் யாழ்.குடாநாட்டின் பின்தங்கிய கிராமங்களில் ஒன்றாக அது அடையாளப்படுத்தப்பட்டது. நன்னீர் வசதியற்ற, வளமற்ற நிலப்பகுதி என்பதால், விவ சாய முயற்சியில் கூடிய பலன் எதிர்பாக்க இயலாவிட்டாலும், அக்கிராம மக்கள் காலம் காலமாய் தத்தமது பிள்ளைகளின் கல்வி முன்னேற்றத்தில் அதீத கவனம் செலுத்தியே வந்துள்ளனர்.

அது நியாயமானதும், அவசியமானதும் கூட.

இதனாலேயே, இன்று அரசதுறை உத்தியோகங்களில் மட்டுமன்றி, வெளிநாடுகளிலும் அவ்வூர்ப் பிறந்தோர் பலர் பிரகாசிக்க முடிகிறது. இங்கு வாழும் எம்மவர்களை விட, புலம் பெயர்ந்து வெளிநாடுகளில் வாழும் யாழ்ப்பாணத்தாரின் மண்பற்றுணர்வுக்குச் சற்றும் குறையாத அளவுக்குத் தத்தமது பிறந்த ஊர்ப் பற்றுணர்வுடனும் அவர்கள் வாழ்வதைச் சொல்லித்தான் புரிய வைக்கவேண் டும் என்றில்லை.

அந்த வகையில், குறிப்பிட்ட அக்கிராமத்தில் பிறந்து, வளர்ந்து, சிறப்புறக் கற்றுத் தேர்ந்து, இன்று வெளிநாடுகளில் பரந்து வாழும் அக்கிராமத்தவர் பலர், தமது பிறந்த ஊரின் மீதான அபிமானத்தைப் பல தடவைகள், பல வழி களில் வெளிப்படுத்திக் காட்டியதுண்டு. அதே வித மன விருப்புடன், இங்கு வாழும் அவ்வூராரும் வெளிநாடுகளில் வாழும் அவ்வூர்ப் பிறந்தோருடன் தொடர்புபேணி, நட்புறவை மேம்படுத்தித் தொடர்ந்து அவர்களது உதவி பெற்று அக்கிராமத்தின் சமூக மேம்பாட்டுக்கான நற்பணிகள் பலவற்றை நிறைவேற்றிவைத்துத் திருப்தி கண்டதுண்டு.

தமிழ் இனத்துக்கேயான தனித்துவம் மிக்க கூட்டுக் குடும்ப வாழ்க்கைமுறை அருகிப்போய்விட்ட இன்றைய நிலையில், இவ்வித கிராம மட்ட, சமூக மட்டத்திலான இணைப்புகளே இனத்தின் பாரம்பரிய வாழ்வியல் சிறப்புக்களை இன்றைய இளைய தலைமுறைக்கு உணரவைத்து ஊக்குவிக்க வழி வகுக்கின்றன.

புலம்பெயர்ந்து வாழும் பிள்ளைகள் தம் பிறந்த கிராமத்திலேயே தங்கிவாழும் தம் பெற்றோரினூடாகத் தாம் பிறந்து வளர்ந்த கிராமத்தின் பொதுநலன்சார் கிராமிய அபிவிருத்தி முயற்சிகளுக்கு உதவுவதால், அந்த உதவுனரைவிட அவரது பெற்றோர்க்கே பெருமையும் கௌரவமும் கிட்டுகிறது.

அந்த வகையில், புலம் பெயர்ந்து வெளிநாடுகளில் வாழும் யாழ்.குடாநாட்டின் ஒரு சில ஊர்ப்பிறந்தோர், தாம் பிறந்து வளர்ந்த கிராமத்தின் மேம்பாட்டுக்கு உதவும் நோக்கில் தாம் வதியும் நாட்டில் நலன்புரிச் சங்கங்களை உருவாக்கிப் பெறுமதி மிக்க பொதுநல நோக்கிலான திட்டங்களைத் தாம் பிறந்த ஊருக்காக நிறைவேற்றி வருவதை எம்மால் கண்கூடாகக் காண முடிகிறது.

ஆனால், தமது ஊரின் மீதான அபிமானத்தால் புலம் பெயர்ந்து பல நாடுகளில் வாழும் அவ்வூர்ப் பிறந்தோர் பல வழிகளில் சிறுகச் சிறுகச் சேர்த்து, ஒன்றுதிரட்டிக் கணிசமான நிதியுதவியாக இங்கு அனுப்பிவைக்கும் பணம் உரிய முகாமைத்துவமின்றி, கட்டுப்பாடெதுவுமின்றிக் கையாளப்படுவதால் சிதறிச் சீரழிந்து பல தனிப்பட்டோர் கைகளில் சென்றடைவதாகக் கூறப்படுவது உண்மையானால் அது வெட்கம் கெட்டதொரு செயற்பாடாகக் கொள்ளத்தக்கதே.

கையொன்றிலுள்ள ஐந்து விரல்களும் நீளம், பருமன் என்பவற்றில் ஒரே தன்மை கொண்டமைந்தவையாய் இல்லை;

இதுவே யதார்த்தம் என்பதால்,புலம் பெயர்ந்து வெளிநாடுகளில் வாழும் குடாநாட்டுக் கிராமமொன்றைச் சேர்ந்த அனைவரும் ஒருமித்த மனப்பாங்குடன், ஊர்ப்பற்றை முன்னிலைப்படுத்திச் செயற்படுவரென எங்ஙனம் எதிர்பார்க்க இயலும்?

அண்மையில் குடாநாட்டின் மேற்குறிப்பிட்ட கிராமத்தில் இடம்பெற்ற சம்பவம் இது.

குறிப்பிட்டதொரு வெளிநாட்டில் வாழும் அக்கிராமத்தில் பிறந்தோர் சிலர் ஒன்று கூடி, தாம் பிறந்துவளர்ந்த அக் கிராமத்தின் உயர்வுக்கும் வளர்ச்சிக்கும் உதவும் நோக்கில், தாம் திரட்டிய நிதியை, விடுமுறையில் இங்கு வந்த அவ்வூர்ப்பிறந்த நபரொருவர் மூலம், இங்குள்ள அவ்வூர் நலன்புரிச் சங்கத்திடம் கையளிக்குமாறு அனுப்பிவைத்ததாகவும், அந்நிதியை எடுத்து வந்தவரும் இங்கு இயங்கும் நலன்புரிச் சங்கத்தின் ஒரு சில உறுப்பினர்களும் சேர்ந்து அந்நிதியின் அரைவாசித் தொகையை மோசடி செய்ததுடன், மீந்த நிதியில் ஒரு சில கண்துடைப்பு உதவிகளை அக் கிராமத்துக்குச் செய்து கொடுத்துள்ளதாகவும் கூறப்படுகிறது. நிதிசேகரித்துக் கொடுத்து உதவியவர்களைத் திருப்திப்படுத்தும் நோக்கில் தாம் அந்நிதியில் நிறைவேற்றிய ஒரு சில வேலைத்திட்டங்கள் குறித்துப் பத்திரிகைகளில் கூடப் பிரபல்யப்படுத்தியதாகவும் கூறப்படுகின்றது., இதய சுத்தியுடன் கொடையாளி வழங்கும் நிதி, உரிய வகையில் பயனாளியைச் சென்றடையும் விதத்தில் வழிவகை எட்டப்படல் வேண்டும். அவ்வாறு இடம்பெற்றால் மட்டுமே அது புனிதமான கைங்கரியமாகக் கொள்ளப்படலாம்.

புலம் பெயர்ந்து வாழும் எம்மவரில் சிலர், இந்த மண்ணின் பெருமைக்கும் கலாசாரத்துக்கும் இழுக்குத் தேடித் தரும் வகையில் செயற்படப் பழகிக்கொண்ட காரணத்தால் மொத்த நாட்டின் கீர்த்தியும் பெருமையும் நலிவடைய வேண்டி ஏற்பட்டுள்ளது.

ஆழிப்பேரலை அனர்த்த நிவாரணத்துக்கு வெளிநாடுகள் வழங்கிய மனிதாபிமான உதவிகளின் ஒரு பகுதியைக் கிள்ளித்தெளித்துவிட்டு, மீதியை வாரிச் சுருட்டிக்கொள்ளும் வழிமுறைகளை அரச இயந்திரத்துக்கும் இவர்களைப் போன்றோரே சொல்லிக் கொடுத்திருக்கக் கூடும்.

நெற்பயிரின் மத்தியில் களைகளும் விரவுமானால் அது நெற்பயிரின் ஆரோக்கிய வளர்ச்சியையும் விளைச்சலையும் பாதிக்கும் என்பதில் சந்தேகம் கிடையாது. சமுதாயம் என்ற நெல்வயலில் முளைவிடும் வேளையிலேயே இக்களைகளை இனங்கண்டு ஒதுக்க முடிந்தால் அறுவடை திருப்தியான பெரும் பலன் தரும்.

# யாரோடு நோவோம்...?

எந்தவொரு நாட்டிலும், சமூகத்திலும் கிடைக்கக் கூடிய வளங்களைப் பொருத்தமான நுட்பங்களைப் பயன்படுத்தி, உச்சமானதும், பயனுறுதி வாய்ந்ததுமான விளைவுகளைப் பெற்றுக்கொள்வது அவசியமானதாகும். மேலை நாடுகள் கிடைக்கின்ற வளங்களைப் பயன்படுத்தி உச்சப் பயனைப் பெறுகின்றன. தம்மிடமில்லாத வளங்களை ஏனைய நாடுகளிடமிருந்து பெற்றுப் பயன்மிக்க தொழிற்பாடுகளை ஆற்றுகின்றன. பல சந்தர்ப்பங்களில் தமக்குப் பொருத்தமில்லாத வளங்களைக் கூடத் தமது தேவைக்கு உகந்த வகையில் மாற்றிப் பயன்படுத்துகின்றன. இவ்வாறு வளங்களால் பெறப்படுகின்ற விளைவுகளை - உற்பத்திகளை -மிக இலாவகமாக அபிவிருத்தி காணும் நாடுகளுக்கு விற் பனை செய்து விடுகின்றன.

மூல வளங்களைச் சொந்தமாக வைத்திருக்கும் பல நாடுகள் கூட முடிவுப் பொருள்களுக்காக மேலை நாடுகளில் தங்கிநிற்கும் நிலையும் உள்ளது.

நமது சூழலிலும் வளங்களின் பயன்பாடென்பது சரிவரக் கையாளப்படவில்லை. நம்மிடமுள்ள எல்லா வளங்களையும் ஒரு சேரக் கண்டறிந்து, கையாளக்கூடிய பொருத்தமான கட்டமைப்புக்கள் நம்மிடமில்லை. அதுமட்டுமின்றி, நமது சூழலை, சூழலிலுள்ள வளங்களை, அவற்றைப் பிரயோகிப்பதற்கான வாய்ப்புக்களை, அதற்கான தொழில்நுட்பத்திறன் சாா்ந்த அறிவினை வழங்குவதாக நமது கல்வி முறையும் இல்லை. நமது கல்வி முறையானது எந்த வகையிலும் ஒருவனைத் தொழிலுலகுடன் தொடர்புபடுத்தவில்லை. இடைநிலைக் கல்வியைப் பூர்த்தி செய்து, அதில் தவறும் ஒரு மாணவனுக்குச் சரியான தொழில்வழிகாட்டலைச் செய்வதிலோ, அவனது எதிர்கால வாழ்வுக்குரிய தொழிலை சொந்தக்காலில் நிற்பதற்குரிய ஆற்றலை நமது கல்வி முறை அளிக்கவில்லை. முறைசாராக் கல்வி ஏற்பாடுகளும் தாக்கமானதாக - பரந்து விரிந்த பெரிய கட்டமைப்பாக- ஏற்படுத்தப்படவில்லை. குறிப்பாக, பிரதேச தொழில் கட்டமைப்போடு தொடர்புபட்டதாக, அக்கட்டமைப்பை நவீன முறையில் மாதிரிப்படுத்தத்தக்கதாக, முறைசாராக் கல்வி ஏற்பாடுகள் இல்லை.

மூன்றாம்நிலைக் கல்வியும் அவ்வாறே. மூன்று, நான்கு ஆண்டுகள் கல்வி கற்கும் ஒருவனுக்குத் தான் கற்ற கல்வி மூலம் சொந்தக் காலில் நிற்கும் திறன்களை கல்வி ஏற்பாடுகள் வழங்க வில்லை. அன்றியும் பொருத்தமான தொழிலுக்குள் அவனை இணைக்கும் ஒழுங்கு முறையும் இங்கில்லை. அதனால்தான் பட்டதாரிகள் தமக்குத் தொழில் வழங்காவிட்டால் உண்ணாவிரதம், சத்தியாக்கிரகம் என்று போராடத் தலைப்படு கிறார்கள். இது மிகவும் பரிதாபமான நிலைமையாகும்.

தற்போது தேசிய ரீதியில் பட்டதாரி நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன. இந்நியமனங்கள் பொரும்பாலும் எழுந்தமானமாகவே செய்யப்பட்டுள்ளன. பயிலுநர்களுக்குப் பொதுவானதொரு போதனை வழங்கப்பட்டு, அதன்பின் இந்த நியமனங்கள் கிடைத்துள்ளன. பயிற்சியென்பது பல விதமானதாக, நிறைவற்றதாக, எய்தக் கூடிய இலக்குகளை அடைந்து விடாதவாறே நடந்துள்ளது. நாடளாவிய ரீதியில் நடைபெற்ற இந்தப் பயிற்சிகளில் சரியான வள ஆளணியினர் இடம்பெறவில்லை என்பதும், அதனால் போதனைகளும் குழப்பமானதாக-பூரணமற்றதாக - இருந்ததென்பதும் பலரது குற்றச் சாட்டாகும்.

இப்போது நியமனம் வழங்கப்பட்டுவிட்டது. நியமனத்திலும் ஒவ்வொருவரதும் திறன், விருப்பு, தகைமை போன்றவை கவனிக்கப்படவில்லை. எனவேதான் ஆசிரிய நியமனம் கிடைத்த பலரும் நிர்வாகத்துறைக்கும், நிர்வாகத்துறை கிடைத்தவர்கள் ஆசிரியத் தொழிலுக்கும் மாறுகின்ற சூழல் உருவாகியுள்ளது. அவ்வாறு மாற முடியாத சூழலில், விருப்பற்ற - பொருத்தமற்ற ஒரு தொழிலிலேயே ஒருவர் ஈடுபட நேரிடும். இது 'வளவிரயம்' சம்பந்தமான ஒரு பிரச்சினையாகும்

வசதியான பலரும் கிடைத்த நியமனங்களைத் தங்களுக்கு அமைவான இடத்துக்கு மாற்றி வந்து விடுகின்றனர். ஏனையோர் மிகுந்த கஷ்டங்களுடன் புதிய இடங்களில் கடமையாற்றுகின்றனர். அவ்வாறு கடமையாற்ற முடியாதோர் வேலையை விட்டே நீங்குகின்றனர். உண்மையில், பிரதேசத் தொடர்பு அறாத வகையில் நியமனம் வழங்குவதே அதிகம் பயன் வாய்ந்ததாகும்.

ஆக, வளங்களை -அது கனியங்களாயினுஞ்சரி, மனிதர்களாயினுஞ் சரி - பொருத்தமானமுறையில் பயன்படுத்துவதே உத்தமமானதாகும்.

– ஏகலைவன்.

# பிறழ்வு

கனகம்...கனகம்...என்று கூப்பிட்டவாறு உள்ளே நுழைந்தார் புறோக்கர் புண்ணிய மூர்த்தி. என்ன அண்ணை கன நாளாய் காணேல்ல.

அது சரி பொம்பிளை வீட்டுக்காரர் என்னவாம்...

அவையெல்லாம் சரியெண்டு சொல்லினம் ஆனால்...உன்ர மூத்தவனுக்கு லண்டனில் சிற்றிசன் கிடைக்கேலயாம் அதுதான் பெட்டை வீட்டுக்காரர் பயப்பிடுகினம் பிள்ளையை அனுப்புறதுக்கு. ஆனால் அவை வெளிநாட்டு மாப்பிள்ளை தான் வேணுமெண்டு ஒற்றைக் காலில் நிக்கினம்...

இஞ்ச...பார் மூர்த்தி அண்ணை...பெட்டையை ஸ்பொன்சர் பண்ணி லண்டனுக்கு எடுக்கிறதுக்கு ஏற்ற ஒழுங்குகளெல்லாம் மூத்தவன் பாத்திட்டான் ...அடுத்த கிழமை என்ர இளையவன் லண்டனிலை இருந்து ஊருக்கு வாறான் கல்யாண விசயமாய்.

என்ன கனகம் மூத்தவனுக்குத் தானே பொம்பிளை பார்க்கச்சொன்னனி; இப்ப இளையவன் வாறான் எண்டு சொல்லுறாய்

எனக்கு ஒரே குழப்பமாய் இருக்குது.

அண்ணை ஒண்டுக்கும் குழம்பாதேங்கோ. சொல்லுறதை வடிவாகக் கேளுங்கோ. என்ர மூத்தவனுக்கு இன்னும் சிற்றிசன் காட் கிடைக்கேல்லத்தான். ஆனால் என்ர இளையவனுக்கு சிற்றிசன் காட் கிடைச்சிட்டு...

அவன் வந்து பொம்பிளைக்கு எழுத்து மோதிரம் மாத்தி, மாலை மாத்தி அதைப் படம் எடுத்து பொம்பிளையையும் படத்தையும் கொண்டு போய் படத்தை அங்கத்தைய எம்பஸியில் காட்டுவான். அண்ணிக்காரியை தமயனிடம் பக்குவமாய் கொண்டு போய்ச்சேர்ப்பான். இதைப் பற்றி பொம்பிளை வீட்டுகாரருக்கு சொல்லிப் போட்டன். அவையும் ஒத்துக்கொண்டிட்டினம். வாற மாதம் கலியாணவீடு.

இதைக் கேட்ட புறோக்கர் புண்ணிய மூர்த்திக்கு தலை சுற்றியது. அடக்...கடவுளே இந்த வெளி நாட்டாலே எங்கட சம்பிரதாயம் எத்தனையோ மாறிப் போட்டுது. அண்ணிக்காரியை தாயாய் மதித்தது அந்தக் காலம். இண்டைக்கு என்னென்டால் தம்பிக்காரன் அவளுக்கு மனைவி என்ற வேசத்தைப்போட்டு கொண்டு போய் சேர்க்கிறான் தமையனிட்டை. பணம் பாதாளம் வரை பாயும் என்று சொன்னாங்களே இதுக்குத் தானாக்கும்.

சீச்...சீச்...இப்படியயொரு அவமானப்பட்ட கலியாணம் தேவையா என்று சினந்தவாறு வெளியேறினார் புறோக்கர்.

*(யாவும் யதார்த்தம்)*

**எஸ். கவிதரன் (சண்டிலிப்பாய்).**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அராலித்துறைக் கண்ணித்தாக்குதலின் அவிழாத மர்ம முடிச்சுகள்...



**விடுதலைப்புலிகளுக்கு எதிரான தீவிர யுத்தத்தில் இலங்கை இராணுவத்தை வழிநடத்தக் கூடிய ஆற்றல் வாய்ந்த படைத் தளபதி என்று சிங்கள மக்கள் பெருமைப்பட்டுக் கொண்ட இராணுவ அதிகாரி மேஜர் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ ஆவார். 'வீர புருஷர்' என இன்றும் தென்னிலங்கை மக்களால் மதிக்கப்படும் கொப்பேகடுவவின் மரணத்துக்கான பின்னணிக் காரணம் பெரும் மர்மமுடிச்சாகவே இன்றும் இருந்து வருகிறது. அராலித்துறையில் மிகவும் நுட்பமாக நடத்தப்பட்ட ஒரு கண்ணி வெடித்தாக்குதலில் கொப்பேகடுவவும் உயர் இராணுவ அதிகாரிகள் சிலரும் கூண்டோடு பலியான சம்பவத்தின் பின்னணித் தகவல்களை அலசும் ஒரு தொடர் இது. தெற்கின் சிங்கள வார இதழ் ஒன்றிலிருந்து தமிழில் சூரியகாந்திக்காக மொழி பெயர்த்துத் தொகுப்பவர்.:**

**வீயெஸ்ரீ.**

4பண்பான மனிதரொருவர் அரசியலில் பிரவேசித்தால் தமது நற்பண்புகளையெல்லாம் கைவிட்டு, பொய்யும் புரட்டும்மிக்க பண்பற்ற போலி வாழ்க்கை வாழ வேண்டி ஏற்படுகிறது. ஜெனரல் கொப்பேகடுவவின் மர்மக் கொலையையடுத்து நாட்டுமக்களது வெறுப்பும் கோபமும் அரசியல்வாதிகள் பக்கம் திசை திரும்பியது. கொப்பேகடுவவை எத்தரப்பினர் கொலை செய்திருப்பினும், அக் கொலைச் சம்பவத்தின் பின்னணியில் அரசியல்வாதிகள் நிச்சயம் சம்பந்தப்பட்டிருந்ததாகப் பொதுமக்கள் நம்பத் தலைப்பட்டனர். அவ்வேளையில் நிலவிய சூழ்நிலை அரசியல் வாதிகள் மீது அவநம்பிக்கை கொள்ளும் அளவுக்குப் பொதுமக்கள் மனதில் சந்தேகத்தை உருவாக்கிவிட்டது.

ஜெனரல் கொப்பேகடுவவின் கொலை தொடர்பாக உரிய விசாரணைகள் எதுவும் மேற்கொள்ளப்பட்டிராத நிலையில், ஜெனரல் கொப்பேகடுவவின் மரணச் செய்தி வெளிவந்த ஒரு சில மணித்தியாலங்கள் கடந்த நிலையில் நாட்டின் ஜனாதிபதி பிரேமதாச தம்புள்ளையிலிருந்து அக்கொலை தொடர்பாக வெளியிட்ட கருத்து பொதுமக்களது சந்தேகம் மென்மேலும் அதிகரிக்கக் காரணமாய் அமைந்தது.

அவ்வேளையில், ஜனாதிபதி பிரேமதாச வெளியிட்ட கருத்தை நாட்டின் பத்திரிகைகள் கீழ்க்காணும் வகையில் அறிக்கை போன்ற செய்தியாகப் பிரசுரித்தன.

“இன்று காலை பத்து மணியளவில் அராலித்துறைப் பகுதிக்கு எமது இராணுவத்தின் உயரதிகாரிகள் குழுவொன்று சென்றிருந்தது. இப் பிரதேசத்தின் பாதுகாப்புக் குறித்து எவ்வித சந்தேகமும் கிடையாது. ஏனெனில் அப்பிரதேசம் எமது இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதியே. மூன்று வாகனங்களில் தமது பிரயாணத்தை ஆரம்பித்த இராணுவ உயரதிகாரிகள் குழு, இடைவழியில் இறங்கி ஒரே வாகனத்தில் தமது பயணத்தைத் தொடர்ந்துள்ளனர்–.

“அப் பிரதேசம் குறித்து நேரில் சென்று பரிசீலிப்பதற்காக ஒரு வழியில் சென்ற அக் குழுவினர் அராலித்துறையிலிருந்து திரும்பும் போது பிறிதொரு வழியால் திரும்பியிருந்தனர். அவ்வேளையில் நிலத்தில் புதைக்கப்பட்டிருந்த கண்ணிவெடியின் மேலாக அவ் வாகனம் செல்ல நேரிட்டது. இதனால் கண்ணிவெடி வெடித்து அந்த இராணுவ உயரதிகாரிகள் பலர் உயிரிழக்க நேர்ந்தது. சம்பவம் இடம்பெற்ற பிரதேசம் பயங்காரவாதிகளிடமிருந்து எமது இராணுவத்தினரால் மீட்டெடுக்கப்பட்ட பிரதேசமாகும். பயங்காரவாதிகளின் கட்டுப்பாட்டில் அப்பிரதேசம் இருந்த வேளையில் அவர்களால் நிலத்தில் புதைக்கப்பட்ட கண்ணிவெடியில் சிக்கியே இராணுவ உயரதிகாரிகள் பயணம் செய்த வாகனம் விபத்துக்குள்ளாக

## கொப்பேகடுவ பயணம் செய்த வாகனத்தில் சக்தி வாய்ந்த கண்ணி

நேர்ந்தது.–”

சம்பவம் இடம்பெற்ற தினத்தன்று ஜனாதிபதி பிரேமதாச வெளியிட்டதாகக் கூறப்படும் மேற்கூறிய கருத்தால் பொதுமக்களது சந்தேகம் மேலும் வலுப்பெற ஆரம்பித்தது. அது மட்டுமின்றிச் சம்பவத்தில் உயிரிழந்த இராணுவ அதிகாரிகளுக்கு உரிய மரியாதை செலுத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்கு அரசு அதிகம் அக்கறை எடுத்துக் கொள்ளவில்லை எனப் பல தரப்புக்களிலிருந்து வெளிவந்த கண்டனங்கள் பொதுமக்களது மனதில் உருவாகியிருந்த சந்தேகம் பூதாகாரமாக உருவெடுக்கக் காரணமாயிற்று.

கண்ணி வெடித்தாக்குதலில் கொல்லப்பட்ட ஜெனரல் கொப்பேகடுவ மற்றும் ஏனைய இராணுவ உயரதிகாரிகளின் மரணத்துக்காக அரசு தேசிய துக்கதினம் பிரகடனப்படுத்தி அவர்களுக்கு மரியாதை செய்யுமெனப் பெரும்பாலான சிங்களப்பொதுமக்கள் நம்பினர். அவ்விதம் தேசிய துக்கதினம் பிரகடனப்படுத்துமாறு பல தரப்பிலிருந்தும் அரசிடம் வேண்டுகோள் விடப்பட்டது. ஆனால், அரசு அது குறித்து மௌனம் சாதித்தது. இதன் காரணமாகவும் பொதுமக்கள் மத்தியில் அரசுக்கெதிரான எதிர்ப்புணர்வு வலுப்பெற்றது.

ஜெனரல் கொப்பேகடுவவின் இறுதிக் கிரிகைகள் பொரளை கனத்தை மயானத்தில் இடம்பெற்ற நாளன்று பொதுமக்களது மனதில் உருவாகியிருந்த அரசுக்கெதிரான ஆத்திரம் வெடித்துச் சிதறி வன்செயலாக மாறியது, ஆத்திரமேலீட்டால் இறுதிக்கிரிகைகளில் கலந்து கொள்ள கனத்தை மயானத்துக்கு வந்திருந்த அரசியல்வாதிகளைப் பொதுமக்கள் தாக்க ஆரம்பித்தனர். பாதுகாப்புக் கருதி அரசியல்வாதிகளில் பலர் அவ்விடத்திலிருந்து விரைந்து வெளியேற நேர்ந்தது. பொது மக்களின் தாக்குதல்களால் பல அரசியல்வாதிகள் காயமடைய நேர்ந்தது. அதேவேளை அரச ஊடகங்கள் ஜெனரல் கொப்பேகடுவவின் அகாலமரணம் குறித்து உரிய முக்கியத்துவம் அளித்துச் செய்தி வெளியிடவில்லை என்பதைப் பொதுமக்கள் உணரத் தலைப்பட்டனர். அது மட்டுமன்றி அரச கட்டுப்பாட்டிலுள்ள ஊடகமொன்று இப் படுகொலைச் சம்பவம் குறித்து வெளியிட்ட விசேட செய்தியொன்றினால் ஏற்கனவே அரசு மீது அதிருப்தி கொண்டிருந்த பொதுமக்களில் பலர் கொதிப்படைந்தனர்.

“ஜெனரல் கொப்பேகடுவ மற்றும் அவருடன் சென்ற இராணுவ உயரதிகாரிகள் கண்ணி வெடித்தாக் குதலில் சிக்கி உயிரிழந்தனர். தமக்கு மரணம் சம்பவிக்கப் போகிற தென்பதை அவர்கள் சிறிதளவும் எதிர்பார்த்திருக்கவில்லை. ஆனால் ஆனையிறவு முகாமை விடுதலைப்புலிகளின் கைகளில் சிக்கவிடாது பாதுகாப்பதற்காகக் காமினி குலரத்ன என்ற இராணுவச் சிப்பாய், தாக்குதலை மேற்கொண்ட வண்ணம் முன்னேறிவந்த விடுதலைப் புலிகளின் கவச வாகனத்துள் தான் உயிரிழக்கபோவதைத் தெரிந்து கொண்டே குதித்து அக் கவச வாகனத்தைச் சேதப்படுத்தினான். அவன் தனது மரணத்தை முன்கூட்டியே தெரிந்து கொண்டே , நாட்டுக்காக உயிர்த்தியாகம் செய்தான். இச் சம்பவத்தினின்றும் உண்மையான வீரத்தனம் எதுவென்பதை உணர முடியும்”

மேற்கண்ட விதத்தில் அப்பத்திரிகையில் பிரசுரமாகியிருந்த விமர்சனம் எரிகிற நெருப்பில் எண்ணெய் ஊற்றியது போன்று அரசு மீது கடும் கோபமுற்றிருந்த சிங்களப் பொதுமக்களை மென்மேலும் கோபமுறச் செய்தது. ஜெனரல் கொப்பேகடுவவின் படுகொலையை முன்னிலைப்படுத்திப் பெரும் அரச எதிர்ப்பு நடவடிக்கைகள் நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் அரச அதிருப்தியாளர்களால் ஒழுங்கு செய்யப்பட்டன.

இவ்வித அமைதியற்ற சூழ்நிலையில் ஜெனரல் பொப்பேகடுவ படுகொலைச் சம்பவம் குறித்து விசாரணை மேற்கொள்ளும்பொருட்டுத் தனிநபர் ஆணைக்குழுவொன்றை அரசு நிறுவியது. ஓய்வுபெற்ற நீதியரசர் எம்.இஸ்மாயில் தலைமையில் அமைக்கப்பட்ட ஆணைக்குழுவின் அறிக்கை ஜெனரல் கொப்பேகடுவ கொலையுண்ட தினத்தன்று தம்புள்ளையில் வைத்து ஜனாதிபதி பிரேமதாச வெளியிட்ட கருத்தை ஒத்ததாகவே காணப்பட்டது. அவ்விசாரணக்குழுவின் தீர்மானத்தைக் கொலையுண்ட ஜெனரல் கொப்பேகடுவவின் மனைவியான லலிக் கொப்பேகடுவ ஏற்க மறுத்துவிட்டார்.

இந்த வேளையில், லண்டனில் வசித்துவந்த ஜெனரல் கொப்பேகடுவவின் சகோதரரான அசோகா கொப்பேகடுவவின் கைகளுக்கு ஜெனரல் கொப்பேகடுவ கொலையுண்ட இடம் மற்றும் அவர்கள் பயணம் செய்த வாகனம் குறித்த புகைப்படங்கள் கிடைக்கப்பெற்றன. அவர் அப்புகைப்படங்களை எடுத்துச்சென்று கண்ணிவெடி நிபுணரொருவரைச் சந்தித்தார். ஜே.ஆர்.வயிற் என்ற பெயருடைய கண்ணிவெடி தொடர்பான விசேட அனுபவம் வாய்ந்த அந் நிபுணர் பிரித்தானிய இராணுவச் சேவையில் பல ஆண்டு காலமாகக் கண்ணிவெடி நிபுணராகக் கடமையாற்றிய அனுபவம் கொண்டவர்.

ஜெனரல் கொப்பேகடுவவின் சகோதரரால் கையளிக்கப்பட்ட அப்புகைப்படங்களை நுணுக்கமாகப் பரிசீலித்த அக் கண்ணிவெடி நிபுணர் ஜெனரல் கொபேகடுவவின் மரணத்துக்குக் காரணமான அக் கண்ணிவெடி குறிப்பிட்ட அந்த வாகனத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்த சமயமே வெடித்துச் சிதறியிருக்கலாமென அபிப்பிராயம் தெரிவித்தார். தனது அவ்வித முடிவுக்கான காரணங்கள் பலவற்றை அவர் முன்வைத்தார். மரணமுற்ற இராணுவ அதிகாரிகளின் உடலில் ஏற்பட்டிருந்த காயங்கள் மற்றும் கண்ணிவெடி வெடித்ததன் பின் அவ்விடத்தில் நிலத்தில் ஏற்பட்டிருந்த பள்ளம் ஆகியவை குறித்து ஆராய்ந்ததன் முடிவில் சம்பவத்தில் பயன்படுத்தப்பட்ட கண்ணிவெடி இராணுவ உயரதிகாரிகள் பயணித்த ஜீப் வண்டியில் ஏற்கனவே பொருத்தப்பட்டிருந்திருக்க வேண்டுமெனச் சந்தேகிக்கத் தன்னைத் தூண்டியதாக அவர் தெரிவித்தார். அந்த வாகனத்தின் வலது பக்க பின்புறச் சில்லுக்கு அண்மையில் பொருத்தப்பட்டிருந்த அதிசக்தி வாய்ந்த கண்ணிவெடியொன்று வெடித்ததினாலேயே இம் மரணங்கள் ஏற்பட்டதாகக் கருதமுடியுமென அவரது அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஏற்கனவே தமது அபிமானத்துக்குரிய ஜெனரல் கொப்பேகடுவவின் படுகொலை தொடர்பாகத் தமது மனதில் உருவான சந்தேகத்தால் கொதித்துப் போயிருந்த பொது மக்களைப் பிரித்தானிய கண்ணிவெடி நிபுணர் வைற் வெளியிட்ட கருத்து மென்மேலும் ஆத்திரமுற வைத்தது.

பிரித்தானிய கண்ணிவெடி நிபுணரின் மேற்படிக் கருத்து ஜெனரல் கொப்பேகடுவவின் மனைவியான லலி கொப்பேகடுவவின் மன நிலையிலும் கலக்கத்தையும் கவலையையும் ஏற்படுத்தக் காரணமாயிற்று.

“எனது கணவரினதும் ஏனைய இராணுவ உயரதிகாரிகளதும் படுகொலை குறித்து விசாரணை செய்யக் சர்வதேச விசாரணை ஆணைக்குழுவொன்றை நியமியுங்கள்.”

லலி கொப்பேகடுவ அரசிடம் இவ்விதம் வேண்டுகோள் விடுத்தார்.

அவரது அக்கோரிக்கையையடுத்து நைஜீரியா, கானா மற்றும் நியூசிலாந்து ஆகிய நாடுகளைச் சேர்ந்த மூன்று நீதியரசர்களை அங்கத்தவர்களாகக்கொண்டு நியமிக்கப்பட்ட விசாரணைக்குழு 1993ஆம் ஆண்டு மே மாதம் 26ஆம் திகதி தனது விசாரணைகளை ஆரம்பித்தது. விசாரணை முடிவில் இது திட்டமிட்டுமேற்கொள்ளப்பட்ட படுகொலை என அந்த விசாரணைக்குழுவின் அறிக்கையிலும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் 1994ஆம் ஆண்டும் உதயமானது. அதுவரை காலமும் அதிகாரத்திலிருந்த ஐ.தே.கட்சி அரசு பதவியிலிருந்து அகற்றப்பட்டு, பதிலாகப் பொது ஜன ஐக்கிய முன்னணி அரசு அதிகாரத்தைக் கையேற்றது.

பின்னர் நடந்ததென்ன?

அதற்காக அடுத்த வாரம் வரை காத்திருப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிதையும் சின்னங்கள்

நமது சிந்தனையால் எண்ணிப் பார்க்கமுடியாத பல ஆயிரம் ஆண்டுகாலப் பெருவெளியில் மானிட வாழ்வின் சாதனைகளைக் கூறும் வரலாற்றுச் சான்றுகளை– தொல்லியல் கருவூலங்களை மனிதகுலம் இழந்துவிடுவது துயரமான நிகழ்வாகும். மனிதர்கள் வேட்டையாடி நாடோடிகளாகத் திரிந்த காலத்தில் கூடப் பாபிலோனிய, சுமேரிய நாகரிகங்கள் தளைத்து வளர்ந்துள்ளன. 6 ஆயிரம் வரையான காலசாரங்களில் 4ஆயிரம் வரையானவை பழங்குடி மக்களுடையவையாகும்.

பாரசீக சைபிரஸ் படையெடுப்புக்கள், அலெக்ஸாண்டரின் ஆக்கிரமிப்புக்கள், மங்கோலியர்களின் முரட்டுத்தாக்குதல்களின் மத்தியில் தப்பிப்பிழைத்த தொல்லியல் எச்சங்கள் பக்தாத்தின் மீதான 2003ஆம் ஆண்டின் அமரிக்கப்படையெடுப்பில் அழிந்தது கண்டு உலகமே துயரில் ஆழ்ந்திருந்தது.

பெரிய நாடுகளாயினும் சரி நெடுந்தீவு போன்ற சிறிய கிராமங்களாயினும் சரி அங்கு காணப்படும் தொல்லியல் கருவூலங்கள் பேணப்படல் வேண்டும். ஒரு நாட்டின்– கிராமத்தின்– இருப்பைப்பறைசாற்றிக் கொண்டிருப்பவை அந்தந்த இடங்களில் உள்ள புராதனச் சின்னங்கள்–எச்சங்களே.

எதிர்காலம் தனது நாட்டின் இருப்பை–பெருமையை– உணர இவை முக்கியம். குடாநாட்டின் ஏனைய தீவுக் கூட்டங்களைவிட நயினாதீவு, நெடுந்தீவு என்பன சிலப்பதிகாரக் காலந்தொட்டே வரலாற்றுப் புகழ் சார்ந்த சிறு நிலப்பரப்புக்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

உலகின் பல பாகங்களிலும் இருந்து உல்லாசப்பயணிகளை ஈர்த்தெடுக்கும் இந்தச் சான்றுகள் பாதுகாக்கப்பட வேண்டியவை என்பது நியாயமானதே.

## போத்துக்கேயர் கோட்டை

நெடுந்தீவின் மத்திய பகுதியில் அரச வைத்திய நிலையத்திற்கு அண்மித்ததாக இது அமைந்துள்ளது. மிகவும் சிதைந்து பற்றைகளும் மரங்களும் நிறைந்து காணப்படும் இக்கோட்டை


போத்துக்கேயர் கோட்டை

ஒல்லாந்தருடையது எனத் தவறாகக் கருதப்படுகின்றது. சிலர் இதை மீகாமன் கோட்டை என்பதுமுண்டு. மீகாமன், நாகரத்தினம் பெறவந்தவனே அன்றி நெடுந்தீவைக் கைப்பற்ற வந்தவனல்லன். அவன் கோட்டை கட்டியதாக வரலாறுகளும் இல்லை.

இந்தக் கோட்டை குறித்துப், பசெற் தனது 'விசித்திரமான இலங்கை' என்ற குறிப்பில் பின்வருமாறு கூறுகின்றார்.

"நெடுந்தீவில் போத்துக்கேயரின் கோட்டை மிகவும் பலமான பாதுகாப்புடைய இரண்டு மாடி வசிப்பிடம். ஐம்பது யார் சதுர பரப்பளவையும் நடுவில் தடிப்பான சுவர்களையும் கொண்டது. இச் சுவர் முற்றுமுழுதாக நிலமட்டத்தில் இருந்து இரண்டாகப் பிரிகிறது. இதனுடன் தொடர்புகொள்ள வேண்டுமானல் ஒரேயொருவழி முதலாம் மாடிதான். அக்காலத்து முறையில் இது ஒரு முன்னேற்பாடான– பாதுகாப்பான அமைப்பு என்று சொல்லலாம். அதனால் இது மிகவும் சிக்கலான முழுவதும் நீளமான ஒடுங்கிய சிறிய அறைகளைக் கொண்டதாக அமைந்திருக்கலாம்.

கை மரக்குற்றிகளில் இருந்து இதன் கட்டுமானத்தைப் பார்க்கும்போது மேலே செல்லும் படிக்கட்டுக்கள் இரட்டைச் சுவர்களில் அமைந்துள்ளன. தட்டையான கூரைகளே உடையது. ஒரு மூலையில் இருட்டறை ஒன்று உண்டு.சிறிய சதுரமான அகன்ற தளம் நிலமட்டத்தில் உள்ளது. கதவுகள் இல்லை. இரண்டு அடி சதுரமுள்ள யன்னல் ஒன்று மாத்திரம் உண்டு.

## இராணி கோபுரம்

நெடுந்தீவின் தென்கிழக்கில் தொட்டாரம் பகுதியில் கடற்கரையை அண்டியுள்ள இந்தக் கோபுரம் பிரித்தானிய அரசி விக்டோரியா மகாராணியின் ஆட்சிக்காலத்தில் 1902இல் கட்டப்பட்டது.

மகாராணியின் ஆட்சிக்காலச் சின்னமாக ராணி கோபுரம் என்ற பெயரில் அழைக்கப்படுகின்றது. ஆங்கிலத்தில் Queen Tawer எனப்படும் இது பிற்காலத்தில் குயிந்தா எனத் தமிழில் மருவிக் கொண்டது. பிரிட்டிஸ் ஆட்சியின் நினைவுச் சின்னமான இதனை ஒல்லாந்தர் கட்டியதாகவும் சிலர் கூறுவதைக் கேட்கலாம்.புராதன நினைவுச் சின்னங்களில் ஒன்றான இது இன்னமும் நல்ல நிலையிலேயே உள்ளது.

## குதிரை லாயங்கள்

குதிரை வளர்ப்புக்கென அமைக்கப்பட்ட பண்ணைகள், லாயங்களை சிதைவுற்ற


சிதைந்த நிலையில் உள்ள குதிரை லாயங்களில் ஒன்று

நிலையில் இன்றும் காணலாம். சாராப்பிட்டி, தூண்காலைப் பகுதிகளில் உள்ள இவற்றை நோர்போல்க் சுவர்கள் என்கிறார்கள்.


குதிரைகள் குளிப்பாட்டப்பட்ட மருத்துவக் கேணி

கற்பாறைகளில் குதிரைகள் தண்ணீர் குடிப்பதற்கென அமைக்கப்பட்ட தொட்டிகளும் சாராப்பிட்டியில் உண்டு.

## வெடியரசன் கோட்டை

கோட்டைக்காடுப் பகுதியில் மேற்குக் கடற்கரையை ஒட்டி 250யார் தொலைவில் இது அமைந்துள்ளது. முற்றாக அழிந்து மேடாகக் காணப்படும் இதில் சைத்திய வடிவிலான கட்டுமானப்பணிகள் 1976இல் இருந்து பெற்ற போதும் அரசின் தவறான கண்ணோட்டத்துடன் இதன் ஆய்வு வேலைகள் மேற்கொள்ளப்பட்டதால், பின்னர் இதன் வேலைத்திட்டங்கள் அப்போதைய திறப்பகுதியின் நாடாளுமன்ற உறுப்பினர் பண்டிதர் கா.பொ.இரத்தினத்தின் நடவடிக்கையை அடுத்துக் கைவிடப்பட்டது.

இங்கிருந்து கடற்கரைவரை காணப்படும் கல் தூண்களின் சிதைவுகளும் கண்டெடுக்கப்பட்ட கூரை ஓடுகளும் இப்பகுதியில் மாளிகை ஒன்று இருந்தற்கான அடையாளங்களாகும். தவிர மாலைகளுக்கான மணிகள், நாணயங்கள் போன்றவை யாழ்ப்பாணம் தொல்பொருள் காட்சிச்சாலையில் வைக்கப்பட்டுள்ளன.

மணிமேகலை பின்நாளில் ஒரு பெளத்த துறவியானார் என்பதும் பெளத்தமதம் தமிழர்களினாலும் கடைப்பிடிக்கப்பட்டு வந்ததென்பதும் வரலாறாகும். பெளத்தமதம் சிங்களவரது என இலங்கை அரசு உரிமை பாராட்டுவதன் மூலம் உண்மையான வரலாற்றுச் சம்பவங்களை அழிக்க முயல்வது ஒன்றும் வியப்பல்ல. ஏனெனில் இலங்கையில் 1948 க்குப் பின் இனவாத சக்திகளே ஆட்சியில் இருந்து வருகின்றமை கண்கூடு.

இந்தக் கோட்டை பற்றிய ஆய்வுகள் நீதியான தடம்பதிக்குமெனில் நெடுந்தீவுக்கும் தமிழகத்திற்குமான தொடர்புகள் குறித்த புதிய தகவல்கள் கிடைக்கும் வாய்ப்புக்கள் தென்படலாம்.

## ஒல்லாந்தர் கட்டடம்

நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பணிமனையின் பிரதான கட்டடமும் அதனுடன் இணைந்த புறாக்கூடு மற்றும் பழைய கட்டடங்கள் என்பன ஒல்லாந்தர் காலத்தில் கட்டப்பட்டவை.


ஒல்லாந்தர் காலத்தில் கட்டப்பட்ட புறாக்கூடு

அன்ரானியோ றிபைறி (Antaniyo ribire ) எனப்படும் போர்த்துக்கேய அதிகாரி இந்த மாளிகையில் வாழ்ந்தான் என்பது தவறு. இந்த மாளிகையில் இருந்து நெடுந்தீவை நிர்வகித்தவன் எட்வேட் நோளனாவான்.

## பழமை மிக்க ஆலமரம்

நெடுந்தீவு கிழக்குஆலமாவனப்பிள்ளையார் கோவிலை ஒட்டிக் காணப்படும் இந்த ஆலமரம் சுமார் 250 க்கும் மேற்பட்ட ஆண்டு வரலாற்றைக் கொண்டது. பரந்து விரிந்து கிடக்கும் இந்தமரத்தின் இலைகளை மாடு, ஆடுகள் உண்பது கிடையாது. இம்மரத்தில் இருந்து பால்வடிவதில்லை என்பதும் வியப்புக்குரியதே.

தருமரின் தம்பியான வீமன் இந்தப்பகுதிக்கு வந்ததாகவும் இதனால் இப்பிரதேசம் வீமனடி என வழங்கப்படுவதாகவும் இப்பகுதி மக்கள் கூறுகின்றனர். இதனோடு பிள்ளையார் ஆலயம் அமைந்திருப்பதனால் அந்த ஆலயம் ஆலமாவனப் பிள்ளையார் கோவில் எனச் சொல்லப்படுகிறது.

## பெருக்குமரம்

முந்நூறு ஆண்டுகளுக்கு மேற்பட்ட வயதைக் கொண்ட இந்த மரம் கிழக்குப்பகுதியில் உள்ளது. மன்னார் மாதோட்டப் பகுதியில் காணப்படும் பெருக்கு மரங்கள் அரேபியர்களால் கொண்டுவரப்பட்டமை எனக்கூறப்படுவதால் இந்த மரமும் அரேபியர்களால் கொண்டுவரப்பட்டதாகக் கருத இடமுண்டு.

பெருக்கு மரம் உலர்ந்த வெப்பமான ஆபிரிக்காவின் புற்றரைகளில் அதிகமாகக் காணப்படுகிறது. 18 மீற்றர் உயரமும் 9முதல் 15அடி வரை விட்டமும் குறுகிய கிளைகளையுடையதாகவும் இருக்கும் இதன் பூக்கள் வெள்ளை நிறமுடையவை. அவை இரவில் விரிந்து காணப்படும்.

வெளவால்கள் மகரந்தச் சேர்க்கைக்கு உதவும். இதன் பழம் 30சென்ரி மீற்றர் நீளமானது. மரத்திலிருந்தது நீளமான கயிற்றில் கட்டித் தொங்கவிடப்பட்ட லாம்பு ( Lantern) போன்று காட்சியளிப்பவை. மாவுக்குள் புதைத்து வைத்திருப்பது போன்று அனேகவிதைகளைக் கொண்ட இதனை குரங்குப் பாண் (Monkey Bread) எனக்கூறுவதாகவும் தெரிகின்றது.

இதன் பூக்களும் பழங்களும் தண்டில் தொங்குகின்றன. அவை நீளமாகவும் கயிறு போன்றும் காணப்படும். மரம் சிறிதாக இருப்பினும் மிகவும் கூடுதலான அளவு நீரைச் சேமித்து வைக்கும் தன்மை கொண்டது.

பழங்களின் சதை உணவாகவும், குளிர்பானங்களுக்கு நறுஞ்சுவை ஊட்டுவதற்கும் உபயோகிக்கப்படுகின்றது. பட்டை நார்களிலிருந்து கடதாசி, துணிகள், கயிறு என்பவற்றைச் செய்கிறார்கள்.

தாவர ரீதியான வகைப்படுத்தலில் இது 'பொம்பக்ஸ்' (Bombex) குடும்பத்தைச் சேர்ந்த 'பொம்காகேசியே' (Bomhacacea) இனமாகும். பெரும்பாலும் தெரிந்த அறியப்பட்ட 'அடம்சோனியர்' (Adamsonia) 'டிஜிராட்டர்' (Digitata வகையைச் சேர்ந்தது என பெருக்குமரம் குறித்த The world Book Encyalopedia B-2இல் எழுதப்பட்டுள்ளது.

## கோளான் கற்பாடிவங்கள்

சாராப்பிட்டி பெரியதுறை தரைத் தோற்றத்தில் தட்டையாகப் பரந்து காணப்படும் வைரித்த கோளான் கல் படிவங்களே இவை. இப்பகுதிகளில் காணப்படும் கிணறுகள் இவற்றை வெட்டிக் கட்டப்பட்டவையே.

கடினமான பாறைகளில் கட்டப்பட்ட இக் கிணறுகள் பூதம் பொழிந்த கிணறுகள் எனச் சொல்லப்படுகின்றன. இதனைக் கூழங்கை ஆரியச் சக்கரவர்த்தி வெட்டுவித்தாகச் சிலரும் வேறு சிலர் ஒல்லாந்தர்காலத்தில் வெட்டப்பட்டவை எனவும் கூறுகின்றனர்.

## கல்வேலிகள்

எல்லைகளைப் பாதுகாக்கும் மதில் போன்று சிறிதும் பெரிதுமான கற்களைக் (கோளான் கற்கள் முருகைக்கற்கள்) கொண்டு அடுக்கப்பட்ட இது 'பகிர்' என அழைக்கப்படும்.


'பகிர்' எனப்படும் கல்வேலி

பகிர்கள் பார்வைக்கு இலேசான ஒன்றாகத் தென்பட்டபோதும் இறுக்கமான முறையில் கற்களை அடுக்கிக் கட்டுவது ஒன்றும் சுலபமானதல்ல. அனுபவம் மிக்கவர்களாலேயே இதனை உறுதியாகவும் பலமாகவும் கட்டமுடியும். இலங்கையின் வேறு எந்தப்பகுதியிலும் காணமுடியாத இந்த வித்தியாசமான மதில்கள் உல்லாசப் பயணிகளை வெகுவாக ஈர்க்கின்றன. இது ஒரு கலைவடிவமாகும்.

## மணற்றுறைக் கடற்கரை

நெடுந்தீவு மத்தியில் அமைந்துள்ள இந்தக் கடற்கரை வெளிநாட்டு உல்லாசப் பயணிகளைக் கவர்ந்த இடங்களில் ஒன்று. இப்பகுதிக் கடலில் குளிப்பதற்கு உகந்த நிலைகள் காணப்படுவதால் இங்குவரும் பயணிகள் இதனை ஓர் சிறந்த பொழுதுபோக்கிடமாகப் பயன்படுத்தி வந்துள்ளனர்.

இவை தவிர நாற்பது அடி மனிதனின் பாதம் எனச் சொல்லப்படும் கற்குழி, குதிரைகளுக்கென அமைக்கப்பட்ட மருத்துவக் கேணி என்பனவும் புராதனச் சான்றுகளாக இன்றும் உள்ளன.


40 அடி மனிதனின் பாதத்தில் ஒன்று

பாதுகாக்கப்பட வேண்டிய இந்தச் சான்றுகள் கவனிப்பின்றிப் படிப்படியாகச் சிதைந்து வருவது துரதிர்ஷ்டமானதே,

**நெடுந்தீவு : லக்ஸ்மன்**

---

# பயணம்

இயற்கை எழில் சூழ்ந்த அந்த வயல் வெளிவீதியிலே, என் துவிச்சக்கரவண்டி விரைந்துகொண்டிருந்தது.அவசரப் பயணம் தான் அது. ஆனாலும் வயல்வெளிகளுடு சென்றதால் அந்த இயற்கை வனப்புக்களை எல்லாம் அளந்து இரசித்த வண்ணமே எனது பயணத்தைத் தொடர்ந்துகொண்டிருந் தேன். இது எனது குணங்களில் ஒன்றாகவே மாறி விட்டது. எந்த ஒரு அவசரப் பயணமானா லும் கண் குளிரக் காண்கின்ற காட்சிகளிலே எனது மனதைப் பறிகொடுத்துவிடுவேன்.

அந்தப் பச்சைப் பசேல் என்ற தன்மையும், சலசலக்கின்ற நெற்கதிர்களின் ஓசையும், ஆங்காங்கே குத்திட்டுக் கொறித்துக்கொண்டிருந்த குருவிகளின் அசைவுகளும் என்னை அவைகளின்பால் வசப்படுத்திக்கொண்டன.

இப்படியே பார்த்துக்கொண்டு சென்ற எனக்கு ஓர் அதிர்ச்சி! அந்த வயல்வெளி முடியும் வீதியின் ஓரத்தில் நின்ற செம்பரத்தஞ் செடியில் நான்கைந்து பள்ளிச் சிறுவர்கள் பூப் பறித்துக்கொண்டிருந்தார்கள். அதுவும்எட்டாத கொப்பிலிருந்த அந்த ஒரு பூவை மட்டும் பறிப்பதற்காக ஒரு தடி கொண்டு அடி அடியென்று அடித்து அதைச் சின்னாபின்னப்படுத்திக் கொண்டிருந்தார்கள். அந்தச் சின்னஞ்சிறியவர்களுக்கு இது ஒரு விளையாட்டாகவே இருந்தது. ஆனால் எனக்கு வலித்தது. பிஞ்சு தொங்குகின்ற இலை தளைகளையும், பிஞ்ச மொட்டுக்களையும் பார்க்கும் போது அந்த

**கடுகுக் கதை**

மரம் தன்னைக் காப்பாற்று... காப்பாற்று... என்று கூக்குரல் இடுவதைப் போலிருந்தது.

மிகுந்த ஆத்திரத்துடன் அவர்கள் அருகே கொண்டு போய் எனது வண்டியை நிறுத்தினேன். ஆனால் அந்தப் பால்முகம் மாறாத ஆறேழுவயதேயான அந்தச் சிரிப்பும் கூத்துமாய் நின்ற சிறுவர்களைப் பார்த்த மாத்திரத்திலேயே எனது ஆத்திரம் எங்கேயோ காணாமல் போய்விட்டது.

அவர்கள் என்னைப் பார்த்ததுமே தடியைக் கீழே போட்டுவிட்டு மிரள மிரள விழிக்கத்தொடங்கினர். நான் மிக அருகில் சென்று அவர்களை அணைத்துக்கொண்டு கூறினேன்.

பிள்ளைகளே! உங்களுக்கு அடித்தால் நோகும்தானே...! இப்படித்தான் இந்த மரத்துக்கும் நோகும். பூ வேணுமென்றால் மெதுவாகக் கொப்பை வளைத்துப் பறிக்கவேண்டும். ஏலாதென்டால் ஒரு பெரியவரின் உதவியுடன் பறித்துக்கொள்ள வேண்டும் என்று கூறி முடிந்ததும் அல்லாமல் ஒரு பூவையும் பறித்துக்கொடுத்தேன்.

அவர்கள் உடனேயே நன்றி சொன்னார்கள். தம்மை மன்னித்து விடுமாறு கேட்டுக் கொண்டார்கள். பின்னர் துள்ளலும் நடையுமாய்ச் சென்று எங்கேயோ காணாமல் போனார்கள்.

அவர்களது முகம் பிரகாசமாய் இருந்தது. தெளிவாய் இருந்தது. நான் அன்பாய்ச் சொன்னதும் அவர்கள் புரிந்துகொண்ட விதம் எனக்குப் பிடித்திருந்தது.

எதற்கெடுத்தாலும் கோபப்படும் எனக்கு இது ஒரு பாடமாய் இருந்தது. அன்பு எதையும் வெல்லும் என்பதைப் புரிந்துகொள்ள முடிந்தது. நான் எகிறிக்குதித்துத் தடியைப் பறித்து வெருட்டியிருப்பின் கதை வேறாக இருந்திருக்கும் அவர்கள் இவ்வாறு புரிந்து கொண்டிருப்பார்களோ என்று தெரியாதிருந்திருக்கும்.

பிஞ்சு வயசுக்காரர்கள் தடாலென்று இறங்கிவந்து மன்னிப்புக்கேட்ட விதம் மகிழ்ச்சியைத் தருந்தது.

எதையும் சொல்லும் முறையில் சொல்லிக் கொண்டால் புரிந்துகொண்டு விடுவார்களென்று நானும் புரிந்துகொண்டேன்.

மாறாத மலர்ச்சியை எனது முகத்தில் தேக்கிக்கொண்டு மீண்டும் எனது பயணத்தைத் தொடர்ந்தேன்.

**அவிஷானி மானிப்பாய்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல லட்சம் பேருக்கு புதை குழியாகிய நாஸி வதை முகாம்...



"நான் உயிருடன் இருக்கும்வரை 'அவுஸ்விட்ஸ்' என்ற பெயரை என்னால் மறக்க முடியாது. என்னைப் பெற்றெடுத்த தாய் 'அவுஸ்விட்ஸ்' மனிதவதை முகாமின் பாரிய விஷவாயு அறைக்குள் தள்ளப்பட்டே சாகடிக்கப்பட்டாள். எனது தந்தையின் கதி என்னவாயிற்று என்பது எனக்கு இன்றுவரை தெரியாது. நான் 'அவுஸ்விட்ஸ்' மனிதவதை முகாமிலிருந்து காப்பாற்றப்பட்டு அறுபது ஆண்டுகள் முடிவடையும் இந்தவேளையில் கூட, அந்த வதை முகாமில் நான் கழித்த நாள்கள்; காணநேர்ந்த கொடூரங்கள் - இன்றும் என் நினைவில் நிழலாடுகின்றன."

இது இற்றைக்கு அறுபது ஆண்டுகளுக்கு முன்னர் 'அவுஸ்விட்ஸ்' என்ற ஜேர்மனிய நாஸி வதை முகாமிலிருந்து உயிர் தப்பிப் பிழைத்த ஒருவரிடமிருந்து வெளிவந்த வார்த்தைகளாகும். இதுவரை காலமும் உலகில் இயங்கிய வதை முகாம்களில் மிகப்பெரிய முகாமென இந்த அவுஸ்விட்ஸ் முகாம் குறிப்பிடப்படுகிறது. 'மரணமுகாம்' எனப் பொதுவாக அழைக்கப்பட்ட இந்த 'அவுஸ்விட்ஸ்' முகாம் ரஷ்ய நாட்டுச் செம்படை வீரர்களால் தாக்கப்பட்டு, நிர்மூலமாக்கப்பட்ட 60 ஆண்டுகள் நிறைவு நிகழ்வு அண்மையில் ஜேர்மனியில் முன்னர் 'அவுஸ்விட்ஸ்' மனிதவதை முகாம் அமைந்திருந்த அதே இடத்தில் நினைவு கூரப்பட்டது.

அந் நிகழ்ச்சியில் ஒரு கம்பீரம் காணப்பட்டது.ஆனால், அக்கம்பீரத்தின் மத்தியில் கலந்து கொண்ட சகலரதும் முகத்தில் சோகம் இழையோடியது. நிசப்தமான அச்சூழலில் கனத்த மனத்துடன் அந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டவர்களில், இரண்டாவது உலக மகாயுத்தத்தில் பங்கேற்ற சகல நாடுகளின் அரசுத் தலைவர்கள் பலரும் கலந்து கொண்டமை விசேடமான அம்சமாகும்.

அன்றைய சீதோஷ்ணம் உஷ்ண நிலை பூஜ்யத்துக்கு இறங்கிவிட்டிருந்தது. இருந்தபோதிலும், கடுங்குளிரையும் பொருட்படுத்தாது 'அவுஸ்விட்ஸ்' வதை முகாமில் முன்பொரு சமயம் கைதிகளாயிருந்து - பின்னர் ரஷ்ய செம்படைவீரர்களால் மீட்கப்பட்ட பலர்- தமது முன்னைய அனுபவங்களை மீண்டும் ஒரு தடவை நினைவு கூரும் நோக்கில் கூடியிருந்தனர்.

60 ஆண்டுகளுக்கு முன்னர் அந்த மனித வதைமுகாமில் இடம்பெற்ற கொடூரங்களை மீண்டுமொரு தடவை நினைவுபடுத்தும் நோக்கில் நிகழ்ச்சி ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. முகாமிலிருந்து அன்று கைதிகளை நச்சுவாயு அறைக்கு ஏற்றிச் சென்ற ரயில் அமைப்பில் உருவாக்கப்பட்டிருந்த ரயில் ஒன்று புறப்படவுடன் அந் நினைவு நிகழ்ச்சி ஆரம்பித்து வைக்கப்பட்டது. முன்னர் கைதிகளால் 'மரணத்தின் வாயிலுக்கு அழைத்துச் செல்லும் புகையிரதம்' என அழைக்கப்பட்ட, அத்தகைய மாதிரி ரயில் புறப்பட்ட வேளையில் முன்னர் அம் முகாமில் கைதிகளாக இருந்து பின்னர் விடுவிக்கப்பட்ட- தற்போதும் உயிருடனிருக்கும் மாஜிக் கைதிகளின் கண்களின்றும் கண்ணீர் பெருக்கெடுத்தது. மறந்துவிட முயன்றும், முடியாத வகையில் மீண்டும் மீண்டும் மனதில் சுற்றிச் சுழன்று வந்த நினைவுகள் - பழைய அனுபவங்கள்- மீண்டும் ஒரு முறை கண்முன்னால் நிஜமாவது போன்ற உணர்வில் ஒரு கணம் அவர்கள் திக்குமுக்காடினர்.

"நச்சுவாயு அறையில் அடைத்துக் கொலை செய்யும் பொருட்டுக் கைதிகளை அப்புகையிரதத்தில் நாஸிப் படையினர் பலவந்தமாக ஏற்றிய வேளையில் அவர்கள் எழுப்பிய அவலக்குரல் இன்றும் என் காதுகளில் ஒலித்த வண்ணமுள்ளது."

84 வயதைக் கடந்து விட்ட நிலையிலும் -தற்போதும் ஆரோக்கியத்துடன் காணப்படும் முன்னாள் 'அவுஸ்விட்ஸ்' முகாம் கைதியான அல்போன்சோ வோர்கிவிஸ் இவ்வாறு தனது அனுபவத்தை நினைவு கூருகிறார்.

அவர் மூன்றரை ஆண்டு காலமாக நாஸிகளின் அந்த வதை முகாமில் கைதியாக இருக்க நேரிட்டது. அவ்வேளையில் ஜேர்மனியப் படையினரால் மனிதாபிமான மற்ற வகையில் சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டவர் அவர்.

"அவர்கள் எனது ஏழு கீழ் வாய்ப்பற்களைப் பலவந்தமாகப் பிடுங்கி எறிந்தனர். அடிக்கடி அவர்களது கடும் தாக்குதல்களுக்கு உட்பட நேர்ந்தமையால் எனது இரு சுவாசப்பைகளும் கடுமையாகப் பாதிப்புற்றன. அங்கு நான் கழித்த நாள்களை ஒரு போதும் என்னால் மறக்க முடியாது."

நினைவு நிகழ்ச்சியில் கலந்து கொண்ட சமயம் அவர் தனது பழைய அனுபவங்களை இவ்வாறு விவரித்தார்.

இரண்டாவது உலகமகாயுத்தக் காலத்தில் உலகின் பல நாடுகளிலும் பரந்து வாழ்ந்து வந்த 1.1 மில்லியன் யூத இனத்தவர்களைப் படுகொலை செய்யும் முயற்சி ஜேர்மனியில் நாஸி இராணுவத்தினரால் ஆரம்பிக்கப்பட்டது. ஜேர்மனிய சர்வாதிகார ஆட்சியின் கீழ் இயங்கிய போலந்து, இத்தாலி மற்றும் ஒஸ்ரியா ஆகிய நாடுகளில் வாழ்ந்த யூத இனத்தவர்களையும் தமது நாஸி ஆட்சிக்கெதிராகச் செயற்பட்டவர்களையும் 'அவுஸ்விட்ஸ்' மனித வதை முகாமில் நச்சுவாயு அறைகளில் பூட்டி வைத்துத் துடிக்கத் துடிக்கப் படுகொலை செய்தது ஜேர்மனிய நாஸி இராணுவம். இவ்விதம் 1.1 மில்லியன் பொதுமக்கள் அவ்வதை முகாமில் வைத்துக் கொலையுண்டனர்.

அத்துடன் நிறுத்தாது, மேலும் பல லட்சக்கணக்கான யூத இன மக்களை அம்முகாமில் அடைத்து வைத்து மனிதாபிமானமற்ற வகையில் ஜேர்மனிய இராணுவத்தினர் கடும் சித்திரவதைக்கு உட்படுத்தினர்.

'அவுஸ்விட்ஸ்' மனிதவதை முகாமில் அடைத்து வைக்கப்பட்டிருக்கும் கைதிகளைக் கொலை செய்வதற்கான உத்தரவு கிடைத்ததும், முதலில் அவர்களது உடைகள் களையப்பட்டு அவர்கள் நிர்வாணப்படுத்தப்படுவர். அதன் பின்னர் 'மரணத்துக்கு அழைத்துச் செல்லும் புகையிரதம்' எனக் குறிப்பிடப்படும் ரயிலில் அவர்கள் ஆடு, மாடுகள் போல் பலவந்தமாக ஏற்றப்படுவர். பெரும் கூக்குரலிட்டு மரண ஓலம் எழுப்பும் யூத இன மக்களை எவ்வித ஈவு இரக்கமின்றி முகாமின் காவலரண்களினூடாக எடுத்துச் செல்லும் அப் புகையிரதம் நச்சுவாயு அறைத் தொகுதிகளின் வாயிலில் அவர்களைக் கொண்டு சென்று சேர்க்கும்.

'அவுஸ்விட்ஸ்' மனித வதை முகாம் நிர்மூலமாக்கப்பட்டு 60 ஆண்டுகள் பூர்த்தியானதை நினைவு கூரும் முகமாக ஒழுங்கு செய்யப்பட்ட நிகழ்வு இடம்பெற்ற தினத்தன்று, அந்த வதை முகாமில் 60 ஆண்டுகளுக்கு முன்னர் இடம்பெற்ற மனிதப் படுகொலைகளை விளக்கவும் நினைவுபடுத்தவும் ஏற்ற வகையில் ஒழுங்கு செய்யப்பட்ட நிகழ்ச்சியை நேரில் பார்வையிட ரஷ்ய ஜனாதிபதி விளாடிமீர் புடின், அமெரிக்க உப ஜனாதிபதி டிக்வெனி, போலந்து நாட்டின் கலாசார அமைச்சர் விளாதிமீர் டப்ரோவிஸ்கி ஆகிய அரசுத் தலைவர்களும் அவ்விடத்தில் பிரசன்னமாயிருந்தனர்.

போலந்து நாட்டில் தற்போதைய க்லாசார அமைச்சரும் 60 ஆண்டுகளுக்கு முன்னர் அதே அவுஸ்விட்ஸ் வதை முகாமில் கைதியாக அடைபட்டிருந்தவர் என்பது விசேடமான அம்சமாகும். ஏனைய கைதிகளைப் போன்றே அவ்வேளையில் அந்த வதை முகாமுக்குள் கைதியாக அவரை இட்டுச் சென்ற வேளையில், பெயருக்குப் பதிலாக ஒவ்வொரு கைதிக்கும் வழங்கப்படும் விசேட இலக்கம் என்ற வகையில் 4427 என்ற இலக்கம் அவருக்கும் வழங்கப்பட்டதாம்.

"60ஆண்டுகளுக்கு முன்னர் இதே 'அவுஸ்விட்ஸ்' வதை முகாமுக்கு நான் கைதியாகக் கூட்டி வரப்பட்டேன். இம் முகாமில் கூட்டம் இடம்பெறும் திடலுக்கு ஜேர்மனிய இராணுவத்தினரால் அழைத்துச் செல்லப்பட்ட சமயம் அங்கு ஏறக்குறைய 5,500 கைதிகள் இருந்திருப்பர் என நினைக்கிறேன். அவர்களில் பெரும்பாலானோர் போலந்து நாட்டில் வசித்த யூத இனத்தவர்களாகக் காணப்பட்டனர்" என

## அறுபது ஆண்டுகளுக்கு முந்திய நினைவுகள்....

டப்ரொவிஸ்கி தனது உரையில் தெரிவித்தார்.

"நாம் தற்போது உலகத்தின் மிகப் பெரிய மனிதப் புதைகுழி மீது நின்று கொண்டிருக்கிறோம்; இங்கு கொலையுண்ட எவரும் தனித்தனியான புதைகுழியில் புதைக்கப்படவில்லை. அவர்களது புதைகுழியின் மேல்புறம் நினைவுக்கல் அமைக்கப்படவில்லை. அத்தனை பேரும் ஒரே பாரிய மனிதப் புதைகுழியிலேயே புதைக்கப்பட்டனர். கடைசியில் இங்கு மீந்தது ஹிட்லரின் விஷவாயு அறைகளில் கொலையுண்ட இலட்சக் கணக்கான அப்பாவிப் பொதுமக்களின் அவலக்குரல் மட்டுமே!"

தொடர்ந்து உரையாற்றிய டப்ரொவிஸ்கியின் பேச்சை மௌனமாகக் கேட்டு நின்ற பார்வையாளர்களின் செவிகளில் 60ஆண்டுகளுக்கு முன் அந்த அப்பாவிப் பொது மக்களின் மரண ஓலம் ஒரு கணம் ரீங்காரித்தது.

இந்த வதை முகாமில் கொலையுண்ட யூத இனத்தவரின் புகைப்படங்கள் அடங்கிய கண்காட்சியும் அன்று ஒழுங்குசெய்யப்பட்டிருந்தது. அத்துடன் வதை முகாமில் கைதிகளாக அடைபட்டிருந்த வேளையில் கொல்லப்பட்ட அல்லது காணாமற் போன யூத இனத்தவர்களின் ஏராளமான

உறவினர்கள் அந்த வேளையில் அங்கு பிரசன்னமாயிருந்து, அங்கு அமைக்கப்பட்டிருந்த பொது நினைவுத்தூபியில் மலர் வளையம் வைத்துக் கொலையுண்ட தமது உறவினர்களின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்தித்தனர்.

'அவுஸ்விட்ஸ்' வதை முகாமிலிருந்து ரஷ்ய செம்படையினரால் காப்பாற்றப்பட்ட பலர் தற்போது தமது வாழ்க்கையை அமைதியாகக் கழித்து வருகின்றனர். ஆயினும், அவர்களில் சகலரும் ஹிட்லரின் சுப்பர் எஸ்.எஸ்.என்ற படைப் பிரிவைச் சேர்ந்த ராணுவ வீரர்களின் அந்நாளைய குரூரத்தனமான - மிலேச்சத்தனமான - சித்திரவதைகள் குறித்துத் தெளிவான ஞாபகம் வைத்துள்ளனர். இன்று முதியவர்களாக வாழ்ந்து வரும் அவர்கள் அந்நாளில் இள வயதுடையோராய் இருந்திருப்பர். அவர்களது உறவினர்களில் பலர் நச்சுவாயு அறைகளில் கொலையுண்டதை அவ்வேளையில் இவர்கள் கண்டும் கேட்டும் அறிந்திருப்பர். அத்தனை பயங்கர அனுபவங்களையும் அவர்கள் தமக்குள் ஜீரணித்துக்கொண்டே இன்றும் வாழ்க்கையை எதுவித பிடிப்புமின்றி ஓட்டிவருகின்றனர்.

"இவ்வித மனித அவலமொன்று இனியொரு தடவை உலகின் எந்தவொரு மூலையிலும் இடம்பெறக்கூடாது."

இந்த நினைவுகூரல் நிகழ்வில் கலந்துகொண்ட - தற்போது 92வயதை எட்டியுள்ள - ரஷ்ய செம்படை அதிகாரியொருவர் மேற்கண்டவாறு பெருமூச்சுடன் கருத்து வெளியிட்டார். இரண்டாண்டு காலத்துக்கு மேலாக அவரும் அந்த வதை முகாமில் கைதியாகக் காலத்தைக் கழித்த அனுபவம் கொண்டவர்.

"எம்முடன் யூத இனத்தவர், பிரெஞ்சு இனத்தவர் மற்றும் ரஷ்யர்கள் எனப் பல்வேறு இனத்தைச் சேர்ந்தவர்கள் கைதிகளாக அடைபட்டிருந்தனர். அவர்களில் பலர் எழுந்து நடமாட முடியாத பலவீன நிலையில் சிறைக் கூடத்தில் வாடிவதங்கினர்; பெரும்பாலானோர் நோய்களால் பீடிக்கப்பட்டுத் தினம் தினம் சித்திரவதை அனுபவித்தனர். அவ்விதம் நலிவுற்ற நிலையில் அடைபட்டிருந்த அவர்கள் பக்கம் பார்ப்பதற்குக் கூட எம்மை நாஸி அதிகாரிகள் அனுமதித்ததில்லை. எவர் எந்தவொரு சிறு தவறிழைத்தாலும் அதற்குரிய தண்டனை மரணமே."

இவ்விதம் அவர் தமது முன்னைய பயங்கர அனுபவங்களை விவரித்தார்.

உலகத்து நாடுகள் முழுவதையும் கைப்பற்றித் தானே உலகின் நிகரற்ற சர்வாதிகாரியாக ஆட்சி செலுத்த வேண்டுமென்ற அடோல்ப் ஹிட்லரின் உன்மத்த எண்ணம் காரணமாக உருவானதே இரண்டாவது உலக மகாயுத்தம். இதன் காரணமாகப் பல மில்லியன் கணக்கான மக்கள் நேரடியாகப் பாதிக்கப்பட்டு உயிரிழக்க நேர்ந்தது. அது மட்டுமன்றி மேலும் பல மில்லியன் கணக்கான மக்கள் 'அவுஸ்விட்ஸ்' போன்ற மனிதவதை முகாம்களில் குரூரமாகச் சித்திரவதைகளுக்கு உட்படுத்தப்பட்டு உயிரிழக்க நேரிட்டது.

திட்டமிட்டு ஆயுத பலத்தின் மூலம் ஓர் இனத்தவரை மற்றோர் இனத்தவர் கொன்று குவிக்கக் காரணமான இந்த யுத்தம், கடைசியில் நேச நாட்டுப் படைகளால் சர்வாதிகாரி ஹிட்லர் தோற்கடிக்கப்பட்டமையையடுத்து முடிவுக்கு வந்தது. உலக நாடுகள் அனைத்தையும் தான் ஒருவனே கட்டி ஆள வேண்டுமென்ற குரூர ஆசையால் இவ்விதம் வகை தொகையின்றி மனிதப் படுகொலைகளைப் புரிந்த அடோல்ப் ஹிட்லர் இறுதியில் எவ்வாறு உயிரிழந்தார் என்பது இன்றுவரை மர்மமானதொன்றாகவே இருந்து வருகின்றது.

ஆட்சி அதிகாரத்தைப் பயன்படுத்தித் தாம் விரும்பியவாறு செயற்பட முனையும் இன்றைய உலக அரசியல்வாதிகள் ஹிட்லர் என்ற மிருகத்தனம் மிக்க கொடூர சர்வாதிகாரியின் வாழ்க்கையிலிருந்து கற்றுக்கொள்ளத்தக்க படிப்பினைகள் ஏராளமுண்டு. •

தொகுப்பு
வசந்தாமணாளன்





(இடது புறம்) 'அவுஸ்விட்ஸ்' வதை முகாம் நிர்மூலமாக்கப்பட்டு 60 ஆண்டுகள் பூர்த்தியானமை தொடர்பான நினைவு நிகழ்வில் கலந்து கொண்ட அரசுத் தலைவர்கள்.
(வலது புறம்) வதை முகாமில் கைதியாகவிருந்து விடுதலையான ஒருவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜே.வி.பியுடன் கூட்டுவைத்து ஐ.தே.க ஆட்சி அமைக்குமா?





ஜே.வி.பியும் ஐக்கிய தேசியக் கட்சியும் புரிந்துணர்வு உடன்பாடு ஒன்றைக் கைச்சாத்திட்டு தென்னிலங்கை அரசியலில் மற்றுமொரு விநோத நாடகம் ஒன்றை அரங்கேற்றும் சாத்தியங்கள் உள்ளதாக கொழும்பில் அரசியல் அவதானிகள் எதிர்பார்க்கின்றனர்.

ஜே.வி.பியும் ஐக்கிய தேசியக் கட்சியும் இணைந்து கூட்டாட்சி ஒன்றை அமைக்கும் சாத்தியப்பாடுகளை இரு கட்சிகளினதும் சிலபிரதிநிதிகள் அந்தரங்கமாகக் கூடி ஆராய்ந்துள்ளனர் என்றும் கதைகள் கசிந்துள்ளன. அதனடிப்படையில் தான் ஜே.வி.பி. – ஐ.தே.கட்சி கூட்டு ஏற்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை என்று அரசியல் அவதானிகள் கருதுகின்றனர். அதிகாரத்தைத் தொடர்ந்து தக்கவைத்தல், எதிரியை தோற்கடித்தல், அதிகாரத்தை கைப்பற்றுதல் முதலிய சந்தர்ப்பவாதக் கோட்பாடுகளின் அடிப்படையில் மட்டுமே பெரும்பாலான அரசியல் இயக்கவியல் (Political Dynamics) அமைகிறது. இலங்கை அரசியல் முற்றிலும் இதற்குப் பழக்கப்பட்டது தான். ஐக்கிய தேசியக் கட்சியின் முதலாளித்துவப் பொருளாதாரக் கொள்கைகள் ஜே.வி.பிக்கோ, ஜே.வி.பி. கோஷமிடும் மார்க்ஸிஸ பொருளாதாரக் கொள்கைகள் ஐக்கிய தேசியக் கட்சிக்கோ அதிகாரம் என்ற சூத்திரத்தைப் பயன்படுத்தி அரசியல் கணக்கு போடுவதில் இரு தரப்பினரும் ஈடுபடும் போது. தடைகளாக இருக்கப் போவதில்லை. எனினும் ஜே.வி.பி. – ஐ.தே.க. கூட்டில் வடக்கு –கிழக்கு விவகாரங்களே பெரும் தடைகளாக இருக்கும்.

### ஜே.வி.பி. அதிர்ச்சியிலும் ஆத்திரத்திலும்

“சமாதான முயற்சியை முன்நகர்த்துவதில் அரசுடன் ஒட்டியுள்ள கட்சியைச் சேர்ந்தவர்களே முட்டுக்கட்டையாக இருக்கின்றார்கள். சிறுவிடயங்களுக்கும் அரசை விட்டு வெளியேறுவோம் என்று மிரட்டுகிறார்கள். இப்படியே ஆட்சியைக் கொண்டு நடத்த முடியாது. தேவையானால் அவர்கள் வெளியேறிச் செல்லட்டும்...” என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கடந்த ஞாயிற்றுக்கிழமை அத்தன கலையில் வரையறுக்கப்பட்ட பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தைத் திறந்து வைத்து உரையாற்றுகையில் தெரிவித்திருந்தார். ஜே.வி.பியினரும் ஜனாதிபதிக்குமிடையில் பல மாதங்களாக நிலவி வந்த முரண்பாடுகள் இப்போது உச்சக்கட்டத்தை அடைந்துள்ளன என்றே கொழும்பில் அரசியல் தலைவர்கள் கூறுகின்றனர். ஜனாதிபதியின் அத்தனகல அறிவிப்பு ஜே.வி.பி. சிரேஷ்ட தலைவர்களை அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது என்றும் அதன் கனிஷ்ட தலைவர்களையும் அடிநிலை உறுப்பினர்களையும் ஆத்திரத்திற்குள்ளாக்கியுள்ளது என்றும் ஜே.வி.பியுடன் நெருக்கமான ஊடகவியலாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

### ஐக்கிய தேசியக் கட்சிக்கு சுவாரஸ்யமான அனுபவம்

ஐ.தே.கட்சியுடன் கூட்டை ஏற்படுத்திக் கொண்டு தற்போதைய அரசுக்கு தனது ஆதரவை நீக்குவதன் மூலம் ஆட்சிக் கவிழ்ப்பை நிகழ்த்தலாம் என்று ஜே.வி.பி. ஆராய்ந்து வருகின்ற அதே வேளையில், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட தலைவர்கள் ஐ.தே.கட்சியுடன் தாங்கள் கூட்டை ஏற்படுத்திக் கொண்டு ஜே.வி.பியினரை அரசிலிருந்து வெளியேற்றிவிடலாம் என்பதற்கான சாத்தியப்பாடுகளை ஆராய்ந்து வருகின்றனர். ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட தலைவர்கள் கடந்த வாரம் மிகவும் சுவாரஸ்யமான அனுபவங்களைச் சம்பாதித்துள்ளனர் என்று கூறப்படுகிறது. ஐ.தே.கட்சி எள்ளளவும் எதிர்பாராத வகையில் ஜே.வி.பி., ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி என்பவற்றின் தலைவர்களின் நல்லெண்ண அணுகு முறைகள் தம்மை நோக்கி அமைந்திருந்ததாக அவர்கள் கூறுகின் றனர்.

### ஜே.வி.பி. தலைவர்களைச் சந்திக்க ஜனாதிபதி மறுப்பு

ஜனாதிபதியின் காரசாரமான அறிவிப்பால் அதிர்ச்சியும் குழப்பமும் அடைந்த ஜே.வி.பி. தலைவர்கள் கடந்த திங்கட்கிழமை ஜனாதிபதியைச் சந்தித்துப் பேசுவதற்கு விரும்பினர் என்றும் ஆனால், ஜனாதிபதி தனது வேலைப்பளுவின் நிமித்தம் சந்திக்க முடியாமற்போயிற்று என்றும் சுதந்திரக் கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன. இதனால் ஜே.வி.பியினர் மேலும் குழப்பமும் கலக்கமும் அடைந்துள்ளனர். இதே வேளை, ஜனாதிபதி மாளிகையில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற அனர்த்த முகாமைத்துவக் குழுக்கூட்டத்தின் போது ஜனாதிபதி குமாரதுங்க எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடன் சுமார் இரண்டு மணிநேரம் கலந்துரையாடியதாகத் தெரிவிக்கப்பட்டது.

## சந்தர்ப்பவாதக் கோட்பாடுகளுக்கு பழக்கப்பட்ட இலங்கை அரசியல்

### ஜே.வி.பி., ஐ.தே.கவின் இலக்கு ஸ்ரீலங்கா சு.க.

கொழும்பின் அரசியல்களம் தமக்கு பாதகமாக மாறிக் கொண்டிருப்பதை உணர்ந்த ஜே.வி.பி. தலைவர்கள் ஐ.தே.கட்சியுடன் பேச்சுகளில் ஈடுபடுவதற்கு அவசரம் காட்டியதாகக் கூறப்படுகிறது. ஐக்கியதேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஜே.வி.பியுடன் கூட்டுச் சேருவதில் தமக்கு பெரும்தடைகளாக இருக்கப்போகும் விவகாரமாக விடுதலைப் புலிகளுடனான புரிந்துணர்வு உடன்பாடும் தாம் ஆட்சிக்கு வரும்பட்சத்தில் விடுதலைப் புலிகளுடன் தொடர்ந்து பேச்சுக்களில் ஈடுபடப்போகும் திட்டமும் அமைந்துள்ளன என்று கருதுகிறார். ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, ஜே.வி.பி. ஆகியனவற்றின் கூட்டை உடைத்து விடுவது ஐக்கிய தேசியக் கட்சியின் இலக்காக இருக்கிறது. அதேவேளை, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, ஐ.தே.கட்சி ஆகியன கூட்டுச் சேர்வதை தடுக்க வேண்டும் என்பது ஜே.வி.பி. யின் இலக்காக இருக்கிறது என்றும் தெரிகிறது. இவ்விரு கட்சித் தலைமைகளின் இலக்கு யாதெனில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைப் பலவீனப்படுத்தி அதனைத் தேய்வடையச் செய்வதுதான்.

### ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி. உடையுமா?

மிகவிரைவில் ஜனாதிபதி சந்திரிகா, பிரதமர் மகிந்த ராஜபக்ஷ, உல்லாசப்பயணத்துறை அமைச்சரும் ஜனாதிபதியின் சகோதரருமான அனுரா பண்டாரநாயக்கா ஆகியோருக்கிடையில் இருதரப்பு, முத்தரப்பு பூசல்கள் தோன்றும் என்றும் அது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை மேலும் இரண்டு அல்லது மூன்று துண்டுகளாக உடைத்துவிடும் என்ற எதிர்பார்ப்பும் உள்ளது. தென்னிலங்கையின் பிரதான அரசியல் சக்தியொன்றை பலவீனப் படுத்துவது எனும் நோக்கில் அங்குள்ள வேறு இரு பிரதான அரசியல் சக்திகள் ஒன்றிணைவது என்பது கூட ஒரு தற்காலிகக் காட்சிக் கட்டமாகவே இருக்கும். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி பிளவுற்று பல வீனப்படும் நிலையில், தமது நோக்கங்கள் நிறைவேறும் கட்டத்தில் ஜே.வி. பியும் ஐ.தே.கட்சியும் ஒன்றையொன்று பலவீனப்படுத்தும் சூழ்ச்சி களில் இறங்கியே ஆகும். அக் கட்டம் வர மேலும் காலம் பிடிக்கும்.

### புலிகளின் உபாயங்களைப் பொறுத்திருந்து பார்க்க வேண்டும்

இவ்வாறான பேரம்பேசல்களும், சூழ்ச்சிகளும் கொழும்பில் வடிவம் பெற்றிருக்கும்போது விடுதலைப் புலிகள் எவ்வாறான உபாயங்களை வகுத்துக்கொள்வார்கள் என்பதைப் பொறுத்தே கொழும்பின் அரசியல், வடக்கு–கிழக்கு மக்களை எப்படிப் பாதிக்கப் போகிறது என்பதைக் கூறமுடியும். கட்சிகள் உடைவதும் தேய்வதும் நினையாப் பிரகாரமாக கூட்டுக்கள் உருவாகுவதும், ஒன்றையொன்று விழுங்கி அழிக்கும் சூழ்ச்சி அரசியலும் பேரம்பேசல்களும் இழுபறிகளும் கொழும்பில் அரங்கேறுவதும் விடுதலைப் புலிகளின் அரசியல், இராணுவ உபாயங்களுக்கு எவ்வளவு தூரம் சாதக, பாதக நிலைமைகளை உருவாக்கும் என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். இதில் சர்வதேச சக்திகள் எவ்வாறு தொடர்புபடப் போகின்றன என்பது பற்றியும் கவனிக்கவேண்டும். எனினும், தென்னிலங்கை அரசியல் சகதிக்குள் அங்குள்ள சிங்கள அரசியல் தலைமைகள் ஒருவரையொருவர் புதைத்துக்கொள்வதை மிக உன்னிப்பாக அவதானித்து தமது முடிவுகளில் அவ்வப்போது மாற்றங்களையும் சீர்செய்தல்களையும் விடுதலைப் புலிகள் மேற்கொள்ளவார்கள் என்றே தெரிகிறது. எனினும் இப்போதைக்கு சுனாமிப் பொதுக் கட்டமைப்புக்கான பேச்சுக்கள் பற்றிப் பேசுவதும், ஐரோப்பாவுக்கு சுற்றுப் பயணங்கள் மேற்கொள்ளுதலும் என அவர்கள் நகருவார்கள். எனினும் தமது சிரேஷ்ட உறுப்பினர்களின் பாதுகாப்பு தொடர்பாகவும் வடக்கு – கிழக்கில் வேறு ஆயுதக் குழுக்களின் நடவடிக்கைகள் தொடர்பாகவும் அவர்கள் ‘சீரியசாக’ இருப்பதுடன் போர் நிறுத்த உடன்பாடு ஆபத்துக்கட்டத்தை நெருங்குவது பற்றியும் விடுதலைப் புலிகள் ஆட்சியில் இருப்பவர்களுக்கு அடிக்கடி உணர்த்திக் கொண்டே இருப்பார்கள் போலவும் தெரிகிறது.

### மூன்று மாதத்துள் இலங்கையரசியல் மீண்டும் கொதி பாலையாகும்!

இதேவேளை, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம், ஜனாதிபதி சந்திரிகா ஏப்ரல் மாதத்தில் பல அரசியல் மாற்றங்களை மேற்கொள்ளத் திட்டமிட்டுவருவதாகவும், நாடு இவ்வருட இறுதிக்குள் இன்னொரு பொதுத்தேர்தலுக்கு முகம் கொடுக்க வேண்டி ஏற்படலாமெனவும் கடந்த ஞாயிற்றுக்கிழமையன்று கட்சியின் மாவட்டக் குழுக்கூட்டங்கள் பலவற்றில் கலந்து கொண்டு பேசுகையில் கூறியுள்ளார். இதன் முதற்கட்டமாக ஏப்ரல் முதல்வாரத்தில் அமைச்சரவை மாற்றமொன்று இடம்பெறக்கூடிய சாத்தியம் அதிகரித்து வருவதாகவும் பிரதமர் பதவியிலிருந்து மகிந்த ராஜபக்ஷ நீக்கப்படாலாமெனவும் ஹக்கீம் குறிப்பிட்டுள்ளார். நாடாளுமன்றத்தைக் கலைத்து மற்றுமொரு பொதுத்தேர்தலுக்கு ஜனாதிபதி உத்தரவிட்டால் அத்தேர்தல் பெரும் வன்முறைக் களமாக அமையும் எனவும் ரவூப் ஹக்கீம் கூறியுள்ளார்.

ஜே.வி.பி.– ஐ.தே.க. கூட்டா? ஐ.தே.க.–ஸ்ரீலங்கா சு.க. கூட்டா? அல்லது மீண்டும் ஒரு பொதுத்தேர்தலா? என்பது அடுத்த மூன்று மாதகாலத்துள் தெரிந்துவிடும் என்று அரசியல் அவதானிகள் உறுதியாக நம்புகின்றனர்.

**டன்ஸ்ரன் லூயிஸ்**

## என்று தான் விடியுமோ?



என்ன அங்கே சத்தம்? என்று அழிந்து கொண்டிருக்கும் பழைய வீடொன்று பக்கதிலிருக்கும் தன்னையொத்த வீடொன்றை பார்த்துக் கேட்டது.

தெரியவில்லை அண்ணே? நானும் சத்தங்கேட்டு இப்பொழுது தான் விழித்தேன். நமக்கு விவரங்கூற யாரிருக்கிறார்கள்! வண்ணத்துப் பூச்சி தான் அவ்வப்போது சிறகடித்துப் பறந்து வந்து ஊர்ச் செய்திகளைக் கூறும். விவரம் அறியலாமென்றால் அதனையும் காணவில்லை. அது எப்பொழுது வருமோ என்ன செய்தி கூறுமோ? வேறுயார் எமக்கு அருகில் வருகிறார்கள்?

‘தம்பி’ எம்மை உருவாக்கியவர்களே எம்மை மறந்து பல வருடங்களாகின்றன. வண்ணத்துப்பூச்சியென்றாலும் எம்மை நோக்கிப் பறந்து வந்து செய்தி கூறுகிறதே. அந்த நன்றியை மறக்கலாமா? இந்தச் சின்னப் பூச்சிக்கு இருக்கும் அறிவு எம்மைப் படைத்தவர்களுக்கில்லையே! ம்.... இது தான் தம்பி மனித இலட்சணம்!

சரி மனித குணத்தை அலசி அசூசைப்படுத்தாமல் விஷயத்துக்கு வாங்க அண்ணே! அதோ நமது தோழன் வண்ணத்துப்பூச்சி வருகிறான் போல இருக்கிறது. வரட்டும் விவரத்தைக் கேட்டறிவோம்!...... வண்ணத்துப்பூச்சியே வருக வருக! ஏது இன்று சற்று முன்னாடி வந்து விட்டீர்களே! ஏதாவது முக்கியமான.....

முக்கிய சமாச்சாரமில்லாமல் இப்படி விழுந்தடித்துக் கொண்டு வருவேனா என்ன?

முக்கியமான சமாச்சாரமா? சொல்லுங்கள் நண்பரே! இங்கே உமது வரவை எதிர்பார்த்து பக்கத்திலிருக்கும் எனது அண்ணாவும் காத்திருக்கிறார்.

என்ன முக்கியமான சமாச்சாரம் சொல்லுங்கள் நண்பரே! என்று வண்ணத்துப்பூச்சியை உற்சாகப்படுத்தியது இரண்டாவது அழிந்து கொண்டிருக்கிற இல்லம்.

உங்களை நினைக்கப் பெருங் கவலையாக இருக்கிறது. சுனாமி அனர்த்தம் பற்றி உமக்குக் கூறினேனல்லவா? என்றது வண்ணத்துப்பூச்சி . சொன்னீர்கள் நண்பரே! நாங்கள் முடங்கிப் போனாலும் அச்சம்பவத்திற்காக மிகுந்த கவலையடைந்தோம். மறுபடியும் சுனாமி வருமா நண்பரே?’

வரத்தான் வேண்டுமென்பது என் விருப்பம்!என்றது வண்ணத்துப்பூச்சி,

‘சுனாமி அனர்த்தம் உமக்கு உற்சாகத்தைக் கொடுத்துள்ளதா’ எதற்கு சுனாமியின் மீது அத்துணை பிரீதி? என்றது அழிந்து கொண்டிருக்கும் வீடுகளிலொன்று.

அப்படிச் சுனாமி வந்தால் தான் உங்களுக்கு விமோசனங் கிடைக்கும்!இப்போதைக்கு உங்களுக்கு விமோசனங் கிடைக்குமென்ற நம்பிக்கை எனக்கில்லை.

‘ஏன் நண்பரே’

நீங்கள் பலவருடங்களுக்கு முன்னர் நடந்த யுத்தத்தால் தாக்கப்பட்டு அழிந்து கொண்டிருப்பவர்கள். உங்களைப் பற்றி அரசாங்கம் இப்போதைக்குக் கவலைப் படாதாம்! சுனாமி அலையினால் அழிந்த வீடுகளைத்தான் அரசாங்கம் உடனடியாகக் கவனிக்குமாம்.

‘யார் சொன்னார்கள்’ என்று அழாக்குறையாக் கேட்டன அழிந்து கொண்டிருக்கும் வீடுகள் இரண்டும்.

‘யாராவது கூறவேண்டுமா என்ன? புதிய வீடுகளின் நிர்மாணப்பணி ஆரம்பமாகிவிட்டது நண்பரே! என்று கவலையுடன் கூறியது வண்ணத்துப் பூச்சி’

அழிந்து கொண்டிருக்கும் இரு வீடுகளும் நீண்டபெரு மூச்சுவிட்டன.

செ.நடராசா (சுன்னாகம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org